யூன் - 2015
ජුනි - 2015

ISSN 1800-1246

அகவிழி

මනිද மேம்பாட்டின் உயிர்ப்பு மிகு கல்விக்காய்...

අගවිලි

விழி 12 பார்வை 118
විලි 12 කාණ්ඩය 118

- யாழ்ப்பாணம் தேசிய கல்வியியந் கல்லூரி பீடாதிபதி உயர் திரு சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்களுடனான நேர்காணல்.
- இலங்கை கல்வி நிர்வாக சேவை
- 21 ம் நூற்றாண்டுக்கான பாடசாலைத் தலைமைத்துவம்
- தத்துவத்திலிருந்து அறிவியலுக்கு
- ஆசிரிய உளவியலறிஞர்
- அதிபர் தரம் 111 போட்டிப்பரீட்சைக்கான வழிக்காட்டல்.

- ச. இந்திரகுமார்
- திரு.பா.தனபாலன் திரு.ப.இராஜேஸ்வரன்
- கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை
- எ. அதித்தன்
- கி. கண்ணன்
- ஏ. எல். முஹம்மட் முக்தார்
- மு. சாந்தகுமாரி
- பா. தனபாலன்

www.viluthu.org

விலை: 100/=

அகவிழிகளை பெற விரும்பும்
ஆசிரியர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

உள்ளே......

ISSN 1800-1246

01. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி உயர் திரு சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்களுடனான நேர்காணல். 4

02. பல்துறைப் பேரறிஞர் சுவாமி விபுலாநந்தர் அவர்களும் அவரது தமிழ் ஆராய்ச்சியும் 7

03. இலங்கை கல்வி நிர்வாக சேவை 10

04. சமூகமயமாக்கல் முகவர் என்ற வகையில் ஊடகங்கள் 14

05. மொழிக்கல்வியும் மொழிக் கலப்பும் 16

06. தமிழில் கணினி எழுத்துருக்கள்: வளர்ச்சியும் வகைகளும் 18

07. மாணவர்களுக்கான சரீரத் தண்டனை தடை செய்யப்படுவதுடன் பாடசாலைகளில் ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாத்தல் 21

08. 21ம் நூற்றாண்டுக்கான பாடசாலைத் தலைமைத்துவம் 23

09. தண்டனை வழங்கல் அல்லது வெகுமதியளித்தலின் பொருத்தப்பாடு 25

10. கற்றல், கற்பித்தலை மகிழ்ச்சியாக்கும் துணைக்கருவி 30

11. தத்துவத்திலிருந்து அறிவியலுக்கு 35

12. ஆசிரிய உளவியலறிஞர் 39

13. அதிபர் தரம் 111 போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டல். 43

AHAVILI

3, Torrington Avenue

Colombo 07

Tel.: 011 250 6272

E-mail: ahavili.viluthu@gmail.com

அகவிழியில் இடம்பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு, கட்டுரைகளில் இடம்பெறும் கருத்துக்கள் "அகவிழி" யின் கருத்துக்கள் அல்ல.

ISSN 1800-1246

அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

மாத இதழ்

ஆசிரியர்
ச. இந்திரகுமார்

நிர்வாக ஆசிரியர்
சாந்தி சச்சிதானந்தம்
நிறைவேற்றுப் பணிப்பாளர்(விழுது)

ஆசிரியர் குழு
க. சண்முகலிங்கம்
பத்மா சோமகாந்தன்

ஆலோசகர் குழு

பேராசிரியர் சோ. சந்திரசேகரம்
முன்னாள் கல்விப் பீடாதிபதி
கொழும்புப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் தை. தனராஜ்
ஓய்வுநிலை, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

கலாநிதி சசிகலா குகமூர்த்தி
சிரேஷ்ட விரிவுரையாளர்
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

பா. தனபாலன்
உபபீடாதிபதி, நிதி நிரவாகம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

லெனின் மதிவானம்
பிரதிக்கல்வி வெளியீட்டு ஆணையாளர்
கல்வி அமைச்சு

திருமதி. அருந்ததி ராஜவிஜயன்
ஆசிரிய ஆலோசகர்
கொழும்பு கல்வி வலயம்

பேராசிரியர் வ. மகேஸ்வரன்
தலைவர் தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

க. இரகுபரன்
முதுநிலை விரிவுரையாளர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் துரை மனோகரன்
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

கே. சாம்பசிவம்
தேசிய ஆலோசகர், கல்வி முகாமைத்துவம்

ஆசிரியரிடமிருந்து .

கல்வி முகாமைத்துவத்தில் பாடசாலை அதிபர்களின் செயலாற்றுகை, கல்விசார் மாற்றத்தினை ஏற்படுத்துவதில் பெரும் பங்காற்றுகிறது. தரம் 111 அதிபர் போட்டிப்பரீட்சை விரைவில் நடைபெறவுள்ள நிலையில் பரீட்சார்த்திகளுக்காகவும் ஏற்கனவே பணியில் இருப்பவர்களுக்காகவும் ஒரு சில கருத்துக்களை முன்வைக்கலாம் என நினைக்கின்றேன்.

பாடசாலைத் தலைமைத்துவத்திற்குத் தொலைநோக்கு அவசியம். இது நிறுவனமொன்றின் பணிசார்பான அர்த்தத்தையும் நோக்கத்தினையும் வழங்குகின்றதொரு விசையாகும். நிறுவனமொன்றினை விரைவாக மாற்றி அமைப்பதற்குத் தலைவரானவர் அடையவிரும்பும் நிலையினது தன்மை பற்றி தீர்மானங்களை இயற்றுதல் வேண்டும். பாடசாலைத் தலைமைத்துவம் பற்றியதும் எதிர்கால செயலாற்றுகை தொடர்பான பூரண விளக்கத்துடனும் பரீட்சையை எதிர்கொள்ளுங்கள். வெறும் பதவிநிலை சார்ந்த எண்ணக்கரு பணிசார்நோக்கத்தை சிதைத்துவிடும். விளைதிறனுள்ள பாடசாலை அதிபர்கள், மாணவர்களது கல்விபுகட்டற் தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்ற திடமான நம்பிக்கை கொண்டிருப்பர். மாணவர்களுடன் பணியாற்றுவது பெறுமதிவாய்ந்தது என்றும் அத்துடன் அவர்கள் பெற்ற பெறுபேறுகளுக்கு விளைவுகள் உள்ளதெனும் நம்பிக்கை கொண்டிருப்பதோடு பாடசாலைகள் மாணவர்கள் கற்பதற்காகவேயென நம்பிக்கையுடைவர்களாக இருப்பர் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நிறுவனத்தின் மிகப்பெரிய வளம் அதனுடனிணைந்த மக்கள் என்பதனை மாற்றத்தினை ஏற்படுத்திய தலைவர்கள் ஏற்றுக்கொள்வர். மாற்றத்திற்கு வழிகாட்டுகையில் நிறுவனம் ஒன்றினது மிகமுக்கியமான சொத்து மக்கள்தாம் என்பதனை தலைவரானவர் நம்புதல் வேண்டும்.

முதலாவதாக ஆசிரியர்களின் வாண்மைத்துவப் பங்களிப்புகளுக்குத் தலைவர் மதிப்பளித்தல் வேண்டும். இரண்டாவதாக மக்களைத் தொடர்புபடுத்தும் ஆற்றல் உள்ளவராக இருத்தல் வேண்டும். மூன்றாவது கூட்டுச்செயற்பாட்டு உறவுகளைப் பேணிவளர்த்தல். முதலில் உள்ளது திறன்களையும் துறைசார் அறிவினையும் ஒப்புக்கொள்கையில் அடுத்துவரும் இரண்டும், பிறரைத் தொடர்புபடுத்தி கூட்டுச்செயற்பாட்டு உறவுகளை விருத்திசெய்தல் ஆகும் நிறுவனத்தினது கூட்டுமுயற்சிகளை இலகுபடுத்தவும் தனிநபர்களதும் குழுக்களினதும் தேவைகளைப் பூர்த்திசெய்யவும் சூழல்களையும் பணிசார் வழிமுறைகளையும் பேணிவளர்த்தல் ஆகியவற்றுக்கு உதவும் தலைவரது உள்ளாற்றல்களைக் குறிப்பிடுகின்றன.

கல்விமாற்றத்திற்கான தலைவர்கள் பாடசாலைகள் பிரதேசங்கள் கோட்டங்களில் மாற்றத்தினை எற்படுத்துவதற்கான அவர்களது முயற்சியில் செயலூக்கமிக்கவர்களாக இருப்பதோடு அவர்களது நிறுவனத்தின் சூழலில் ஏற்படவேண்டிய மாற்றத்தினை முன்னெடுத்து, எதிர்பார்த்து, அங்கீகரிக்கின்றனர். அத்துடன் அத்தகைய மாற்றங்களை எதிர்கொள்வதற்கான சாத்தியமான நடவடிக்கைகளைத் தேடிக் காண்பதற்கு முன்னிற்பர். உண்மையான தலைவர்கள் சூழலைத் தொடர்ச்சியாக ஆராய்ந்து மாற்றம் எங்கு தேவையானது எனக் கணித்துக்கொள்வர். இச்செயலூக்கமிக்க தலைவர்கள் பாடசாலைகளில் மாற்றத்தினை ஏற்படுத்தும் முயற்சிகளைக் கட்டுப்படுத்தும் விதிமுறைகள், ஒழுங்குமுறைகள் மற்றும் பாரம்பரியங்களை ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள். மாற்றத்திற்கான தலைவர்கள் வெளிப்புறச் சூழலில் ஏற்படும் மாற்றங்களைப்பற்றி அவதானமாக இருந்து அம்மாற்றங்களுக்கு ஏற்றவகையில் இசைவாக நம்பிக்கைகளையும் நடைமுறைகளையும் சரிப்படுத்திக் கொள்வர். இயற்றப்பட்டு நடைமுறையிலுள்ள விதிமுறைகள் மாணவர்களது கல்வித்தேவைகளை நிறைவேற்றுதற்கு உதவாவிடின் இவர்கள் கேள்வி எழுப்புவர். விளைதிறனுள்ள அதிபர்கள் செயலூக்கம் உள்ளவர்களாயிருந்து சூழ்நிலையினை தவிர்ப்பதிலும் பார்க்க அதனை எதிர்கொள்வர், மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களையிட்டு தொடர்ச்சியாக எச்சரிக்கையுடன் இருப்பர், வாய்ப்பு எதுவும் கிடைக்காதபோது அவற்றை உருவாக்குவர் என்பதோடு கல்வியில் மாற்றத்தினை ஏற்படுத்தும் தலைவர்கள் அபாயத்தை எதிர்கொள்பவராயும் இருப்பர்.

கல்வியில் மாற்றத்தினை ஏற்படுத்தும் தலைவர்கள் அவர்களது தொலைநோக்கினைத் தெறிவாக எடுத்துக் காட்டுதலும் அத்துடன் மாணவர்களது கற்றலே பாடசாலைகளது நோக்கம் என்பதில் நம்பிக்கையும் கொண்டிருப்பதும். மனித வழங்களுக்கு பெறுமானமளித்து மதிப்பளித்தலும் அத்துடன் தொடர்பாடல் செய்வதும் செவிமடுத்தலும் அவர் பணிசார்ந்த செயலாற்றுகையை செம்மைப் படுத்தும்.

இன்றேல் வெறுமனே இது பதவிசார் பணியாகவே முடிவடையும். எனவே எதிர் காலத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த விழைவோர் தம் பணிசார்ந்த விடயங்களில் பூரண புலமையுடையவராய் இருத்தல் வரவேற்கத்தக்கதாகும்.
பரீட்சையில் சிறப்புத்தேர்ச்சி அடையவும் பணிசார்ந்த செயற்பாடுகள் வாண்மைத்துவ முடையதாக இருப்பதற்குமாக அகவிழி பரீட்சார்த்திகளுக்கு வாழ்த்துக்களைதெரிவித்துக் கொள்கிறது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி உயர் திரு சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்களுடனான நேர்காணல்



கல்வியமைச்சு 2015ஆம் ஆண்டை தேசிய கல்வியியற் கல்லூரி ஆண்டாகப் பிரகடனப்படுத்தி யுள்ளது. 06.04.2015 அன்று இது தொடர்பான விழா வயம்ப தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறுவதையிட்டு இப்பேட்டி வெளியிடப்பட்டது.

இந்நேர்காணலில் பங்குபெறும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அவர்கள் தன் ஆரம்பக்கல்வியை யா/சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்திலும் இடைநிலை, உயர் கல்வியை வேலணை மத்திய கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணிதத் துறையிலும் கற்றார். அங்கு இரு வருடங்கள் விரிவுரையாளராகவும் சேவையாற்றினார். தொடர்ந்து ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராக, கல்வி நிர்வாக சேவையாளராக, தற்போது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாகவும் (ஆசிரிய கல்வியியலாளர் சேவை தரம் I) கடமையாற்றி வருகிறார்.

❖ **2015 ஆம் ஆண்டு கல்வியமைச்சு தேசிய கல்வியியற் கல்லூரி ஆண்டாக பிரகடனப்படுத்தியமைக்கான காரணங்கள் அல்லது நோக்கங்கள் எவையாகவுள்ளன?**

நாட்டில் உள்ள ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி ஆசிரிய தேவைகளுக்கு ஏற்ப ஆசிரியர் களைத் தேசிய கல்வியற் கல்லூரிகள் உருவாக்கி வருகின்றன. "தரமான கல்விக்குத் தரமான ஆசிரியர்" என்ற வகையில் தேசிய கல்வியியற் கல்லூரிகள் "A" தர அரச நிறுவனங்களாக உயர்ந்துள்ள நிலையில் அவற்றை பௌதீக- மனிதவள அடிப்படையில் தரமாக்கி மிகச்சிறந்த தேர்ச்சியுள்ள " வாண்மையுள்ள ஆசிரியர்களை உருவாக்கி பாடசாலைகளுக்கு வழங்கும் நோக்கில் 2015ஆம் ஆண்டு தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான ஆண்டாக பிரகடனப்படுத்தி யமையின் முக்கிய நோக்கமாயுள்ளது. அத்துடன் எதிர்காலத்தில் கல்விமாணிப் பட்டங்கள் வழங்கப் படக்கூடிய வகையிலும் செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ **சமகாலத்தில் தேசிய கல்வியியியற் கல்லூரிகளின் செயலாற்றுகைகளின் போக்கு எவ்வாறானதாக வுள்ளது?**

தேசிய கல்வியியற் கல்லூரிகள் 1986 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க கல்விக் கல்லூரிகளின் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டன. அன்றைய கல்வியமைச்சரும் தற்போதைய பிரதமருமான கௌரவ திரு.ரணில் விக்கிரமசிங்க அவர்களால் இக்கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது இலங்கையில் 18 தேசிய கல்வியற் கல்லூரிகள் இலங்கை நாட்டில் இயங்கி வருகின்றன. எதிர் காலத்தில் ஆரம்ப - இடைநிலை ஆசிரியர்களின் தேவையின் நிமித்தம் ஒவ்வொரு வருடமும் வர்த்தமானி மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஆசிரிய பயிலுநர்கள் தெரிவு செய்யப்படுகின் றார்கள். ஆசிரியர்களாக பாடசாலைகளுக்கு போக முன்பே முன் சேவை பயிற்சியைப் பெற வேண்டும் என்ற உயர் எண்ணக்கரு கல்வியற் கல்லூரிகளின் செயலாற்றுகையினால் நிறைவேற்றப்படுகின்றன. இலங்கை ஆசிரியர் கல்வி வரலாற்றில் இது ஒரு சிறப்பான நிலையாகும். எந்த ஒரு முன் சேவை ஆசிரிய வாண்மைத்துவப்பயிற்சி இல்லாமல் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைக் கற்பிக்க விடுதல் பொருத்தமானதல்ல.

❖ **2015 ஆம் ஆண்டு தேசிய கல்வியியியற் கல்லூரி ஆண்டில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரின் செயற்றிட்டங்கள் எவையாகவுள்ளன?**

கல்லூரியில் வதிவிடத்துடன் ஆசிரிய பயிலுநர்கள் பயிற்சி எடுப்பதால் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் வதிவிட வசதிகள் குறிப்பாக பாதுகாப்பான குடிநீர் வழங்கும் செயற்றிட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் வறுமை மற்றும் பல காரணங்களால் கல்வியைத் தொடர முடியாத பயிலுநர்களுக்கு இந்துமன்ற உதவியுடன, வசதி படைத்தவர்களின் உதவியுடனும் சேவைகளை வழங்குதல், கல்வியமைச்சின் உதவியுடன் பெருமளவு பௌதிக வளங்கள், கற்றல் கற்பித்தல் சாதனங்கள், கணனிகள், தளபாடங்கள் கிடைக்கவுள்ளன. மேலும் நூலகம், தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள், விஞ்ஞான ஆய்வுகூடங்கள் தரமுயர்த்தப்படவுள்ளன. எல்லாப்பாடத்துறைக்களுக்குமான விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கல்வியில் தரமேம்பாட்டை ஏற்படுத்தும் ஆய்வு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், புதிய நூல்கள், ஆய்வு வெளியீடுகளும் வெளியிடப்படவுள்ளன. மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் மரக்கறி தோட்டச் செய்கை, பயன்தரு மரங்களை நாட்டும் செயற்றிட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

❖ **தேசிய கல்வியியற் கல்லூரிகள் ஆசிரியராவோருக்கு முன் சேவை பயில்வை மட்டுமா வழங்குகின்றது?**

பிரதான நோக்கம் அதுவாக இருப்பினும் தொடருறு ஆசிரியர் பயிற்சிகளையும் சேவைக்கால ஆசிரிய பயிற்சிகளையும் இடையிடையே வழங்கி வருகின்றது. ஆசிரியர்கள் தொடர்ந்து கற்றுக் கொண்டிருக்க வேண்டும். புதியவற்றை அறிய வேண்டும். புதிய ஆக்கங்களை உருவாக்க வேண்டும். இதற்கான ஏற்பாடுகளை மேலும் கல்வியமைச்சு விஸ்தரிக்க வேண்டும். ஆசிரியர் கல்வி என்பது ஓய்வு பெறும்வரை தொடருறு கல்வியாக நீடிக்கப்பட வேண்டும். ஒரு கற்றல் கலாச்சாரத்தின் முன்னோடிகளாக ஆசிரியர்களை உருவாக்க வேண்டும்

❖ **தேசிய கல்வியியற் கல்லூரிகள் எந்தெந்த நிறுவனங்களுடன் தொடர்புகளை பேணி வருகின்றன?**

நிர்வாக ரீதியாக கல்வியமைச்சுடனும் கலைத்திட்டம் கற்றல் கற்பித்தல் செயன்முறைகளுக்குத் தேசிய கல்வி நிறுவகத்துடனும் மதிப்பீடுகள், கணிப்பீட்டுப் பரீட்சைகளுக்குப் பரீட்சைத் திணைக்களத்துடனும், கற்பித்தற் பயிற்சியை பாடசாலைகளில் பயிற்சி ஆசிரியரால் மேற்கொள்ள வலயக் கல்வி அலுவலங்களுடனும் தொடர்புகளைப் பேணி வருகின்றது. எனினும் தற்போது பயிற்சிபெறும் பயிலுநர்களின் பெற்றோர்கள், சமூக சேவை பொது அரச நிறுவனங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளூர் அமைப்புக்கள் என பன்முக ரீதியான தொடர்புகள் அபிவிருத்தியை இலகுபடுத்தி கொடுத்துள்ளது. பாடசாலை சார் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், கல்விச்சுற்றுலாக் கலைத் திட்டங்கள், பொதுசன கல்வி விழிப்புணர்ச்சிகளை இன்று இலங்கை வானொலி மற்றும் தொடர்பு சாதனங்களுடனும் தேசிய கல்வியியற் கல்லூரிகள் தொடர்புகளை பேணி வருகின்றார்கள்.

❖ **நவீன ஆசிரியர் கல்வியின் தர மேம்பாடு விரிவாக்கம் தொடர்பான தங்கள் கருத்துக்கள் எவையாகவுள்ளன? அவற்றைத் தங்கள் கல்லூரியில் எவ்வாறு பிரயோகிக்கின்றீர்கள்?**

நவீன ஆசிரியர் கல்வி பல பரிணாமங்களில் விரிவடைந்து வருகின்றன. கற்பித்தல் தேர்ச்சிகள் ஆசிரியர் தொழில் வாண்மைகள், கடமைகள், தனிப்பட்ட குணநலன்கள், விழுமியங்கள் என்பன பற்றி நிலவும் புதிய தேவைகளுக்கேற்ப ஆசிரியர்களுக்கான புதிய கல்வி முறையியல்கள், வெளியீடுகள் வந்து கொண்டிருக்கின்றன. கல்வியின் புத்தாளர்களாகவும், சமூக மாற்றத்தின் முகவர்களாகவும் செயலாற்றும் ஆசிரியர்களின் வகிபாகத்தை உறுதிப்படுத்தும் பல்லூடக வெளிப்படுத்தல்கள் இன்று அவசிய தேவையாகவுள்ளன. அத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பல செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. இதற்கு பல்லூடக வெளிப்படுத்தல்களாக நவீன ஆசிரியர் முன் சேவை பயிற்சி எண்ணக்கரு பிரயோக ஆய்வுப் பிரயோகங்கள், செயலமர்வுகள், கற்பித்தல் பயிற்சிகள், நுண்முறைக்கற்பித்தல் பயிற்சிகள் பிரயோகிக்கப்படுகின்றன. கல்விக் கண்காட்சிச் செயன்முறைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

அறிவின் நுழைவாயில்கள் எனப்படும் புலன் உறுப்புக்களினூடாக உசாவல் விடுப்பை ஏற்படுத்தல், களக்கற்கை விடய ஆய்வுக்கற்கை, வினாவுதல், விமர்சனங்கள், எண்ணக்கரு படங்கள், சிந்தனைக்கிளரல்கள், மீள்போக்குகள், நவீன தொழிநுட்ப பிரயோகங்கள் என்பவற்றை புதிய பயிற்சி ஆசிரியர்களின் தரத்தை மேம்படுத்த செயற்படுத்தி வருகின்றோம்.

❖ **ஆசிரிய வாண்மை கற்பித்தல் பயிற்சியை பாடசாலைகளில் ஆசிரியபயிலுநர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள் என்ற வகையில் பாடசாலைகளுட னான உங்கள் தொடர்பு எவ்வாறு உள்ளது?**

தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியப்பயிற்சியில் உரிய பாடசாலைகள் முக்கியம் பெறுகின்றன. பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் உயர்மட்ட தொடர்புகளைப் பேணி வருகின்றோம். பயிற்சி பெறும் ஆசிரியர்கள் குறித்த பாடசாலை மாணவர் களின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக பல செயற் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். பாடசாலை ஆசிரியர் - அதிபருடன் இணைந்து பாடசாலைகளின் அபிவிருத்தி வேலைத்திட்டங் களில் பணியாற்றுகிறார்கள். குறிப்பாக மாணவர் களுக்கான கற்றல் கற்பித்தலில் ஏற்பட்டு வரும் பிரச்சனைகளுக்குத் தீர்வுகளைக் காண செயல் நிலை ஆய்வுகளை மேற்கொண்டு குறித்த பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்குப் பங்களித்துள்ளனர். இது பயிற்சி பெறும் ஆசிரியர் களின் வாண்மையை உயர்த்துவதுடன் குறித்த பாடசாலையையும் அபிவிருத்தி அடைகின்றது.

❖ **"தாங்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதியாக ஆசிரிய கல்வியியலாளர் சேவை தரம் ஐ இல் நியமனம் பெற்று உயர் சேவையை ஆற்றி வருகின்றீர்கள்" அவ்வகையில் புதிய ஆசிரிய கல்வியியலாளர்களாக நியமிக்கப் பட்டவர்களின் வாண்மை விருத்தி தொடர்பாக தங்கள் கருத்துக்கள் எவையாகவுள்ளன.?**

தேசிய கல்வியியற் கல்லூரிகளைப் பல்கலைகழகங் களுக்கு ஒப்பாக உயர்த்தும் நோக்கில் கல்லியி யலாளர்களின் வாண்மையை உயர்த்தி. அவர் களுக்கு உயர்கல்வியையும், உயர்பட்டப்படிப்புக் கான சந்தர்ப்பங்களையும் மேலதிகமாக வழங்குதலும்,ஆய்வுச் செயற்றிட்டங்களுக்கு ஊக்குவிப்புக்களை ஏற்படுத்தும் போது அவர்களுடைய வாண்மை உயரும்.அத்தோடு கல்வியியலாளர்களுக்கான வெளிநாட்டு புலமைப்பரிசில் வேலைத்திட்டங் களையும், ஆய்வுகள்,நூல்களை எழுதி வெளியிட சந்தர்ப்பங்கள் உருவாகும் போது ஆசிரிய கல்வியியலாளர்களின் தரம் உயரும் அதனைத் தொடர்ந்து கல்வியியற் கல்லூரி பயிலுநர்களின் தரமும் உயரும்.

இவ்வகையில் தரமான கல்விக்குத் தரமான ஆசிரியர் என்ற வகையில் 2015ஆம் ஆண்டு தேசிய கல்வியியற் கல்லூரி ஆண்டாகப் பிரகடனப்படுத்திய நோக்கங்களை அடைய நாமனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோமாக.

நேர்கண்டவர்கள்-
திரு.பா.தனபாலன் திரு.ப.இராஜேஸ்வரன்

பல்துறைப் பேரறிஞர் சுவாமி விபுலாநந்தர் அவர்களும் அவரது தமிழ் ஆராய்ச்சியும்

கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை
B.ED Mathematics(1st class Hons); M.A; M.Sc.; Ed.D;Ph.D.

கிழக்கு மாகாணத்தில் உள்ள காரைதீவில் 1892ஆம் ஆண்டு பிறந்து மயில்வாகனம் என்னும் பெயரில் ஆசிரியராகப் பணியாயாற்றி சர்வ மதங்களையும் போற்றும் இராமக்கிருஷ்ண சங்க துறவியான சுவாமி விபுலாநந்தர், பயிற்சிபெற்ற ஆங்கில ஆசிரியர். மதுரைத் தமிழ்ச் சங்க தமிழ்ப் பண்டிதர். லண்டன் பல்கலைக்கழகத்து விஞ்ஞானப்பட்டதாரி. இவற்றுக்கு மேலாக சமஸ்கிருதம், லத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளில் விற்பன்னர். மேலும் சிங்களம், மலை யாளம், அரேபிய மொழிகளையும் அறிந்திருந்தவர். இவ்வகையாகப் பல்துறைகளிலோ அல்லது ஒரு துறையிலோ அபூர்வ பாண்டித்தியம் பெற்றவர்களை "ஜீனியஸ்" (genius) என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவ துண்டு. தமிழில் "மேதை" என்னும் சொல் பயன் படுத்தப்படுகிறது. இச்சொற்கள் சரியாக வரையறுக் கப்படவில்லை எனினும் ஒரு துறையிலோ அல்லது. பல துறைகளிலோ அபூர்வ பாண்டித்தியம் பெற்றவரைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது.

"There is no scientifically precise definition of genius, and indeed the question of whether the notion itself has any real meaning has long been a subject of debate. The term is used in various ways: to refer to a particular aspect of an individual, or the individual in their entirety; to a scholar in many subjects"

தத்துவஞானி பேட்றன் றசலின் (Bertrand Russell) கருத்துப்படி "ஒரு தனிமனிதன் அபூர்வ பண்பு களையும் திறமைகளையும் பெற்று தான் இயங்கும் சமூகத்துக்கு பெறுமதி மிக்கவனாயின் அவன் மேதை" (genius).

(In the philosophy of Bertrand Russell, genius entails that an individual possesses unique qualities and talents that make the genius especially valuable to the society in which he or she operates).

மேதைத்தன்மையை லீவிஸ் ரேர்மன் (Lewis Terman) லேற்ரா ஹொலிங்உவேத் (Leta Hollingworth) என்னும் உளவியலாளர்கள் "ஜீனியஸ்ஸை" நுண்மதி ஈவுடன் இணைக்கிறார்கள். அதாவது ரேர்மன் என்பவர் E-140உக்கு மேல் அமைபவர் "ஜீனியஸ்" என்றும் ஹொலிங்உவேத் என்பவர் E- 180 க்கு மேல் அமைபவர் "ஜீனியஸ்" என்றும் கருதுகிறார்கள். எவ்வாறிருப்பினும் சுவாமி விபுலாநந்தர் அபூர்வ பல்துறை அறிவு பெற்றவர். செயல்களை தூர நோக்கோடு நோக்கியவர். இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளில் சரளமாகப் பேசவும், வாசிக்கவும், எழுதவும் திறமை பெற்றிருந்தவர். எடின்பறா (Edinburgh) பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் இருந்து இரண்டோ அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளில் திறமை பெற்றவர்கள் கூடிய மூளை விருத்தியும் நுண்ணறிவு விருத்தியும் அடைகிறார்கள் என்று தெரியவருகிறது.

"Researchers from the University of Edinburgh found people who spoke two or more languages had significantly better cognitive skills later in life".

"The findings indicate that those who spoke two or more languages had significantly better cognitive abilities compared to what would have been expected from their baseline test ".

இவ்வாறான பின்னணியில், மீத்திறமை பெற்ற சுவாமி விபுலாநந்தர் பண்டைய தமிழ் இலக்கியங்களில் எடுத்துரைக்கப்பெற்ற ஆழ்ந்த கருத்துக்களை உண்மைகளை சமஸ்கிருதம், ஆங்கிலம், லத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகள் கூறும் கருத்துக்க ளோடும் மேற்கே வளர்ந்துள்ள விஞ்ஞானத்தோடும், கணிதத்தோடும் இணைத்து ஒப்பிட்டு ஆய்வு செய்ய முற்பட்டார். இவரது ஆய்வு முறை, தற்கால, விஞ்ஞான அடிப்படையில் அமைந்துள்ள ஆய்வு முறைக்கு ஏற்ப பல துறைகளில் பெற்ற அறிவின் பின்னணியில் அமைந்திருந்தமையால் ஈடு இணை யற்ற ஆய்வு முறையாகவும் உரிய சான்றுகளோடு பெறப்பட்ட முடிபாகவும் அமைந்துள்ளது.

பண்டைய தமிழ் நூல்களில் பழமை வாய்ந்தது தொல்காப்பியம். இதில் அமைந்துள்ள நாடகம் தொடர்பான கூற்றுக்கள் இவரைக் கவர்ந்தன. இவற்றோடு தண்டியலங்காரம், சிலப்பதிகாரம், அகநானூறு, புறநானூறு முதலிய நூல்களில் கூறப் பெற்ற நாடகம் தொடர்பான கூற்றுக்களையும் சமஸ் கிருதத்திலும். ஆங்கிலத்திலும், கிரேக்க மொழியிலும் உள்ள கருத்துக்களையும் ஆராய்ந்து மதங்கசூளாமணி என்னும் நூலை 1926ஆம் ஆண்டு வெளியிட்டார். இந்த நூலில் இவ்வாறு கூறுகிறார்.



“திருமலி யுலகினிற் புலவராற் பாடுதற்கமைந்த இருவகை வழக்கினை ஆராயப் புகுந்த இவ்வாராய்ச்சியினை உறுப்பியல் எடுத்துக்காட்டியல் ஒழிபியல் என மூன்று இயலாக எடுத்துக் கொள்ளலாம்.” இவ்வாறு ஆரம்பித்த அடிகளார் தமிழில் ஒன்பது சுவைகள் உண்டு என்றும் இவை வீரம், அச்சம், விழிப்பு, அற் புதம், இன்பம், அவலம், நகை, நடுநிலை, உருத்திரம் ஆகியவை யென்றும் குறிப்பிடுகிறார். இவற்றில்இன்பம், நகை, வியப்பு ஆகியன அகத்திணைசார்ந்தன என்றும் இவற்றை மேனாட்டார் “கொமெடி” (comedy) என்று அழைப்பதாகவும் குறிப்பிடுகிறார். இதற்குச் சான்றாக சேக்ஷ்பியரின் நாடகங்களை மொழி பெயர்த்தும் காட்டியுள்ளார். புறத்திணையைச் சேர்ந்த வீரம் அச்சம், அற்புதம், அவலம், உருத்திரம் ஆகிய ஐந்து சுவை களை விளங்கவைக்கும் நாடகங்களை ‘றஜடி’ (tragedy) என்று மேனாட்டார் அழைப்பதாகவும் அதற்குச் சான்றாக றோமியோவும் ஜூலியற்று என்னும் சேக்ஷ் பியரின் நாடகத்தையும் தமிழில் மொழி பெயர்த்து வழங்கியுள்ளார்.

பண்டைய தமிழர் மத்தியில் பதினொரு ஆடல்கள் இருந்தன வென்றும் இவற்றின் இலக்கணம் சிலப்ப திகாரத்தில் கடலாடு காதையில் காணப்படுகிறது என்றும் கடலாடு காதை “மாயோன் பாணியும் வருணப் பூதர் நால்வகைப் பாணியும்” என்று செல்கிறது என்றும் தனது ஆய்வில் எடுத்தாண்டுள்ளார்.

நாடகத்தமிழ் ஆய்வை மதங்க சூளாமணி என்னும் நூலாக வெளியிட்டபின் இசைத்தமிழ் தொடர்பான ஆய்வில் நாட்டம் கொண்டார். இசைத்தமிழ் ஆராய்ச்சி பற்றிக் கூறும்போது “இசை எல்லா நாட்டிற்கும் பொதுவாதலின் மேனாட்டாரது இசைக்கிரமங்களைக் கூடப் பன்னிரு பாலையினுள்ளே காட்டலாம்.மேனாட்டுப் பியானோ வாத்தியத்தை முறைப்படி இசை கூட்டினால் அதிலே பழந்தமிழ்ப் பண்களை வாசித்தல்கூடும்”.தமிழர் மத்தியில் முழவு என்ற தோல் கருவியும் குழல் என்ற துளைக் கருவியும் யாழ் என்ற நரம்புக் கருவியும் இசைக்கப்பட்டன என்றும் இவை ஒருங் கிசைத்து இசைக்கப்படும்போது அது “ஆமந்திரிகை” என்று அழைக்கப்பட்டது என்றும் ஆய்வின் அடிப் படையில் எடுத்துக்காட்டியுள்ளார். “ஆமந்திரிகை” என்பது மேனாட்டார் கையாளும் ஒக்கெஸ்றாவைக் (Ochestra) குறிக்கும் என்றும் கூறியுள்ளார். மூன்று வகையான இசைக் கருவிகள் பற்றி ஆராய முற்பட்ட இவர் யாழ் பற்றிய ஆய்விலேயே முதலில் ஈடுபட்டார். இந்தஆய்வு நூலுருப்பெற்று 1947ஆம் ஆண்டு ஜுலை மாதம் 5ஆம் 6ஆம் திகதிகளில் கரந்தைச் தமிழ் சங்கத்தின் ஆதர வில் அரங்கேற்றப்பெற்றது.

விபுலாநந்தரின் யாழ் ஆராய்ச்சியில் கூறப்படும் ஆய்வு முடிபுகளை நோக்குவோம். மிகப் பழைய காலத்திலே தோன்றிய யாழ் வில்யாழ் ஆகும். இது ஏழு நரம்பு களைக் கொண்டிருந்ததென பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. இதன்பின் இருபத்தொரு நரம்புகளைக் கொண்ட பேரியாழ் தோன்றியது. ஏழுநரம்புகள் ஒரு தானமாதலால் பேரியாழிலே மூன்று தானங்கள் உள் ளன. ஏழு சுரங்களின் கூட்டத்தை இக்காலத்தார் ஒரு ஸ்தாயி என்பர். மந்தரஸ்தாயி, மத்தியஸ்தாயி, தாரஸ் தாயி என இக்காலத்தில் வழங்குவனவற்றை பண்டைய தமிழர்கள் மெலிவுத்தானம், சமன்தானம், வலிவுத் தானம் என கையாண்டனர். பேரியாழின் ஒவ்வொரு தானத்திலும் உள்ள நரம்புகளும் க ம ப த நி ச ரி என்னும் முறையாக நின்றன. பேரியாழின் பின் சீறியாழ் தோன்றியது. இது செங்கோட்டு யாழ் எனவும் வழங்கி யது. ஆசியமாலையின் கூற்றுப்படி இதற்கு ஒன்பது நரம்புகள் இருந்தன. வில்யாழும் பேரியாழும் சீறி

யாழும் சங்கத் தமிழ் நூல்களில் கூறப்படுவன. சிலப் பதிகார மணிமேகலை காலத்திலே அதாவது இற்றைக்கு 1 800 ஆண்டுகளுக்கு முன் சகோடயாழ், மகரயாழ் என வேறு இரு யாழ்கள் இருந்ததாக அறிகிறோம். சிலப்பதிகார அரங்கேற்று காதையில் குறிபிடப்படுவது சகோடயாழ். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழ்ப்பாண நாயனார் கையில் இருந்தது சகோட யாழ். சகோட யாழின் நரம்புகள் பதினான்கு. மகர யாழின் நரப்புகள் பத்தொன்பது அல்லது பதினேழு.

ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் களிகூருகின்ற இன்ப விளையாடலினுள்ளே உபயோகிக்கப் படுவ தாதலின் மகரயாழ் கண்ணுக்கினிய அழகிய தோற்றத்தினை உடையதாய் இருந்தது. சிலப்பதிகார கானல்வரிப் பாடலிலே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

சித்திரப் படத்துட்புக்கு செழுங்கோட்டின் மலர்புனைந்து மைத்தடங்கண் மணமகளிர் கோலம் போல் வனப்பெய்திப் பத்தருங்கோடும் ஆணியும் நரம்பும் என்று இத்திறத்துக் குற்ற நீங்கிய யாழ்.

அதாவது மகர யாழ் மணப்பெண் போல் அழகாய் அமைந்திருந்தது என்று அறியக்கிடக்கின்றது. உதயண காவியத்தினுள்ளே உதயணன் கையிலே கோடபதி என்னும் யாழ் இருந்ததாகக் கூறப்பட்டுள் ளது. இந்த இசையின் உதவியினாலே உதயணன் யானையை வசப்படுத்தினான் என்றும் கூறப்படுகிறது.

அதாவது பண்டைய தமிழ் மக்களின் இசைத்திறன் மனிதர்களை மட்டுமல்லாது மிருகங்களையும் உருக வைத்தது என்னும் உண்மையை இவரது ஆய்வு எடுத்துக்காட்டியுள்ளது.

தற்கால விஞ்ஞானத்தில் பௌதிகவியலில் ஒலி பற்றிய பிரிவு உண்டு. நரம்புகள் எழுப்பும் ஓசை எவ்வாறு இழுவிசைக்கு ஏற்றவாறு வேறுபடுகின்றது என்று கூறப்பெற்றுள்ளது. இந்த தற்கால விஞ்ஞான, கணித கருத்துக்களை பண்டைய தமிழ் இலக்கி யங்களில் காணப்படுவதை எடுத்துக்காட்டிய விபுலா நந்தர் பண்டைய தமிழர் கண்ட ஆயிரம் நரம்புள்ள யாழ்க்கருவியையும் அமைத்து அதை இசை வல்லு நரால் இசைத்துக்காட்டவும் செய்தார்.

விபுலாநந்தரின் தமிழ் ஆய்வைத் தொகுத்து நோக் கினால், ஐயாயிரம் ஆண்டு தொடக்கம் இற்றை வரையிலான தமிழ் மக்களின் நாடகத்திறனையும் இசைத் திறனையும் தற்கால விஞ்ஞானத்திலும் கணிதத்திலும் ஆங்கிலத்திலும் சமஸ்கிருதம், லத்தீன், கிரேக்கம் முதலிய மொழிகளிலும். உள்ள உயரிய உண்மைகயையும் இணைத்து ஏற்ற எடுத்துக் காட்டு களோடு தொகுத்தளித்த ஒப்பரிய ஆய்வுதான் விபு லாநந்தரின் தமிழ் ஆய்வு என்பது புலப்படுகிறது. இந்த ஆய்வுகளுக்கு அடிப்படையாய் உறுதுணையாய் அமைந்துள்ளன அவரது ஆழ்ந்த பரந்த தமிழ் அறிவு, ஆங்கில அறிவு, விஞ்ஞான, கணித அறிவு பன்மொழி அறிவு என்று கூறலாம். இவ்வாறு பிரமிக்கத்தக்க பல்துறை அறிவுபெற்ற சுவாமி அவர்கள் சமூகத்தின் நலனுக்காகவும் பெருமைக்காகவும் வாழ்ந்து தமது ஆராய்ச்சிச் செல்வங்களை எமக்கு விட்டுச் சென்றுள் ளார்.

உசாத்துணை:

விபுலாநந்தர், சுவாமி. (1926) <u>மதங்கசூளாமணி</u>.

மதுரை: மதுரைத் தமிழ்ச் சங்கம்

விபுலாநந்தர், சுவாமி. (1947) <u>யாழ்நூல்.</u>

கரந்தை: கரந்தை தமிழ்ச் சங்கம்

கமலநாதன், சா.இ. (1992). (தொகுப்பு ஆசிரியர்) <u>சுவாமி விபுலாந்தர் நூற்றாண்டு நினைவு மலர்)</u>˙. மட்டக்களப்பு: மட்டக்களப்பு சுவாமி விபுலாந்தர் நூற்றாண்டு நினைவு மலர் குழு.

B.B.C. News

WWW. Internet : Wikipedia free encyclopedia

பி.கு.

சுவாமி விபுலாந்தர் பற்றிய சரியான தகவல்கள்:
அவர் தனது பெயரை இவ்வாறுதான் எழுதினார்:
விபுலாநந்தர்

பிறந்த நாள்:
மே மாதம் 3ஆம் நாள் (03.05.1892) உயிர் நீத்தது: ஜூலாய் மாதம் 20ஆம் நாள் ஞாயிறு காலை 1:15 மணிக்கு 20.07.1947)

ஆதாரம்: : மட்டக்களப்பு சுவாமி விபுலாந்தர் நூற்றாண்டு விழா நினைவு மலர். ப.30

இந்த மலரில் சுவாமி விபுலாநந்தரின் பிறப்புச் சான்றிதழ் பிரசுரிக்கப்பெற்றுள்ளது. ப.218 ஆ. சுவாமி விபுலாந்தர் இயற்றிய "யாழ் நூலை இந்தியாவில் உள்ள கரந்தைத் தமிழ்ச் சங்கம் வெயியிட்டது. இந்தத் தமிழ்ச் சங்கம் வெளியிடும் "தமிழ்ப் பொழில்" என்னும் 1947 ஆண்டுச் சஞ்சிகையில், சுவாமி விபுலாநந்தரின் இழப்பையிட்டு இவ்வாறு தரப்

இலங்கை கல்வி நிர்வாக சேவை

1869 இல் பொதுப் போதனா திணைக்களம் அமைக்கப்பட்டது. அப்போது முழு நாட்டுக்குமாக மூன்று "பாடசாலை பரிசோதகர்கள்கள்" இருந்தனர். பாடசாலைகள் பெருகியதைத் தொடர்ந்து அவர்களது எண்ணிக்கையும் வகுதிகளும் படிப்படியாக அதிகரித்தன.

1966 இல் நிர்வாக ஆளணி பின்வருமாறு:

- கல்விப் பணிப்பாளர்கள்
- கல்வி அதிகாரிகள்
- மாவட்ட பரிசோதகர்கள் (பாடசாலை ஆலோசகர்கள்)
- பாடசாலை பரிசோதகர்கள்

1973 இல் நிர்வாக ஆளணி பின்வருமாறு மாற்றமடைந்தது:

- கல்விப் பணிப்பாளர் நாயகம்
- பிரதிப் பணிப்பாளர் நாயகம்
- பணிப்பாளர் பிராந்திய கல்விப் பணிப்பாளர்
- கல்வி அதிகாரி
- வட்டாரக் கல்வி அதிகாரி

தற்போது இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் பல்வேறு பதவிகளைப் பயன்படுத்தினாலும் மேற்கூறப்பட்ட பதவி அணியே சட்டபூர்வமான தாகும்.

15.10.1971 இல் இலங்கை கல்விச் சேவை (SLES) கட்டமைக்கப்பட்ட சேவை உருவாகியது. இந்த சேவை ஐந்து வகுப்புகளைக் கொண்டிருந்தது. கல்வி அமைச்சு, பிராந்திய கல்வித்திணைக்களங்கள், கல்வி வெளியீட்டுத்திணைக்களம், பரீட்சைத் திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சின் கீழிருந்த ஏனைய கல்வி நிலையங்களின் உயர் அலுவலர்கள் யாவரும் இப்புதிய சேவையில் உள்ளீர்க்கப்பட்டனர்.

வகுப்பு III – V வரையான அதிகாரிகள் இரண்டு வகுதிகளில் (பொது, விசேட) ஈர்க்கப்பட்டனர். ஐந்து

அடுக்குகள் கொண்ட இலங்கை கல்விச் சேவை 1.1.1985 முதல் இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS) ஆக மாற்றமடைந்தது. இப்புதிய சேவை ஏனைய நாடளாவிய சேவைகளைப் போல மூன்று வகுப்புகளையும் அதே சம்பளத் திட்டங்களையும் கொண்டிருந்தது. இலங்கை கல்வி சேவை உறுப்பினர்கள், தரம் I விசேட பதவியினர், திட்ட அதிகாரிகள், ஆசிரிய கல்லூரிகளின் விரிவுரை யாளர்கள் (தரம் III மற்றும் அதற்கு மேல்) ஆகியோர் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குள் ஈர்க்கப் பட்டனர். பின்னர் தரம் II விசேட பதவியினரும் ஈர்க்கப்பட்டனர். 1978 பொதுத் தேர்தலுக்குப் பின்னர் அரசியல் பழிவாங்குதலுக்கு உட்பட்டனர் என்ற பெயரில் 178 பேர் (பெரும்பாலும் ஆசிரியர்கள்) அமைச்சு பத்திரத்தின் அடிப்படையில் இச்சேவைக்குள் உள்வாங்கப்பட்டனர். 1978 ஆம் ஆண்டு இன்னுமொரு துக்ககரமான சம்பவமும் நடந்தது. பெருந்தொகையான அதிபர்கள் தமது பதவிகளிலிருந்து அகற்றப்பட்டு அப்பதவிகளில் அரசியல் செல்வாக்கு மிகுந்த ஆசிரி யர்களாக அமர்த்தப்பட்டனர். இவர்களில் இடைநிலைப் பாடசாலைகளில் பணிபுரிந்த பதிலதிபர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் V க்கு 21.7.82 முதல் பதவி உயர்வு பெற்றனர். இதனை முன்மாதிரியாகக் கொண்டு பின்வந்த அரசாங்கங்கள் அரசியல் சார்பு கொண்ட பெருந் தொகையான ஆசிரியர்களை இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குள் உள்ளீர்த்தன. இந்நியமனங்கள் யாவும் 21.7.82 முதல் பின்னோக்கி வழங்கப்பட்டதால் நிலைமை இன்னும் மோசமாகியது. இதன் காரணமாக அமைச்சரவை பத்திர நியமனங் களுக்கு முன்னர் முறையாக சேவையில் இணைந் தவர்கள் தமது பதவி மூப்பை இழந்தனர். இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பு வகுப்பு III இலிருந்து வகுப்பு II க்கு பதவி உயர்வு பெற அலு வலர்கள் ஒரு போட்டி பரீட்சைக்குத் தோற்ற வேண்டு மென்னும் ஏற்பாட்டை கொண்டிருந்தது. இப்பரீட்சை ஒரே முறை 1987ல் நடத்தப்பட்டது. 1988 முதல் தன்னிச்சை (automatic) யான பதவி உயர்வு வழங்கப்பட்டதால் இப்போட்டிப் பரீட்சை கைவிடப் பட்டது. இதில் வினோதம் என்னவெனில் தன்னிச்சை யான பதவி உயர்வு திகதி பரீட்சை மூலமான பதவி உயர்வுத் திகதிக்கு நகர்த்தப்பட்டதால் பரீட்சையில் சித்தி அடைந்தோர் சித்தியடையாதோரை விட பதவி மூப்பு குறைந்தனர்

எழுவினாக்கள்

- கல்வி இலக்குகளை விளைதிறனுடனும் வினைத் திறனுடனும் அடைவதற்கு கல்வி முகாமைத்துவத்தின் இயலளவு போதுமானதாக இல்லை. இதற்குக் காரணம் தரக் குறைவான முகாமைத்துவ, தலைமைத்துவ நடை முறைகளும் நிர்வாக ஆளணியினரின் தேர்ச்சியின்மை யும் வாண்மைத்துவம் இன்மையுமாகும்.

முகாமைத்துவ முறைமையினால் ஒருபோதும் ஒரு சீரான சேவை மூப்புதலைத் தயாரிக்க முடியவில்லை. இதனால் நியமனங்களும் பதவி உயர்வுகளும் முறையாக நடைபெறுவதில்லை.

- மிக முக்கிய பதவிகளை வகிக்கும் அதிகாரிகள் தமது கடமைகள், பொறுப்புக்கள் பற்றிய தெளிவான விளக்கம் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. நிர்வாக ஒழுங்கு விதிகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய அவர்களது அறிவு மிகவும் குறைவானதாகும்.

- பதவி உயர்வு வழங்குவதில் ஏற்படுகின்ற தாமதம் காரணமாக உயர் பதவிகளுக்குத் தேவைப்படும் நிர்வாக, தலைமைத்துவ தேர்ச்சி கொண்டவர்கள் பற்றாக் குறையாக உள்ளனர்.

- கல்வி அமைச்சிலும் ஏனைய மாகாண, நிறுவன மட்டங்களிலும் பெருந்தொகையான அதிகாரிகள் நீண்டகாலமாக உயர்மட்ட பதவிநிலைகளில் பதில் கடமை ஆற்றுகின்றனர். இது கல்வி முகாமைத்து வத்தின் தரத்தை குறைத்துள்ளது.

- இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு நியமனம் மற்றும் பதவி உயர்வுக்கான பரீட்சைகள் நேரத்துக்கு கிரமமாக நடத்தப்படுவதில்லை. இதனால் பதவி உயர்வுகள் தாமதப்படுவதோடு முறையற்ற பதவி உயர்வுகளுக்கு வழி ஏற்படுகிறது.

- இலங்கை கல்வி நிர்வாக சேவை தொடர்பான ஒரு மனிதவள தகவல் முறைமை (HRIS) இல்லை. இதனால் இச்சேவையிலுள்ள ஆளணி பற்றி அறி வார்ந்த தீர்மானங் களை மேற்கொள் வதற்கான தகவல் தளம் இல்லை.

- இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள்மீதான செயலாற்றுகை மதிப்பீடு தொடர் பான முறைமை எதுவுமில்லை. இதனால் தேர்ச்சி

இடைவெளிகளை அறிந்து பயிற்சியளித்தல், வெகுமதி வழங்கல் போன்றவற்றுக்கான வாய்ப்புகளும் இல்லை.

முன்மொழிவுகள்

இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் ஆட்சேர்ப்பு, தெரிவு, நியமனம்,, செயலாற்றுகை மதிப்பீடு, பதவி உயர்வு மற்றும் தொழில்சார் விருத்தி தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடிய வகையில் இ.க.நி. சேவையின் சேவைக் குறிப்பின் அடிப்படையில் ஒரு முழுமையான சட்டகம் விருத்திசெய்யப்பட வேண்டும். தேவையானபோது இது திருத்தப்பட வேண்டும்.

சரியான தீர்மானங்களை மேற்கொள்ளல் முகாமைத் துவம் மற்றும் தலைமைத்துவ இயலளவை மேம்படுத் தல் ஆகியவற்றுக்காக இ.க.நி.சே. அலுவலர்களுக்கான மனிதவள தகவல் முறைமை (HRIS) உருவாக்கப் படவேண்டும்.

திறமை அடிப்படையிலான ஆட்சேர்ப்பு, செயலாற்றுகை அடிப்படையிலான பதவி உயர்வு என்னும் கொள்கை இறுக்கமாகப் பின்பற்றப் படவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு புறம்பாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படக் கூடாது.

விளைதிறன்மிக்க செயலாற்றுகை மற்றும்பணிகள் தொடர்பாக சேவையில் ஒவ்வொரு பதவி வகை யினதும் வகிபங்குசார் வரையறைகள் மற்றும் விபரங்கள் விருத்தி செய்யப்பட வேண்டும். இது பதவிக்குரிய கடமைகள், பொறுப்புகள், செயலாற்றுகைசார் காட்டிகள், தகைமைகள் தேவையான அனுபவம் ஆகியவற்றைத் தெளிவாக காட்டி நிற்கும்.

இ.க.நி. சேவையிலுள்ள்ள சகல பணியாளர்க் களினதும் செயலாற்றுகை கிரமமான இடை வெளிகளில் மதிப்பிடப்பட்டு பின்னூட்டல் வழங்கப்படவேண்டும். அத்துடன் சிறந்த செயலாற்றுகை அங்கீகரிக்கப்பட்டு வெகுமதிகள் வழங்கப்பட வேண்டும்.

இ.க.நி. சேவையில் பதவி உயர்வு என்பது தமது வகிபங்குக்கு ஏற்ப உயர் தொழில்சார் தகைமை களைப் பெறுதல், செயலாற்றுகை மதிப்பீடு மற்றும் புதிய சிந்தனைகளை ஏற்றல் ஆகிய வற்றுடன் இணைக்கப்படவேண்டும். இதன் மூலம் பதவி உயர்வு என்பது மூப்பு அடிப்படையில் தானாகவே கிடைக்கும் என்னும் நிலைமை மாற்றப்பட்டு அது ஒருவரது உழைப்பின் விளைவாகப் பெற்றுக் கொள்ளவேண்டியது

என்னும் நிலைமை உருவாகும்.

இ.க.நி.சேவை அலுவலர்களது இடமாற்றம் அரசியல் அல்லது வேறு ஏதேனும் வெளிவாரி தலையீடுகள் இன்றி நடை பெறவேண்டும். ஓர் ஏற்கப்பட்ட சட்டகத்தை இறுக்கமாகப் பின் பற்றும் இடமாற்றக் கொள்கையின் அடிப்படையில் இடமாற்றம் மேற்கொள்ளப்படவேண்டும்.

நியமனப் பிரமாணங்கள் வகிபங்குகள் தற்காலிக (probation) நியமன காலம் தொடர்பான நிபந் தனைகள், மேற்பார்வை, செயலாற்றுகைக் கணிப்பீடு மற்றும் சட்ட ரீதியான அம்சங்கள் போன்றவைகளை தெரிவிக்காது அனுபவங்களைப் பதில் நியமனம் செய்வதை தடைசெய்யக் கூடிய வகையில் ஒரு தெளிவான நியமன நடைமுறை மேற்கொள்ளப்படவேண்டும்.

(தொடரும்)

நன்றி
பொதுக் கல்விக் கொள்கைகளுக்கான சட்டகம் 2009

சமூகமயமாக்கல் முகவர் என்ற வகையில் ஊடகங்கள்

ஜே.டீ.கரீம்தீன்
விரிவுரையாளர்,கலவிப்புடம், இலங்கைத்திறந்த பல்கலைக்கழகம்

புதிய தொலைத் தொடர்பு சாதனங்களின் வருகையின் காரணமாக இன்றைய உலகு ஒரு கிராமமாக அதனை விட ஒரு அறையாக கூட மாறியுள்ளது எனலாம். உலகில் எப்பகுதியில் நடக்கும் எந்த நிகழ்வாயினும்

எம்மால் நேரடியாக பார்த்து அறிய முடியுமாகின்றது. இந்த வகையில் தொலைத்தொடர்பு சாதனங்கள் மிக முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களான கணிணி, கையடக்கத் தொலைபேசிகள், Ipads, tab, ………………என்பவற்றை தொலைத்தொடர்பு சாதனங்கள் எனலாம். நமக்கு இன்று தொலைத்தாடர்பு சாதனங்கள் இன்றி வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக உலகில் ஒரு நாள் Internet தொழிற்படாமல் செயழிக்கப் படுமானால் அன்றைய அதிக நாளாந்த நடவடிக் கைகள் நடைபெறாது பாதிக்கப்படும். தடுமாறக் கூடிய ஒரு நிலை ஏற்படும் என்பதனை எம்மால் ஊகிக்க முடியும் என்பதிலிருந்து இன்றைய நவீன மனிதனும் தொலைத் தொடர்பு சாதனங்களும் எவ்வகையான இறுக்கமான பிணைப்பிணைக் கொண்டுள்ளது என்பதை எம்மால் உணர முடிகின்றது.

தொலைத்தொடர்பு சாதனங்களின் பாதிப்புக் களானது சனத்தொகையின் பெரும் பகுதியை உள்ளடக் கிய எமது இளம் சந்ததியினரை விட்டு வைக்க வில்லை. தொலைத் தொடர்பு சாதனங்கள் குறிப்பாக சிறுவர்களிலும் கட்டிளமையின ரிலும் சாதக, பாதக விளை வுகளை ஏற்படுத்தி வருகின்றது. இது இளம் சந்ததியினரின் சிந்தனை நம்பிக்கைகள், விருப்பங்கள், மனப்பாங்கு களிலும் நடை, உடை, பாவனை, என்பவற்றிலும் மாற்றங்களை ஏற்படுத்தும் அதேவேளை, ஊடகங்கள், சமூகமயமாக்கல் முகவர்களில் வீடு ,பாடசாலை, மதம்,சகபாடிக் குழு என் பவற்றுக்கு அடுத்த படியாக செயற்படுகின்றது. சில நேரங்களில் மேற்குறிப்பிட்ட முகவர்களை விட அதிக தாக்கத்தினை கட்டிளமையினரிடையே ஏற்படு கின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

ஊடகங்கள் உலகின் எப்பகுதியிலும் நடைபெறும் தகவல்களை அறிவதற்கான சந்தரப்பங்களை நாளாந்தம் அறிவினை இற்றைப்படுத்திக் கொள்ளவும் அறிவுமையச் சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்குரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தந்துள்ளது. இங்கு கோடிட்டுக் காட்ட வேண்டிய அம்சம் என்னவெனில் Internet இன் ஊடாக வியாபாரம், கல்வி மற்றும் பல நடவடிக்கைகளும் நடைபெறுவதுடன் கலாநிதிப் பட்டம் வரை Online இன் ஊடாக மேற் கொள்ளக் கூடிய வாய்ப்புக்களும் கிடைக்கப் பெறுகின்றன. இது போன்ற பல சாதகமான விளைவுகள் எமது இளம் சந்ததியினரி

டையே அவர்களின் நடத்தைகளில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தும் அதே வேளை ஊடகங்க ளானது அவர்களின் நடத்தைகளில் பாதகதான விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது.

Face book, Internet , Instryam, Whesup, Viber போன்ற புதிய எங்கும் வியாபித்திருக்கும் சமூகத் தளங்களில் இன்றைய இளம் சந்ததியினர் தமது கையடக்கத் தொலைபேசிகளின் ஊடாக ஏனையவர் களோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதினால் தாம் இதுவரை கண்டிராத வித்தியாசமான கலாசாரங்களை அறியும் வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருவதுடன் இவை அவர்களின் நடத்தைகளில் பாதிப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்றது. இந்த சமூக தளங்களின் ஊடாக நல்ல பலன்களை பெற முடியுமாவதுடன் குறிப்பாக கட்டிளமையினர் பாலியல் சார்ந்த வன்முறை சார்ந்த தகவல்களை பரிமாறிக் கொள்வது அதிகமானதாகும் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இந்த சமூகத்தளங்கள் எவ்வித வரையறைகளையும் கொண்டிராததன் காரணமாக கட்டிளைமையினரிடையே பண்பாட்டு வீழ்ச்சியின் வேகம் அதிகமாகும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

திரைப்படங்கள், கட்டிளமையினரிடையே எவ்வகையான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன என மேற் கத்திய நாடுகளில் பல ஆராய்ச்சிகள் நடாத்தப்பட்டன. 1929ம் ஆண்டு தொடக்கம் 1933ம் ஆண்டு வரை (பெயின்) Payne (Faundation) நிலையத்தின் ஆய்வில் W.W.Chartes என்பவரினால் நடாத்தப்பட்ட ஆய்வு இங்கு அடையாளப் படுத்தப்படுவது அவசியமாகும். திரைப்படங்களை கண்டுகளிக்கும் பள்ளிக் குழந்தைகளின் பொருளறிவு (Information) மனப்பாங்குகள் (Attitudes) உடல், நலம், நடத்தை (behaviours) என்பனவற்றில் திரைப்படங்கள் எவ்விதம் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன என்பது இங்கு ஆராயப்பட்டது. திரைப்படங்களில் காட்சிகளை எளிதில் பள்ளிச் சிறுவர்கள் மறப்பதில்லை எனவும் திரைப் படங்களில் காட்டப்படும் தவறான அல்லது ஓரளவு உண்மைக்கு மாறான விவாதங்களையும் உண்மைகள் என பிள்ளைகள் கருதுவதுடன் விளம்பரத்துக்கும் உண்மைக்கும் உள்ள வேறுபாடுகளை உணர்ந்து கொள்வதில்லை எனவும் அந்த ஆய்வுகளின் முடிவுகள் குறிப்பிடுவதுடன் பிறநாட்டு மக்களின் வாழ்க்கை முறைமைகளை தாழ்த்திக் காட்டுதல் அவர்களை எதிரியாக காட்டுதல் போன்ற திரைப்படங்களை பார்ப்பதன் காரணமாக பிற சமூகத்தினைப் பற்றிய தவறான எண்ணங்களை அவர்களிடையே ஏற்படுத்துகின்றன எனவும் ஆய்வு முடிவுகள் குறிப்பிடுகின்றன. ஆனால் ஒரு சில சிறந்த திரைப்படங்கள் நாட்டு மக்களிடையே நல்லெண்ணத்தை ஏற்படுத்துகின்றன எனவும் ஆய்வு முடிவுகள் குறிப்பிடுகின்றன.

படங்களில் எடுத்துக் காட்டப்படும் நடத்தை முறைகள் அறநெறியை அடிப்படையாக கொண்டிருந் தால் அவற்றால் பாதிக்கப்படும் பிள்ளைகளின் நடத்தைகள் பண்புறும் ஆனால் பெரும்பாலும் இன்றைய திரைப்படங்கள் வன்முறை சார்ந்தாகவும், நெறி கெட்டதாகவும், மேற்கத்தைய கலாச்சாரங்களை அறிமுகப்படுத்துவதுமாகவே காணப்படுகின்றன. நடிகர்களும், நடிகைகளும் எவ்வகையான நடை, உடை, பாவனைகளை திரைப்படங்களில் சித்தரிக்கின்றார்களோ அவற்றை பின்பற்றுவதில் கட்டிளமையினர் தாமதிப்பதில்லை. அவ்வகையான நடை, உடை, பாவனைகளை பின்பற்ற மறுக்கும் கட்டிளமையினர் நாகரிகமற்றவர் என்ற பட்டியலினுள் அவர்களை சேர்த்து விடுவர். பெரும்பாலும் கட்டிள மையினரினால் பின்பற்றப்படும் நடத்தைகள் பண்பாடற்

றதாக தமது கலாச்சாரத்தினை சீரழிப்பதற்காகவே காணப்படுகின்றது. எனவே தீய திரைப்படங்களை பார்க்கும் சிறுவர்கள் நடைபிறழ்வு அடைவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். திரைப்படங்களின் இறுதியில் தீயோர் தண்டிக்கப் படுவதாக சித்தரிக்கப்பட்டாலும் 3 மணி நேரத்தைக் கொண்ட திரைப்படத்தில் 2 ½ மணியாலத்துக்கு மேல் திரைப்படங்களிலே வன்முறைக் காட்சிகளும் தீயோரின் ஆடம்பரவாழ்க்கை

முறை எமது பாரம்பரிய கலாச்சாரத்துக்கு முரணான காட்சிகளுமே காட்டப்படுகின்றன. படத்தின் வில்ல னுக்கு கடைசி ஓரிரு நிமிடங்களில் மட்டுமே தண்டனை வழங்கப்படுவதாக சித்தரிக்கப்படுகின்றது.

America வில் தயாரிக்கப்படும் படங்களில் ஏதோ ஒன்றிரண்டு படங்களே நெறிவளர்ச்சிக்கு ஊக்க மளிக்கக் கூடியதாக இருக்கும் அதேவேளை, மறுபுறம் கொலைகள், காமம், கடத்தல், யுத்தம், தீய செயல் களையும் கருப்பொருளாகக் கொண்டு திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதனால் கட்டிளைமையினரிடையே அவை பல விரும்பத் தகாத மனவெழுச்சி சிக்கல்களையும் கெட்ட நடத்தைகளையும் எதிர் மறையான மனப்பாங்கு களையும் தோற்றுவிக்கின்றன. திரைப்படங்களைப் போன்றே திரைப்பட இறுவெட்டுகளும் திரைப்பட சஞ்சிகைகளும் மாணவரிடையே இச்சைகளைத் தூண்டி விடுகின்றன. America வில் அண்மையில் நடாத்தப் பட்ட ஆய்வின் முடிவின் படி America குழந்தை யொன்று தினமும் 2 – 4 மணித்தியாலங்கள் வரை ஒவ்வொரு நாளும் தொலைக்காட்சியை பார்க்கின்றது. அது 18 வயதாகும் போது குறைந்தது 8000 கொலை சம்பந்தமான காட்சிகள் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட வன்முறைக் காட்சிகளை கண்டுகளித்திருக்கும் என Media influmee on youth people என்ற கட்டுரை குறிப்பிடுகின்றது. அண்மையில் America வில் மேற் கொள்ளப்பட்ட இன்னொரு ஆய்வின் படி 95% வீடியோ விளையாட்டுக்களில் 83% விளையாட்டுக்கள் வன் முறையை கருப்பொருளாக கொண்டிருந்தது. அவற்றில் அநேகமானவை இரண்டு எளிமையான தெரிவினைக் கொண்டிருந்தது. அவை கொலை செய் அல்லது மரணி (Kill or die) 1993ம் ஆண்டு America உள வியல் சங்கத்தின் திரை வன்முறை (Scrcen Violence) வன்முறைக் காட்சிகளைப் பார்ப்பதன் காரணமாகவே வன்முறை நிகழ்வுகள் அதிகரிக்கின்றன என்கின்றது.

வியாபார நோக்கத்திற்கான விளம்பரங்கள் கட்டிளமையினர் எவ்வாறான முறையில் தமது உடைகளை அணிய வேண்டும் எவ்வகையான முறையில் உடல் கட்டமைப்பினை கொண்டிருக்க வேண்டும் எனச் சித்திரிக்கின்றது. குறிப்பாக கட்டிளமை யினர் எப்போதும் ஏனைய கட்டிளமை யினரினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதை விளம்பரங் களில் காட்டப்படு வதையே பின்பற்று கின்றனர்.

சமூகமயமாக்கல் செயன்முறையிலே குடும்பம், பாடசாலை, சகபாடிக்குழு போன்றன வகிக்கும் வகிபாகத்தினைப் போல தொலைத் தொடர்பு சாதனங்கள் வகிப்பதில்லை எனக் கூற முடியாது. கடந்த 30 வருட காலமாக தொழிநுட்ப முன்னேற்றத் தின் கண்டு பிடிப்புக்களினால் ஒவ்வொரு மனிதனிலும் சிந்தனையிலும். நம்பிக்கையிலும், மனப்பாங்கிலும், நடத்தைகளிலும் வாழ்க்கை முறைகளிலும் ஊடகங்கள் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. ஏனைய சமூக மயமாக்கல் முகவர்களான குடும்பம், சகபாடிக்குழு, பாடசாலை என்பவற்றில் தமது காலங்களை கழிக்கும் காலத்தை விட ஊடகங்களுடன் அதிகமான காலத்தை ஒருவன் இன்றைய நாட்களில் கழிக்கின்றான்.ஏனெனில் ஊடகங்கள் இன்று

மொழிக்கல்வியும் மொழிக் கலப்பும்

பேராசிரியர் ஏ.ஆதித்தன்
மொழி அறிவியல், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்

சிறந்த குடிமக்களை உருவாக்குவதே கல்வியின் அடிப்படை நோக்கம். தன்னம்பிக்கைக்கும், புத்துருவாக்கத்திற்கும் வழிவகை செய்யாத கல்வி, வெற்றிடக் கல்வியாகவே கருதப்படுகிறது. ஆனால், இக்காலத்தில் தனிமனிதப் பொருளாதார முன்னேற்றத்திற்குத் துணைபுரியும் கருவிதான் கல்வி என நம்பப்படுகிறது. மாணவர்களை, வேலைச்சந்தைக்கு பயிற்சி அளிப்பதே கல்வி பயிற்றுவித்தல் எனவும், இதற்கு பயிற்சி அளிக்கும் நிறுவனங்களே கல்வி நிறுவனங்கள் எனவும் நம்பப்படுகிறது. பல்கலைப் பட்டங்கள், அறிவின் தேடலைவிட, அகந்தையின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளன. பட்டங்களை பெருமையாகக் கொண்டாடும் நாட்டில், கல்வியின் தரம் கசப்பாகக் கருதப்படுகிறது. மொழிதான் மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்திச், சமூக அமைப்பின் அங்கமாக மாற்றுகிறது. மொழியை வெறும் கருத்துப் பரிமாற்றக் கருவியாகக் கருதியது அந்தக்காலம். மொழி என்பது ஓர் இனத்தின் அடையாளம் மொழி இல்லையேல், சமுதாய அமைப்பும், மனிதப் பண்பாடும் காணாமல் போய்விடும். தமிழ்ச் சமூகம், தாய்மொழி மீதுள்ள நம்பிக்கையை மெல்ல மெல்ல இழந்து வருவதால், தமிழ்க் கல்வியையும், தமிழ்வழிக் கல்வியையும் வணிகச் சந்தையில் மதிப்பற்றதாகக் கருதத் தொடங்கியுள்ளது. இதனால், தமிழ்க்கல்வி முற்றிலுமாகப் புறக் கணிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டு வருகிறது. உயர் மதிப்பெண் பெறுவதன் பொருட்டு, பள்ளிக் கல்வியில் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகவும், இந்தி, பிரெஞ்சு போன்ற மொழிகளை இரண்டாம் மொழியாகவும் ஏற்றுக் கொள்கிற போக்குதான் பெரிதும் காணப்படுகிறது. கல்வியில் கூட, மொழியின் அடிப்படையில் உயர்வு, தாழ்வு இங்கு கற்பிக்கப்படுகிறது.

தாய்மொழிக் கல்வியின் உண்மை நிலையை உணர்ந்து கொள்ளாமையால், ஆங்கில வழிக் கல்விமீது பெரிதும் நாட்டம் கொண்டுள்ளோம். தாய்மொழியிலேயே உயர்கல்வியையும், ஆராய்ச்சியையும் வழங்குகிற சீனப் பல்கலைக்கழகம், உலகத்தர வரிசையில், 10க்குள் இடம் பெற்றிருப்பது பெரிதும் வரவேற்கத்தக்கது. தாய்மொழியில் ஆர்வம் இல்லாதவன், தன்னம்பிக்கையையும், சிந்தனை வளத்தையும் இழந்து, அடிமை வாழ்விற்கு ஆயத்தமாகிறான் என்பது அறிவாளர்களின் கருத்து. தமிழ்க் கல்வியின் பின்னடைவிற்கு இன்றைய பாடத் திட்டமும், மக்களின் மனநிலையும் தான் பெரிதும் காரணம். இலக்கியக் கல்வியையே மொழிக்கல்வியாகக் கருதி, பழமையைப் பெரிதும் பாதுகாக்கும் பாடத்திட்டத்தால், பயன்பாட்டுத்தமிழ் மறக்கடிக்கப்பட்டு வருகிறது. இதனால், மாணவர்களிடம் கருத்துப் பரிமாற்றத் தமிழ் காணாமல் போய்விட்டது. புதிய தேவைகளையும், அனுபவங்களையும் தெரிந்து கொள்ளும் வகையில், இயல்பான கருத்துப் பரிமாற்றத்திற்கு முதலிடம் அளிக்கும் பாடத்திட்டம் விரைவாகத் தேவைப்படுகிறது.தமிழ்மொழி சார்ந்த பண்பாட்டுப் பார்வை, மாணவர்களிடம் உருவாகும் வகையில் கல்வித்திட்டம் அமையாவிட்டால், தமிழன் தன் அடையாளத்தை இழக்க நேரிடலாம். தாய்மொழியில்

முழுமையான ஆளுமை இருந்தால்தான் பிறமொழியில் ஆளுமையினை வளர்க்க முடியும். மொழிக்கல்வியில் ஒரு மாணவன் சிறந்து விளங்கினால் தான் அம்மொழி வழியாகக் கற்கும் பிற பாடங்களையும் முழுமையாகப் புரிந்துகொள்ள இயலும் என்பது விவாதத்திற்கு அப்பாற்பட்ட அறிவியல் உண்மை. தமிழையும், ஆங்கிலத்தையும், 14 ஆண்டுகள் கற்ற பின்னரும், இவ்விரு மொழிகளிலும் கருத்துப் பரிமாற்றத்திறனும், என்று கூறுவது வேதனைக்குரியது. வணிக நோக்கில் மக்களை ஈர்ப்பதன் பொருட்டுக் கலவைத் தமிழைக் கற்பிப்பதில், சில மின்னணு ஊடகங்களின் பங்கு மகத்தானது. வருவாய் சார்ந்த அணுகு முறையால், உலகப் பொதுமொழியாகக் கருதப்படும் ஆங்கிலத்தின் மீது கொண்டுள்ள விருப்பின் காரணமாக, தமிழ்ச் சொற்களான வடையையும், தோசையையும், வடமொழி யாளர்களுக்காக வடா,தோசா என்று கூறும் போக்கு

படைப்புத் திறனும் இன்றி,மாணவர்கள் அல்லல்படுவதைப் பார்க்கும்போது, நம் மொழிக்கல்வி யின் நிலையை அறிந்து கொள்ள முடிகிறது.இக் காலத்தில்மாணவர் களும், கற்றோரும் பெரிதும் ஆங்கிலம் கலந்ததமிழிலேயே உரையாடுகின்றனர். எந்த நிலையிலும் நம் பள்ளிகளும், கல்லூரிகளும் ஆங்கிலம் கலந்த கலப்புத்தமிழைக் கற்றுக் கொடுப்ப தில்லை. இவர் களைக் குறை கூறுவதைத் தவிர்த்து, இந்தச் சூழல் தோன்றுவதற்கான காரணத்தைக் கண்டறிந்து ஆவன செய்வது நலம் பயக்கும். தமிழ் மொழித்திறன்களில் சிறப்பாகப் பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களின் பற்றாக்குறையும், பாடத்திட்டத்தில் பயன்பாட்டுத்தமிழ் பற்றிய பாடங்கள் இல்லாமையும், மாணவர்கள், கலவைத்தமிழைப் பயன்படுத்த அடித்தளம் அமைத்துள்ளன.

எந்த ஒரு வகுப்பிலும் மாணவர்களுக்கு எழுத்துகளின் ஒலிப்புமுறை பற்றிய பயிற்சியை வழங்காமல், மாணவர்கள் எழுத்துகளைத் தவறாக ஒலிக்கின்றனர்

நகைப்புக்குரியது. தமிழ்மொழி பற்றிய தாழ்வு எண்ணம் மக்களிடம் நீடிக்குமானால், எதிர்காலத்தில் மாணவர் கள் தமிழைக் கற்றுக் கொள்வதற்குத் தங்கள் இல்லங்களில் சிறப்பு வகுப்பு ஏற்பாடு செய்ய வேண்டிய நிலை உருவாகிவிடும். ஆங்கிலத்தையோ, இந்தியையோ ஒரு மொழியாகக் கற்பது, பெரிதும் வரவேற்கத்தக்கது. ஆனால், இம்மொழிகள் வழியாகக் கற்றால் தான் வேலைவாய்ப்பு பெருகும் என்ற புனைந்துரையைப் பொய்யுரையாக்க வேண்டியது கல்வியாளர்கள் கடமை. தமிழ்க்கல்வி, தமிழகத்தில் புறந்தள்ளப்படும் நிலையை மாற்ற, தொலைநோக்குச் செயல்திட்டங்கள் உருவாக்கப்பெற வேண்டும். ஆங்கில மொழிக்கு மொழி முதன்மையிடம் அளிக்கும் தமிழர் களின் மனப்போக்கு மாறிடும் நிலையில், கலவைத் தமிழ் தன் இறுதியைச் சந்திக்கும்.

தமிழில் கணினி எழுத்துருக்கள்: வளர்ச்சியும் வகைகளும்

- கி. கண்ணன்.

முன்னுரை:
தமிழ் மொழியை கணிப்பொறிக்கும் இணையத்திற்கும் கொண்டு செல்வதில் எழுத்துக்களுக்குப் பெரும் பங்கு உண்டு. சைகைளாலும் மெய்ப்பாடுகளாலும் வளர்ந்த தமிழ்மொழி இன்று இணையத்தில் பலவாறு பயன் படும்படி உயர்ந்துள்ளது. கணினியில் ஆங்கிலத்தில் மட்டுமே தட்டச்சு செய்யமுடியும், ஆங்கிலம் தெரிந் தால் மட்டுமே கணினியைப் பயன்படுத்த முடியும் என்ற நிலை முற்றிலுமாக மாறி இன்று தாய்மொழியான தமிழிலேயே தட்டச்சு செய்யலாம் என்ற நிலைக்கு தரம் உயர்த்தப்பட்டு வளர்ந்து கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட உயர்தனிச் செம்மொழியை கணினியிலும் இணையத்திலும் பதிவேற்றம் செய்யும்பொழுது தமிழ் எழுத்துருக்களின் வரலாற்றினையும் வகைகளையும் விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

மொழியும் எழுத்தும்:
மனிதன் தோன்றி மொழி தோன்றாத பொழுது தன் உள்ளத்தில் தோன்றிய எண்ணங்களை மெய்ப்பாடு, சைகைகள், ஒலிகள், ஓவியங்கள் ஆகியவற்றின் மூலமாக பிறருக்குத் தெரிவித்தான். அதுவரை ஊமை மொழிகள் (Dumb Language) என்றனர் என்று முதல் மொழிக்கு விளக்கமளிக்கிறார் தோ. பரமசிவம். இம்முதல் மொழியினைத் தொடர்ந்து பேச்சுமொழியாக மாறியதும் எழுத்துக்கள் உருவாகி வளர்ச்சியடைந்தன. கல்லெழுத்து, பிராமி எழுத்து, வட்டெழுத்து, நாகரி எழுத்து, தமிழி எழுத்து என்று உருமாறி தற்போதுள்ள தமிழ் எழுத்து என பலவாறு மாறிவந்திருப்பதை தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சியில் காண முடிகிறது.

கணினி குறியீட்டு முறை:
கணினியில் அச்சேற்றப்படும் எழுத்துக்கள் எம்மொழி எழுத்துக்களாயினும் அவை 0,1 என்ற எண்களைக் கொண்டே கணினி இயங்குகின்றது. 'கணிப்பொறி என்பது கணிப்பானாக மட்டுமே பயன்படும் போது எவ்வித சிக்கல்களும் தோன்றுவது இல்லை. மாறாக, அவற்றை எழுத்து வடிவங்களுக்குச் சேமிக்கும்பொழுது ஒவ்வொரு எழுத்துக்கும் எண்களை நிர்ணயிக்க வேண்டியிருக்கும். இம்முறையே குறியீட்டு முறை (Coding) எனப்படும்.' [1] இவற்றை திரையில்எழுத்துக் களாக காண்பதற்கு எழுத்துருக்கள் (Font) தேவைப்படு கின்றது. இத்தகைய எழுத்துருக்களை பெறகுறியீடுகள் அவசியமாகின்றது. ஒரே குறியீட்டைக் கொண்டு ஒரு எழுத்தைத்தான் உருவாக்க முடியும் என்பதாலும் தமிழில் அதிக எழுத்துக்கள் இருப்பதாலும் முழுமை யாக எழுத்துக்களைப் பயன்படுத்துவது சிரமமாகவும் இருந்தது.

தமிழில் எழுத்துரு தொடர்பான மென்பொருள்களின் வளர்ச்சியினால் இன்று இத்தகைய சிரமங்கள் சரிசெய்யப்பட்டாலும் சில தவிர்க்க முடியாத சிக்கல்கள் இருக்கவே செய்கின்றன. வடமொழி எழுத்துக்களையும் தமிழ் எழுத்துக்களைச் சேர்த்து தட்டச்சு செய்யும் நிலையில் இதனை உணரலாம்.

எழுத்துருக்களின் வளர்ச்சி:
கணினியில் இடும் கட்டளைகளை எழுத்துக்களாக மாற்றிக்காட்ட எழுத்துருக்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவை 7 பிட்டு(எ.கா.1000001), 8 பிட்டு (00001111) என்ற இரும எண் குறியீட்டு முறையில் உள்வாங்கிக் கொள்ளப்பட்ட கணினி மொழிகளாகக் கொள்ளப் பட்டன. கணினி மொழியில் ஒவ்வொரு எழுத்தும் ஒரு பைட்டாகக் கணக்கிடப்படுகிறது. ஆங்கில எழுத்திற் கான எழுத்துரு வடிவத்தினை ஆஸ்கி ASCII (American Standard Code for Information Interchange) என்று அழைக்கப்பட்டது. இது 7 பிட்டு அளவுள்ளதாகக் இருந்தது. இதனைத் தொடர்ந்து 8 பிட்டு அளவிற்கு விரி ஆஸ்கி அமைப்பு உருவாக கப்பட்டது. அட்டவணையில், ஆங்கில எழுத்துக்கள் போக மீதமுள்ள 128 – 255 வரையிலான இடங்களில் இந்திய மொழிகளின் எழுத்துக்களை ஒன்றிணைத்து பொதுவான முறை உருவாக்கப்பட்டது. இதற்கு இஸ்கி (ISCII – Indian Standard Code for Information Interchange) எழுத்துரு எனப் பெயரிட்டனர். இத் தமிழ் விசைப்பலகையில் எழுத்துருக்களைக் கொண்டு வருவதற்கு முதன்மையாக அமைந்தது. இதில் மென் பொருள் பொறியாளர்களின் உதவியுடன் உலக தமிழ றிஞர்கள் வடிவமைக்கப்பட்ட தமிழ் வடிவ எழுத்துக கள் பயன்படுத்தப்பட்டன. தமிழ் லெசர், அணங்கு, ஆதமி, ஆதவின், திருவின், மயிலை, அஞ்சல், சரஸ்வதி, கணியன், வானவில் போன்ற எழுத்துருக்களைப் வல்லுனர்கள் பலரும்

உருவாக்கினர். இதனால் ஒருவர் தட்டச்சு செய்த தகவல் அந்த எழுத்துரு படிப்பவரிடம் இருந்தால் மட்டுமே அவ்வெழுத்து திரையில் தோன்றும் நிலை உருவானது. இது பெரும் குழப்பத்தினையே உருவாக்கியது. ஆகவே, தமிழ் எழுத்துருக்களை முறைபடுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் டிஸ்கி (TSCII - Tamil Standard Code for Information Interchange) என்ற முறை உருவாக்கப்பட்டது. இது தமிழ்மொழியில் ஏற்பட்ட அடுத்தகட்ட வளர்ச்சியைக் குறிக்கும்படி அமைந்தது. தற்போது நடைமுறையில் யுனிக்கோடு முறை அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

"உலக அமைப்பாகிய UNICODE குழுமத்தின் முயற்சியால் 16 பிட்டு அமைப்பில் பன்மொழிக் குறியீட்டு முறையும் தோன்றியது. அந்த யுனிக்கோடு அமைப்பில் இந்திய மொழிகளுடன் தமிழும் இருந்தது". 128 இடங்களில் தமிழ் உயிர்எழுத்துக்கள், அகர மேறிய உயிர்மெய் எழுத்துக்கள், ஆய்த எழுத்து பிற உயிர் மெய் எழுத்துக்களின் துணைக் குறியீடுகள் ஆகியன இடம்பெற்றன."[2] இவ்வாறு தோற்றுவிக்கப் பட்ட எழுத்துருக்கள் மேற்கூறிய பல பெயர்களுடன் வெளியாயின.

ஆங்கிலத்தில் உள்ளது போன்று தமிழிலும் ஒரே எழுத்துரு குறியீட்டு முறை பயன்படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன், "இரண்டு உருக்குறியீட்டு முறைகளைத் தமிழக அரசு அங்கீகாரம் செய்து தரப்படுத்தியது. இந்திய மொழிகளில் தமிழில் மட்டுமே மாநில அரசின் எழுத்துத் தரப்பாடு செய்யப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது."[4] இவை, 1. டாம் (TAM ' Tamil Monolingual Encoding) என்னும் எழுத்துரு தமிழ் எழுத்துக்களுக்காவும் 2. டாப் (TAB ' Tamil Bilingual Encoding) என்னும் எழுத்துரு தமிழ் " ஆங்கில எழுத்துக்களை தட்டச்சு செய்வதற்காகவும் உருவாக்கப்பட்டது. யுனிக்கோடு முறையில் TAM, TAB போன்ற எழுத்துக்கள் பயன்படுத்தக்கூடியவை.

தமிழ் எழுத்துரு வகைகள்:
தமிழில் டிஸ்கி, யுனிக்கோடு, டாம், டாப் போன்ற எழுத்துருக்கள் அரசின் பங்களிப்புடன் வெளியாயின. தனி நபர்களாலும் குழுக்களாலும் பல வடிவங்களில் எழுத்துருக்கள் இன்றளவும் உருவாக்கப்பட்டு வருகின்றன. இவை விசைப்பலகையின் அமைப்பிற் கேற்ப விண்டோஸ், லினக்ஸ், மேக்கின்தோஸ் போன்ற இயங்கு தளங்களில் பயன்படும்படி அமைக்கப்பட்டிரு கின்றன.

மயிலை
1985 ஆம் ஆண்டில் கு. கல்யாண சுந்தரம் அவர்களால் "மயிலை" எழுத்துரு உருவாக்கப்பட்டது. இதில், தமிழ்க் குறியீடு இல்லாமல் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்வதன் மூலம் தமிழ் எழுத்துருக்களைப் பெற முடியும். உ.ம். a என்பது அ என்றும், aa/A என்பது ஆ என்பதையும் குறிப்பதாக அமைந்துள்ளது.

முரசு அஞ்சல்
1986 இல் முத்து நெடுமாறன் என்பவரால் உருவாக்கப் பட்டது அஞ்சல் எழுத்துரு. இது எழுத்துருவை மட்டுமே கொண்டிராமல் எழுதி, மின்னஞ்சல், செயலி, விசைப்பலகை போன்ற வகைகளும் இடம்பெற்றுள்ளன. இன்றும் ஆண்ட்ராய்டு பேசிகளில் பயன்படும்படி Aplication ஆக பயன்படுத்தும்படி உருவாக்கப் பட்டுள்ளது. இதில், கு என்ற எழுத்துருவிற்கு f+c என்றும், சோ என்பதற்கு r+X என்றும் எழுத்து முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

கீ மேன்
செந்தமிழ் எழுத்துரு என அழைக்கப்படும் கீமேன் எழுத்து வடிவம் பெரும்பாலும் அச்சக பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. டாவ்லெட் சாப்ட் அமைப்பி னரால் உருவாக்கப்பட்ட இது 285 விதமான எழுத்துரு வடிவங்களைக் கொண்ட பன்முக வடிவமாகும். பெரும்பான்மை யுனிக்கோடு வடிவத்துடன் ஒத்திருந் தாலும் இதில் சில எழுத்துருக்கள் விசைப்பலகையின் அமைப்பில் மாற்றம் பெற்றுள்ளன. கீமேன், விதவித மான எழுத்துருக்கள் வடிவத்தில் புத்தகம் உருவாக்கம் போன்ற அச்சுப் பணிக்கு இது உகந்ததாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

ஏ. கலப்பை
தமிழ் இணையதளத்தில் பலராலும் பயன்படுத்தப்பட்ட எழுத்துருக்களைக் கொண்டது இ. கலப்பை எனப்படும் எ.கலப்பை. இதில் ஐந்து விதமான எழுத்துருக்கள் காணப்படுகின்றன.

1. ஆங்கில ஒலியியல் முறை 2. பாமினி, 3. தமிழ் 99, 4. தட்டச்சு முறை, 5. இன்ஸ்கிரிப்ட் என்ற ஐந்து வகையான எழுத்துரு வடிவங்களைக் கொண்டது.

NHM எழுதி
தமிழ் எழுத்துருக்களில் இன்று பலரிடமும் பயன் படுத்தப்படுவதாக இவ்வெழுத்துரு அமைந்துள்ளது. கூகுள் குரோம், நெருப்புநரி (Firefox), ஒபேரா போன்ற எல்லாவிதமான இயங்குதளத்திலும் இவ்வமைப்பு பயன்படுகின்றது. தமிழிலிருந்து கீழே குறிப்பிட்ட இந்திய மொழிகளுக்கு எழுத்துக்களை மாற்றும் வசதி இதில் உள்ளது. இதனை இணையத்திலிருந்து இலவச

மென்பொருளாகப் தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

1. Alt + 0 – சாதாரண விசைப்பலகை எழுத்துருவையும்
2. Alt +1 – ஒருங்குறி தமிழ் 99 எழுத்துருவையும்
3. Alt + 2 – ஒருங்குறி தமிழ் ஒலியியல் முறையையும்
4. Alt + 3 – ஒருங்குறி பழைய தட்டச்சு எழுத்துரு வையும்
5. Alt + 4 – ஒருங்குறி தமிழ் பாமினி எழுத்துருவையும்
6. Alt + 5 – ஒருங்குறி தமிழ் இன்ஸ்கிரிப்ட் முறையினையும் கொண்டு காணப்படுகிறது. ஒருங்குறி முறையில் அமைந்திருப்பதால் அனைவராலும் பயன்படுத்தும்படி உள்ளது. இந்த எழுத்துருவில் தமிழ், அசாம், பெங்காலி, குஜராத்தி, ஹிந்தி, கன்னடம், மலையாளம், மராத்தி, பஞ்சாபி, சமஸ்கிருதம் போன்ற பத்து இந்திய மொழிகளில் பயன்படுத்தப்படுகின்றன. பொன்மடல், பொன்மொழி எழுத்துரு ஆண்ட்ராய்டு, விண்டோஸ் என்ற இருவேறு இயங்கு தளங்களில் தட்டச்சு செய்யும் வசதி. காலத்திற்கேற்ப புதுமை என்ற விதத்தில் பல புதிய வசதிகள் இந்த எழுத்துருவில்காணப்படுகின்றன.

1. தவறாக எழுதினால் ல, ர, ன ஒலிமாற்றச் சொற்களையும் சந்திப்பிழை திருத்தப்பட்ட சொற்களையும் இரு சொல் இணைந்ததையும் உடனுக்குடன் காட்டும்.
2. சொற்பிழைகளை உடனுக்குடன் திருத்துவதுடன் திருத்துவதற்கு பல நிறங்களைக் காட்டுகின்றன.
3. தமிழ்99, தட்டச்சு, பாமினி, ஒலிமாற்றம் போன்ற தட்டல் அமைப்புகளுடன் கே12 என்னும் வு 9 போன்ற ஒரு மிக எளிய புதிய முறை இதன் சிறப்பு. 9 விசை களில் செயல்படும் இதைக்கற்க 10 நிமிடங்கள்போதும்.
4. ஆங்கிலத் தட்டச்சு இருப்பதால் இருமொழிகளுக்கும் பொன்மடல் ஒன்றேபோதும்.
5. யூனிக்கோடு, டேம், டேப் குறியீடுகளில்உள்ளிடலாம்.
6. புதிய பெயர்ச்சொற்களை அகராதியில் சேர்க்கலாம்
7. சுயதிருத்த வசதியால் ஒன்றிரண்டு எழுத்துக்களை எழுதியே பல சொற்களைச் சேர்க்கலாம். [3] இது போன்ற பல சிறப்பியல்புகளைக் கொண்டதாய் பொன்மடல், பொன்மொழி எழுத்துருக்கள் அமைந் துள்ளது.

மென்தமிழ்

சென்னைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் இருந்து ஓய்வு பெற்ற தெய்வசுந்தரம் அவர்களால் உருவாக்கப்பட்ட மென்தமிழ் எழுத்துரு கணினியில் தமிழ் மொழியியல் தொடர்பாகக் கொண்டுவரப்பட்டது. இம்மென்பொருள், "தமிழ் ஆவணங்களை உருவாக்கி, அவற்றின் மொழி அமைப்பைச் சீரமைத்துப் பதிப்பிக்கும் அனைத்துக் கருவிகளையும் இது உள்ளடக்கியுள்ளது. கணினித் தமிழின் வளர்ச்சியையொட்டி தமிழ்மொழிக் கருவிகள் (சந்திப்பிழை திருத்தி, சொற்பிழை திருத்தி, அகராதிகள்) தொடர்ந்து மென்மேலும்

செழுமைப்படுத்தப்படும்."[4] என்ற உயரிய நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் சில...

அழகி – ஆங்கிலத்தில் தட்டச்சு செய்து தமிழில் எழுத்துருவை காணலாம்.

ஸ்ரீலிபி – தமிழ் ஒருங்கறி, தமிழ் 99, தட்டச்சு முறை போன்ற எழுத்துருக்களில் பயன்படுத்தலாம்.

கம்பன் – விசைப்பலகையுடன் கூடிய ஒருங்குறி, தமிழ் 99, தட்டச்சு முறை டேம், டேப் போன்றவற்றிற்கு உரு மாற்றி போற்ற எழுத்துருக்களில் பயன்படுத்தப்படுகிறது.

வாணி – எழுத்துப்பிழை திருத்தி.

நாவி – சந்திப்பிழை திருத்தி

சுரதா – வலைக்கு உகந்த எழுத்துரு

கண்டுபிடி – வலை எழுத்திற்கு உரியது

போன்றவனவற்றையும் குறிப்பிடலாம்.

முடிவுரை:

தமிழ் எழுத்துரு, கணினி பயன்பாட்டிற்கு என தினந்தோறும் புதுப்புது மாற்றங்களுடனும் வடிவங்களுடனும் இன்றளவும் மென்பொருள்களை உருவாக்கி வருகின்றனர். ஒருங்குறி, தமிழ் 99, தட்டச்சு முறை, பாமினி, இன்ஸ்கிரிப்ட் முறைகளிலிருந்து இன்று அழகி, வாணி, நாவி, பொன்மடல், மென்தமிழ், சுரதா, கண்டுபிடி போன்ற மென்பொருள்களாலும் கணினியில் மட்டுமல்லாது இணையத்திலும் தமிழினை எழுத்து வடிவம் மாறாமலும் பிழையில்லாமலும் காணக்கிடைக்கின்றது. அகராதிகளைப் பயன்படுத்தி தட்டச்சு செய்யும் முறையும் தற்போது வழக்கத்தில் உள்ளது. இத்தகைய எழுத்துருக்கள் தமிழ் மொழியினை அடுத்தத் தலைமுறைக்கு எவ்வித சேதமுமின்றி முழுமையாகக் கொண்டுபோய் சேர்க்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

சான்றெண் விளக்கம்:

1. www.pathivugal.com, கணத்தமிழ், தமிழ் எழுத்துருக்கள் வடிவமைப்பும் சிக்கல்களும்
2. முனைவர் மு. பொன்னவைக்கோ, இணையத் தமிழ் வரலாறு, ப. 10
3. www.Learnfunsystems.com./Products. பொன்மடல்
4. www.lingsoftsolutions.co

மாணவர்களுக்கான சரீரத் தண்டனை தடை செய்யப்படுவதுடன் பாடசாலைகளில் ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாத்தல்

ஏ.எல்.முஹம்மட் முக்தார்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

கல்வி நவீனமாக்கப்பட்டுள்ள ஒரு நாட்டின் மாணவர்களுக்கு சரீர தண்டனை வழங்குவது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. ஒரு தண்டனையானது பாடசாலைக்குச் செல்வதிலிருந்து பிள்ளைகளை நிறுத்தக்கூடிய அல்லது பெற்றோரின் மனதில் பாடசாலை மீது வெறுப்பை உண்டாக்கக்கூடிய சரீர தண்டனை எதுவும் மாணவர்களுக்கு வழங்கப்படலாகாது. இதுபற்றி 1961 ஆம் ஆண்டில் 26 ஆம் இலக்க கல்வியமைச்சின் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு ஆசிரியரின் தகுதியின்மையை நிருபிப்பதற்கு சரீர தண்டனை வழங்குவதொன்றே போதுமான சான்றாகும். மாணவர்களுக்கிடையே ஒழுங்கை நிலை நாட்டவும் கல்வியில் அவர்களின் கவனத்தைப் பெறவும் ஒரு ஆசிரியர் சரீர தண்டனையை ஆயுதமாகப் பயன்படுத்தக்கூடாது.

இச்சுற்றிக்கையில் சரீர தண்டனையை தலைமை ஆசிரியர்கள் மாத்திரமே விதிக்க வேண்டும் எனவும், பெண் பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் ஒரு பெண் ஆசிரியையே சரீர தண்டனையை விதிக்கலாம் ஆண் ஆசிரியர் பெண் பிள்ளைகளுக்கு சரீர தண்டனையை வழங்கக்கூடாது எனவும், சரீர தண்டனை விதிக்கப்படும்ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதற்காகவைக்கப்பட்டிருக்கும் குறிப்புப் புத்தகத்தில் எதற்காக தண்டனை வழங்கப்படுகிறது என்பது பற்றியும், வழங்கப்படும் அடிகளின் எண்ணிக்கை பற்றியும் குறிப்பிடப்படல் வேண்டும். மாணவர்களுக்கான அடிகளின் எண்ணிக்கை நான்கிற்கு மேற்படலாகாது என்பதுடன், பாடசாலை ஆசிரியர் மேசையின் மீது பிரம்பை வைத்திருக்கக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் கல்வியமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்த போதும் அதன் பின்னர் உருவாக்கப்பட்ட சிறுவர் உரிமை, சிறுவர் பட்டயம், ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் சாசனம் என்பவற்றை பின்பற்றி ஐரோப்பிய நாடுகளில் சிறுவர்களுக்கு வழங்கப்படும் உரிமைகள் அவர்களுக்கான பாதுகாப்பு என்பவற்றை கருத்திற் கொண்டு கல்வியமைச்சு மாணவர்களுக்கான சரீர தண்டனையை முற்றாகத் தடை செய்துள்ளதுடன் 1961 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சுற்றறிக்கையை இரத்துச் செய்து கல்வியமைச்சு 2005 ஆம் ஆண்டு பாடசாலைகளில் “ஒழுக்க விழுமியங்கள்“ என்ற தலைப்பில் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டு பாடசாலை மட்டத்தில் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியது. அதில் பின்வரும் விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றை ஆசியரியர்களும் அதிபர்களும் கைக்கொண்டு ஒழுகுவது மிகவும் பயனுடையது. மாணவர்களுக்கு பாடசாலை மட்டத்தில் ஒழுக்க விழுமியங்களைப் புகட்டவேண்டியது பாடசாலை ஆசிரியர்களாகும். கல்வியாளர்களின் கருத்துப்படி ஒரு பிள்ளை ஒரு ஆசிரியரை தனது

குருவாக வசீகரித்துக் கொண்டு அவரைப்போல் தன்னை மாற்றிக்கொள்ள முற்படுகிறது. அவ்வாறாயின் ஒரு ஆசிரியர் பாடசாலை மட்டத்திலும், வெளிமட்டத்திலும் மிகவும் ஒழுக்கசீலராக இருக்க வேண்டியது அவசியமாகிறது. ஒரு ஆசிரியரின் நடை, உடை, பாவனை என்பன உயர்ந்த மட்டத்தில் நாகரீகமான முறையில் பேணப்பட வேண்டும். ஆசிரியரின் உடை, அவரது நடத்தைகள் மிகவும் மோசமாக இருப்பின் அவரால் வழிநடாத்தப்படும் மாணவர்கள் சமூகத்தில் கெட்டவர்களாகவும், வழி தவறியவர்களாகவும் உருவாகுவதற்கு வழியேற்றப்படும். விசேடமாக பெரிய பாடசாலையைப் பொறுத்தமட்டில் ஒழுக்கம் மிகவும்

கள் ஒழுக்கமுள்ள வர்களாக உருவாகுவதற்கு வாய்ப்பளிக்கும். பெண் பாட சாலைகளுக்கு முடியுமான அளவு பகுதித்தலைவர்களாக ஒழுக்காற்றுக் குழு இவ்வாறு சட்ட ரீதியான நடவடிக்கை களை மேற்கொள்ளும் போது மேற்கூறப்பட்ட 2.3, I, II மற்றும் III இல் குறிப்பிடப் பட்டுள்ளவாறு செயற்பாடு களை மேற்கொள்ளமுடியும். சிறுவர் இன்னல்கள் தொடர் பிலான சகல புலனாய்வு மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின் மேற் பார்வை செய்தல் உட்பட விசேட அதிகாரங்கள் 1998 இல் 50 கொண்ட பாராளு மன்ற சட்டத் தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நிறுவப் பட்டுள்ளது. அவ்வதிகார சபையினால் தமது அதிகாரங்களை அமுல்படுத்தும் போது மாகாணக்கல்விப் பணிப்பாளர் அல்லது வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது பாடசாலைப் பொறுப் பாளரிடம் ஏதாவதொரு உதவி கேட்கப்படும் போது அதற்காகத் தேவைப்படும் உதவியை அவ்வ திகார சபைக்கு வழங்குதல் வேண்டும்.மேலும் மனிதாபிமான மற்ற முறையில் தண்டனைகளை வழங்காது பாட சாலைகளில் ஒழுக்க விழுமியங் களை பேணிவருவ தன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன் பாட சாலைகளில் சிறுவர் துஷ்பிரயோக செயற்பாடுகள் இடம் பெறாத சூழலை ஏற்படுத்தவும் பொறுப்பாக இருக்க வேண்டுமென கல்வியமைச்சு வலியுறுத்தி யுள்ளது. இந்நோக் கத்தை அடைந்து கொள்வ தற்காக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள்அர்ப்பணிப்பு செய்ய வேண்டு மெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகள் வழங்குவது தொடர்பாக இல1961/26 மற்றும் 1961.07.21 திகதி கொண்ட சுற்றறிக்கை மற்றும் பாடசாலைகளில் ஒழுக்கத்தை பாதுகாப்பது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள இல.*2001/11* மற்றும் 2001.03.30 ஆம் திகதிய சுற்றறிக்கைகள் கல்வி யமைச்சால் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

உயர்ந்த மட்டத்தில் ஆசிரியர்களால் பேணப்பட வேண்டும். மாணவர்களை வன்முறைகளுக்குத் தூண்டிவிடுவதிலும் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதில் மாணவர்களை பகடைக்காய்களாக பயன்படுத்தி வருகின்ற சம்பவங்களை அண்மைக் காலமாக பாடசாலைகளில் அவதானிக்கின்றோம். விசேடமாக தேசிய பாட சாலைகளில் இவை இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான அசம்பாவிதங்கள் அண்மையில் கம்பஹா, பொலநறுவை, கல்முனை போன்ற பிரதேசங்களில் கடந்த காலங்களில் நடைபெற்றன. இச்சம்பவங்களில் இப்பாடசாலையின் ஆசிரியர்கள் சிலர் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மாணவர்களைப் பயன்படுத்தி நீதிமன்றம் வரை சென்ற சரித்திரங்களும் கல்வி யமைச்சில் பதிவாகியுள்ளன.பாடசாலைகளில் மாணவர்களின் ஒழுக்க விடயங்களை கையாள்வ தற்கென பாடசாலை ஒழுக்காற்றுக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இக்குழுக்களுக்குப் பொறுப் பாக நியமிக்கப்படும் ஆசிரியர்களின் தராதரம், அவர்களது நடத்தை, மாணவர்களுடன் பழகும் பாங்கு என்பன மிகவும் அவசியமானது. மாணவர் களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக இராணுவத்தினரையும், பொலிஸாரையும் போல் இயங்கும் ஆசிரியர்களை நியமிக்கக்கூடாது. அதே போன்று பருவ வயதினை அடைந்த மாணவர்கள் கல்வி கற்கும் தரம் 10 முதல் உயர்தரம் வரையான வகுப்புகளுக்கான பகுதித்தலைவர்களை நியமிக் கின்ற போது அனுபவமுள்ள சாந்தமான, பண்புள்ள ஆசிரியர்களை நியமிப்பது பாடசாலைகளில் மாணவர்

21 ம் நூற்றாண்டுக்கான பாடசாலைத் தலைமைத்துவம்

மனித இனம் தோன்றியதிலிருந்து அதன்முன்னோக்கிய வளர்ச்சிப் பயணத்தில் கல்வியானது மிகப்பெரும் பங்கினை வகித்துள்ளது. 21ம் நூற்றாண்டின் பூகோள மயமாகிய உலகின் தோற்றப்பாட்டிலிருந்து கல்வி யானது வேறெதனுடனும் ஒப்பிடமுடியாதளவுக்கு சவால்மிகுந்த பங்கினை வகிக்க வேண்டியுள்ளது. பூகோளமயமாகிய உலகக் குடும்பமானது புவியியல், இன, மொழி, கலாச்சார, பொருளாதார, மற்றும் பிற தடைகள் அனைத்தும் அதிகளவு குறைக்கப்பட்டும் நீக்கப்பட்டும் நெருங்கிப் பின்னப்பட்ட குடும்பமாவதுடன் கல்வியின் பங்கானது மிகத்தெளிவாய்ப் புலப்படுகின்ற மாற்றத்திற்கு உள்ளாக வேண்டியுள்ளது. இத்தகைய பூகோளமயமான உலகத்திலும் அதனுடன் சேர்ந்த அறிவுச் சமூகத்தினது தோற்றப்பாட்டிலும், கல்வியின் பிரதான எண்ணக்கருவானது, கடந்தகாலத்தின் சிறந்த கூறுகள் எனப்படுவன ஒன்றுசேர்க்கப்பட்டும் பொருத்த மற்றவை எனப்படும் கூறுகள் நீக்கப்பட்டும், மீள்கட்ட மைப்புக்கு உள்ளாக்கப்பட்டு மீள்வரைவிலக் கணப் படுத்தப்பட்டு, மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது. இவ் வாறான மாற்றங்களை விளைதிறனுள்ளதும் பொருத்த மானதுமான வகையில் முகாமைத்துவம் செய்யும் பங்கினை ஆற்றக்கூடிய புதியதொரு கல்வித் தலைமைத்துவமானது உருவமைக்கப்பட வேண்டி யுள்ளது.

கல்வியின் மிகமுக்கியமான சவாலானது, அறிவினை மூலதனமாகவும் உழைப்பாகவும் பயன்படுத்துவதற்குப் பதிலாக பிரதான உற்பத்தி வளமாகப் பயன்படுத்தும் அறிவுச் சமூகத்தின் வளர்ச்சிக்குப் பங்களிப்பதாகும். மேலும் இது சமூக மக்களினது சுபீட்சத்துக்கும் நல்வாழ்வுக்கும் அறிவினை உருவாக்குகின்ற, பகிர்ந்து கொள்கின்ற, அத்துடன் பயன்படுத்துகின்ற சமூகம் ஒன்றாகும். மனித அபிவிருத்திக்கான அறிவினைக் கட்டியெழுப்பிப் பிரயோகிப்பதற்கு, தகவலை இனங் கண்டு, உருவாக்கி, வழிப்படுத்தி, உருமாற்றி, பரப்பிப் பயன்படுத்துவதற்கான ஆற்றல் கொண்டதே அறிவுச் சமூகங்களாகும்.

அறிவுச் சமூகங்கள் பற்றிய மேற்காணும் எளிமையான வரைவிலக்கணங்களாவன, அறிவுச் சமூகம் ஒன்றினை விருத்திசெய்வதற்கு உயர்தரமான பாடசாலையினதும் மற்றும் சிரேஷ்டநிலைக் கல்வியினதும் அவசியத் தினைக் குறிப்பிடுகின்றன. அறிவினை ஒன்றுகூட்டி, பரப்பி, உருவாக்கவேண்டிய கல்விப் பொருளா தாரத் தின் முக்கிய தூண்களில் ஒன்றாக உயர் தரமுள்ள முறைசார் கல்வி கருதப்படுகின்றது. கல்விச்சமூகத்தின் குணாம்சங்களாவன, பாடசாலை மற்றும் சிரேஷ்ட நிலைக் கல்வி ஆகிய கல்வி முறைமையினது உற்பத்திகளுடன் நேரடித் தொடர்புள்ளன.

பாடசாலைகளைக் கற்றல் நிறுவனங்களாக விருத்தி செய்வதற்கு, பாடசாலைகளின் முகாமைத்துவம், பாடவிதானங்கள் வழங்கப்படல் மற்றும் கற்பித்தல் வழிமுறைகள் ஆகியன தொடர்பான பலவிதமான சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதே வேளை அறிவுச் சமூகமொன்றில் தமது இயலாற்றல் களைப் பாடசாலைகள் தெளிவாய் அறிந்துகொள்ள வேண்டுமாயின் இப்பாடசாலைகளில் பிறிதொரு உருமாற்றம் இடம்பெறவேண்டியுள்ளதுடன் இது மிகவும் அவசியமானதெனக்கருதப்படுகிறது.

அறிவுச் சமூகமொன்றின் விளைதிறனுள்ள உறுப்பினர் களாவதற்கு எவ்வகையான கல்வி மாணவர்களைச் சிறப்பாகத் தயார்செய்ய வல்லது? என்பதே இவ்வகை யான உருமாற்றத்திற்கான அடிப்படை வினாவாகக் கருதப்படுகிறது. பாடசாலைகள் மற்றும் பல்கலைக் கழகங்களைப் போன்ற முறைசார் கல்வி நிறுவனங் களே இத்தகைய பாரிய பணியினை மேற்கொள்வதில் முதன்மையானவை என்பதனை நினைவிற் கொள்ள வேண்டும். அறிவுச் சமூகத்திற்கான சவால்களைச் சந்திப்பதற்கு மாணவர்களைத் தயார்செய்வதற்கு சமூகத்திலுள்ள வேறெந்த நிறுவனமும் போதியளவு சாதனங்களைக் கொண்டிருக்கமாட்டா. கல்வியினால் ஊக்குவிக்கப்பட வேண்டியவையும் அறிவுச் சமூகத் திற்கு உகந்தவையெனவும் இனங்காணப்பட்ட குணாம் சங்களாவன: நெகிழ்வுத்தன்மை, புத்தாக்கம், பிரச் சினைகளைத் தீர்க்கும் ஆற்றல், தொழில்நுட்ப அறிவு, தகவலைத் தேடிக்காணும் திறன் அல்லது தகவல்சார் அறிவு, சுயமாகக் கற்கும் திறன்கள், இவையெல்லா வற்றுக்கும் மேலாக உயிர்வாழ் காலம் முழுவதும் கற்பதற்கு ஆயத்தமாயிருத்தல் என்பனவாகும். இவை யாவற்றையும் கல்விக் குறிக்கோள்களாகவும் இதன்

பின்னர் கற்றல் நடவடிக்கைகளாகவும், மதிப்பீடுசெய்வ தற்கான நிபந்தனைகளாகவும் மற்றும் இவை போன்ற வைகளாக மாற்றியமைத்தல் பாடசாலையின் பணியா கிறது.

அநேகமாக சகல சந்தர்ப்பங்களிலும் பாடசாலைகளும் கல்வி முறைமைகளும் அறிவுச் சமூகத்திற்கு முரணான வகையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளன. பொதுவாகத் தகவலானது மேலிருந்து கீழ் (ஆசிரியரி டமிருந்து மாணவருக்கு) அல்லது மத்தியி லிருந்து களத்திற்கு (அமைச்சிலிருந்து பாடசாலைக்கு) நகருகிறது ஆனால் அதேவேளை அறிவுச் சமூகத்தில் தகவலானது தனிநபர்களுக்கும் குழுக்களுக்கும் இடை யிலும் அத்துடன் தேசிய எல்லைகளைக் கடந்தும் சுயேச்சையாகப் பகிரப்படுகிறது.

அறிவுச் சமூகமொன்றின் தோற்றப்பாடு தகவற் தொடர் பாடல் தொழில்நுட்பத்தினால் முடுக்கிவிடப்பட்டு, வாழ்வுக்கும் கற்றலுக்குமான 21ம் நூற்றாண்டுத் திறன்களை மாணவர்கள் விருத்திசெய்ய உதவுதற்கு கல்வி முறைமையினை அழுத்தத்திற்குள்ளாக்குகிறது. இதன் முதற்படியாக பாடசாலை விருத்தியின்பின்வரும் உறுப்புப் பகுதிகளின் மேம்பாடு, மாணவர்கள் அறிவுச் சமூகத்தில் பங்கேற்பதற்கு ஆதரவளிப்பதற்குப் பயன்படுத்தப்படலாம்:

- ♦ கற்றல் வளங்களும் பாடவிதானமும்
- ♦ ஆசிரியர் கல்வியும் அபிவிருத்தியும்

- ♦ பெறுபேறுகளை மதிப்பிடல்
- ♦ முகாமைத்துவமும் தகவல் முகாமமைத்துவமும்
- ♦ கொள்கையும் திட்டமிடலும்

பாரம்பரியமான பாடசாலைக் கல்வியில் அர்த்தமுள்ள முன்னேற்றங்களைப் பெறுவதற்கு அல்லது அறிவுச் சமூகத்திற் பங்கேற்பதற்கு ஆதரவு வழங்குகின்ற மாற்றத்தினை அடைவதற்கு கல்வி முறைமையானது மேற்கூறப்பட்டுள்ள ஐந்து ஆக்கக் கூறுகள் அனைத்தையும் ஒருங்கிணைந்த செயற்பாட்டுப் பாணியில் அடையமுயற்சித்தல் வேண்டும்.

பாடசாலை ஒன்றினது அல்லது பாடசாலை முறைமை யினது வெற்றிக்கு பாடசாலைத் தலைமைத்துவம் என்பது அதிமுக்கியத்துவம் வாய்ந்தது. எதிர்பார்க்கப் பட்டதனை விடச்சிறப்பான செயலாற்றலுள்ள மாணவர் களைக்கொண்ட பாடசாலைகளில் இயக்கத்திறனுள்ள அதிபர் இயக்குனராக இருந்துள்ளதனை, அண்மைக் காலத்தில் விளைதிறனுள்ள பாடசாலைகளில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகள் ஆவணப்படுத்தின. குறை நிலைச் செயற்பாடுள்ள பாடசாலைகளை முன்னேற்று வதற்கும் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்து வதற்கும், ஆசிரியர்களையும் அத்துடன் மாணவர்களை யும் ஊக்குவிப்பதற்குமான திறவுகோலாக வல்லமை மிக்க தலைவர்கள் இருந்துள்ளனர். விளைதிறனுள்ள தலைவர் ஒருவரினது முழுமையான விளக்கத்தினை இவ்வாய்வுகள் விருத்திசெய்துள்ளன. பாடசாலையின் பணிகளாவன பல்பரிமாணங்கள் உள்ளவையென இவர்களால் இனங்காணப்பட்டுள்ளதுடன் பாடசாலைத் தலைவர்களிடம் அமைந்திருக்கவேண்டியவையென இவர்களால் வலியுறுத்தப்பட்ட திறன்கள் பின்வருமாறு:

- ♦ அறிவுறுத்தல்கள் வழங்கும் தலைமைத்துவத் திறன்கள்
- ♦ முகாமைத்துவத் திறன்கள்
- ♦ தொடர்பாடல், கூட்டுச் செயற்பாடு மற்றும் சமூகத்தைக் கட்டியெழுப்புதல்
- ♦ தொலைநோக்கினை விருத்திசெய்தல், அபாயத்தினை எதிர்கொள்ளல் மற்றும் மாற்றங்களின் முகாமைத்துவம்
- ♦ முரண்பாட்டுநிலை முகாமைத்துவத் திறன்கள்பாடசாலை முகாமைத்துவம் பற்றிய அதிகமான சிரத்தைகள் இவற்றிலிருந்து கிளைவிடுகின்றன
- ♦ மாணவர்களது தேவைகளை நிறை வேற்றும் வகையில், பாடசாலைகளில், கோட்டங்களில் மற்றும் பிராந்தியங்களில் தலை மைத்துவமானது எவ்வாறு மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பதற்கான தெளிவான விளக்கம்
- ♦ பாடசாலைகளிற் தலைமைத் துவப் பதவிகளை நிரப்பு வதற்கு, நன்கு பயிற்று விக்கப்பட்ட தராதரமுள்ள ஆட்களுக்கான பற்றாக்குறை உள்ளதெனும் நம்பிக்கை உள்ளது.

தண்டனை வழங்கல் அல்லது வெகுமதியளித்தலின் பொருத்தப்பாடு

பேராசிரியர் தயாரோகண அத்துக்கோறள



மாணவரொருவர் காண்பிக்கும் பிறழ்வான நடத்தைகளை நிறுத்துவதற்கு தண்டனையளித்தல் (அதாவது ஏச்சுப் பேச்சு, வகுப்புத்தடை, தாக்குதல்) இடம் பெறும். இத்தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள் மாணவன் பிறழ்வான நடத்தைக்கு பதிலாக சீரிய நடத்தையைக் காட்டுவார் என்பது எதிர்பார்க்கப்படும். பாடசாலை சட்ட ஒழுங்கு, நாட்டின் சட்ட திட்டங்கள் இடப்பட்டிருப்பதும் தவறிழைப்போருக்கு தண்டனை வழங்குவதும் அதே எதிர்பார்ப்புடன் ஆகும். எனினும் இதனை எவ்வளவு தூரம் எதிர்பார்க்கை இலக்கை நிறைவேற்றும் என்பதை சற்று சிந்திக்க வேண்டும்.

ஒரே தண்டனை வழங்கும் ஆசிரியரில் பயம், சினம், வெறுப்பு என்பன மாணவரில் தோன்றலாம். அது பிரதிகூலமான பக்கவிளைவாகும். ஜோன் ஹோல்ட் சுட்டிக்காட்டியிருப்பது பாடசாலைக்கல்வி பயத்தின் மீது அடித்தளமிடப்பட்டிருப்பதாகவாகும். பயமுள்ள உள்ளத்தில் போதிய கற்றல் இடம் பெறாது. மாணவன் அடிக்கடி தண்டனைக்கும், பயத்திற்கும் இரையாகுவானாயின் அவனுள் நலம் குன்றிய மனோநிலை உருவாக இடமுண்டு. அது உளப்பிணி நிலை வரை வளர்ச்சியடையவும் இடமுண்டு.

ஒரு சில வேளை தண்டனை வழங்கல் மாணவரின் நடத்தை வளர்ச்சியிலும் பங்கு கொள்ளும் ஏனையோரின் கவனத்தை ஈர்த்துக்கொள்ள பிழை செய்பவர்களுக்கு ஆசிரியர் தண்டனையளிப்பதால் அந்த நடத்தை அதிகமாக இடம்பெற மீளவலியுறுத்தல் கிடைக்கும். தண்டனையை அனுபவிக்கும் போதும் ஏனையோரின் கவனத்திற்கு உள்ளாவதாகும். இதனால் குறிப்பிட்ட நடத்தையொன்றை இடைநிறுத்துதல் தண்டனை வழங்கல் எவ்வாறு உபகாரமாக அமையுமென்பதை இருமுறை சிந்தித்து செயற்பட வேண்டும்.

நற்செயல்களுக்கு,பொருத்தமான நடத்தைகளுக்கு, திறமைகளுக்கு நேர்மிளவலி யுறுத்தலை வழங்கல், அதாவது வெகுமதிளித்தல், பாராட்டுதல் மூலம் நல்ல நடத்தைகளை அதிகரிக்க முடியும். விடைத்தாள்களைத் திருத்தும் போது தவறுகளை எடுத்துக்காட்டுவதை விட சரியானவற்றை வெளிப்படுத்திக் காட்டி அவற்றிட்கு பாராட்டல் வழங்குதல் மூலம் விரைவாக சரியாக கட்டுரை எழுத வைக்க முடியுமெனவும் தவறுகளிலிருந்து மீட்டெடுக்க முடியுமென ஆய்வுகளில் வெளிவந்துள்ளது. ஸ்கின்னர் சுட்டிக்காட்டியிருப்பது நேர் மீளவலியுறுத்தல் கற்பிப் பதற்கு ஆதாரமாக அமைந்தாலும் வகுப்பறையில் பாடசாலையில் அதிகமாக பாவிக்கப்படுவது மறை மீளவலி யுறுத்தலாகும். இதனால் ஆசிரியரின் ஏச்சு, பேச்சு நிகழ்வது மன நிறைவான நேர்நிலை கற்றல் அல்ல, மனநிறைவற்ற மறை (-) நிலைக் கற்றலாகும். இந் நிலையை மாற்றி நேர் மீளவலியுறுத்தலை வழங்கு வதன் மூலம் கற்பித்தலை மிகவும் திருப்தி கரமான செயற்பாடாக கற்க முடியுமென ஸ்கின்னர் தெளிவாகக் காட்டினார்.

தண்டனை வழங்கலில் இடம் பெறுவது தவறைத் தடுத்தலேயன்றி போக வேண்டிய வழி சரியான வழியைக் காட்டிக் கொடுப்பதல்ல. வெகுமதியளித்தலில் தரப்படும்செய்தி "நீர் செய்ததை மீண்டும் செய்க" என்பதாகும். இதனால் தண்டனையினால் தவறைத் தடுப்பதுடன் வெகுமதி மற்றும் பாராட்டு மூலம் சரியான வழியில் செல்ல தைரியமளித்தல்

வேண்டும். சிக்கல் பாதை (Maze) யில் விடப்பட்ட எலிகளுக்கு சரியான வழியில் செல்ல இரு வழிகளில் வர முடிந்தது. குறுகிய பாதையில் செல்ல பழகி யிருந்த எலிகளுக்கு அவ்வழியில் மின்னதிரிச்சியை வழங்கிய போது அவை நீண்ட வழியில் செல்லப் பழகின. தண்டனை கிடைப்பதால் குறுகிய வழியை கைவிட்டு நீண்ட வழியில் செல்லப் பழகியது. இதன் படி தண்டனை நடத்தையை மாற்றம் செய்வதில், மாற்று வழியில் செலுத்த உபகாரமாய் அமைந்தது.

பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் அடிக்கடி ஏற்படும் பிரச்சினைகளில் ஒன்று பிள்ளைகளுக்கு எவ்வளவு, எவ்வாறு தண்டனையளிக்க வேண்டும் என்பதாகும். சிறந்த முறை தவறு எங்கே? என்பதை முன்கூட்டியே தெரியப்படுத்தலாகும். அப்போது அந்தத்தவறை செய் யாமலிருக்க மாணவரால் முடியும். எந்த நடத்தைகள் அனுமதிக்கப்படுபவை? எந்த நடத்தைகள் அனுமதிக கப்படாதவை? என்பதை முன்கூட்டியே தெரிந்திருக்கும் போது பிழையிலிருந்து மீளவும் அதன் மூலம்

அதே போல் தண்டனையளிக்கத் தயாராதல் அல்லது சைகையை கண்ணுற்றதும் தவறிழைக்காமலிருக்க பழகுதலும் மிகவும் பிரதிபலன் தருபவை. மின்னலடிக் கும் போது இடியோசைக்குப் பயந்து வீட்டினுள் நுழைதல், பொலிஸ் உத்தியோகத்தரைக் காணும் போது தவறிழைக்காதிருத்தல், பிரம்பை காணும் போது பிழை செய்யாதிருத்தல் என்பன உதாரணங்களாகும். அடிப்படை சைகை கிடைத்ததும் தவறிழைத்து மீளுவதன் மூலம் தண்டனையையும் அகற்ற முடியும் தவறையும் தடுக்க முடியும்.

தண்டனையிலிருந்து மீளவும் மாணவரால் முடியும். மாணவர்கள் அடிக்கடி இவ்வரையறைகளை பரீட்சித்துப் பார்ப்பர். எந்தளவு தூரத்திற்கு அதனை நடைமுறைப்படுத்த முடியும் என்பதை அறிதல் அவர்களின் குறிக்கோளாகும். இதனால் பெற்றோரும் ஆசிரியரும் பொறுமையுடன் எப்பொழுதும் ஒரே போதனையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தப் பிழையை மீறும் போது அதற்குத் தகுந்த தண்டனை அவ்வேளையிலேயே வழங்கப்படின் உடனே தவறிலிருந்து மீளுவர் தவறைத் தொடங்கும் போதே

சிறிய எளிமையான தண்டனையின் மூலம் தடுப்பதால் பிற்காலத்தில் பாரிய தண்டனைகளை வழங்க வேண்டியேற்படும் நிலைமைகளை தவிர்த்துக்கொள்ள முடியும். அவ்வாறு தண்டனையைப் பிற்படுத்தல், "வளர்ந்ததும் குற்றவாளியாவதைவிட ஒன்றுமில்லை, நாட்டைப் பாழாக்குவபவன் ஆவான்" என கூறப்படும் சொற்பிரயோகங்களால் மாணவன் மனதளவில் கஷ்டப் படுவான். அதே போல் அச்சொற்கள் காரணமாக தவறிலிருந்து மீளும் அளவும் குறைவு. தவறிழைக்கும் போது அதனை சுட்டிக்காட்டி தேவைப்படுமாயின் எளிமையான தண்டனையொன்றை வழங்கி மீண்டும் நல்ல பிள்ளையாக, மாணவனாக ஏற்றுக்கொள்ளல் மிகவும் பிரதிபலன் கிடைக்கும் முறையாகும்.

கற்பித்தல் அறிவியலில் மீளவலியுறுத்தலின் பிரயோகம்

மேற்கூறியவாறு மீளவலியுறுத்தல், தேவைக்கேற்ப ஒழுங்கு படுத்துவதன் மூலம் மிகவும் சிக்கலான நடத்தைகளைக் கூட நிபந்தனைப்படுத்தி அவற்றை வலிமையாகப் பேண முடியுமென ஸ்கின்னர் சுட்டிக காட்டினார். இவ்வாறு நோக்கும் போது பரிசோதனைக் குட்பட்ட விலக்கினங்களிடையே ஏதும் விஷேட வேறு பாடொன்றைக் காண முடியவில்லை. அதாவது முயல் கள், எலிகள், பூனைகள் அதே போல் பிள்ளை களையும் ஒரே விதத்தில் தொழிலி நிபந்தனைப் படுத்தப்பட்டமை தெரிய வந்தது. இதன் மூலம் ஸ்கின்னர் எடுத்த முடிவு "உரிய முறையில், தரப்பட்ட முறைகளுக்கு அமைவாக மீளவலியுறுத்தலை மேற் கொள்ளப்படுமாயின் எவராலும் தான் எதிர்பார்த்த விளைவைப் பெற முடியும். என்பதாகும் இதன்படி "கற்றல் ஒரு விஞ்ஞானம்" எனும் கருத்து வெளியிடப் பட்டது. "கற்பித்தல் விஞ்ஞானம்" மனிதன் தொடர்பாக செயற்படினும் பாடசாலையில் இம்முறையை வெற்றி கரமாக செயற்படுத்துவதில்லை எனவும் அவை மிகவும் விஞ்ஞானபூர்வமற்றதாக நடைபெறுவதாகவும் ஸ்கின்னர் சுட்டிக்காட்டினார்.

பாடசாலைகளில் கற்பித்தல் விஞ்ஞானம் வெற்றிகரமாக செயற்படாததை விளக்குவதற்கு அவர் முன் வைத்த பலவீனங்கள் வருமாறு.

(1) உரிய முறையில், போதிய அளவில் மீளவலி யுறுத்தலை பிரயோகிக்காதிருத்தல்.

பிள்ளைகள் கற்றலைப் பெற்றது மீளவலியுறுத்தல் கிடைப்பதால் சுயவிருப்புடன் அல்ல, அனேகமாக வீட்டில், பாடசாலையில் கிடைக்கும் தண்டனை யிலிருந்து, அவமானத்திலிருக்கும் தப்பித்துக் கொள்வதற்கு என அவர் தெளிவுபடுத்தினார்.

(John Halt என்பவர் How Children Fail எனும் நூலிலும் Teaching as a Subversive Activity எனும் நூலிலும் இந்நிலைமைகளை உதாரணத்துடன் எடுத்துக் காட்டியுள்ளார்)

(2) பாடசாலையில் மீளவலியுறுத்தல் வழங்கலில் மிகவும் சிறிது அளவிலேனும் தாமதம் ஏற்படுகிறது.

ஸ்கின்னர் சுட்டிக்காட்டியது மீளவலியுறுத்தல் வினைத்திறனுடையதாக வேண்டுமாயின் அது உடனே கிடைக்க வேண்டும் என்பதாகும். அக்காலம் நிமிட அடிப்படையில், செக்கன் அடிப்படையில் அளவிட வேண்டும். வகுப்பறையில் கற்பித்தலில் பொதுவாக இடம் பெறுவது ஆசிரியர் பிள்ளைகளுக்கு யாதேனும் பயிற்சியொன்றை வழங்கி வேறு வேலையொன்றில் ஈடுபடுதலாகும். பிள்ளைகளின் தொழிலிகளுக்கு, முயற்சிகளுக்கு போதிய அளவில் மீளவலியுறுத்தல் கிடைப்ப தில்லை. பின்னர் பயிற்சி, ஒப்படைகளுக்கு புள்ளி வழங்கினாலும் மீளவலியுறுத்தல் எப்படியும் கிடைக்காமல் போதலும் உண்டு.

(3) படிமுறையான குறிக்கோள் அடைவு செயற்பாடொன்றைக் காண முடியாது.

தலைசிறந்த விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஒருவர் உயரம் பாயும் ஆற்றலை பயிற்றுவிக்கும் போது கடைப்பிடிக்கும் ஒழுங்கில், முறையாக, படிப்படியாக இலக்கையடையும் வரை பயிற்றுவித் தலைப் போன்று பயிற்றுவித்தல் பாடசாலையில் உபயோகத்திலில்லை. மிகச்சிறந்த பெறுபேறு களைப் பெற வேண்டுமாயின் பாடத்தை மிகச்சிறிய படிமுறைகளாக வகுத்து படிமுறை ஒழுங்கில் மீள வலியுறுத்தலை வழங்குதல் வேண்டும். வினா வெழுப்பும் போது கூட படிமுறை ஒழுங்கில் மீளவலியுறுத்தலை வழங்குதல் வேண்டும். வினா வெழுப்பும் போது படி முறையில் மேற்செல்லும் ஒழுங்கு காணப்படுதல் வேண்டும். நடத்தைச் சீராக்கத்தில் உபயோகிக்கப்படும் மீளவலியுறுத்தல் முறை உபயோகப்படுத்தப் படாதிருத்தல் பலவீனமாகும்.

வகுப்பறையில் மாணவர்களுக்கு தேவைக்கேற்ப போதிய அளவில் மீளவலியுறுத்தல் கிடைப்ப தில்லை.

ஒரு சில பாடங்களை அல்லது அலகுகளை *ஆசிரியர்* விரிவுரை முறையில் கற்பிக்கும் முறையில் செயற்படுத்தும் போது பிள்ளைகளுக்கு மீளவலியுறுத்தல் கிடைக்க சந்தர்ப்பமில்லை ஒவ்வொரு மாணவருக்கும் போதிய அளவில் மிளவலியுறுத்தல் தேவைப்படுமிடத்தும் அது இடம் பெறாது.

இவ்வாறான பலவீனங்களுடன் காணப்படும் வகுப்பறை நிலையின் கீழ் சம்பிரதாய பூர்வ கற்பித்தல் முறை நடைமுறைப்படுத்தல் கடினமாக அமைவதாக அவர் சுட்டிக்காட்டினார். அதனால் கற்பித்தலில் ஒரு சில திருத்தங்களை முன்வைக்க அவர் ஆலோசனை வழங்கினார் அதற்காக கோட்பாடுகள் சிலவற்றையும் முன் வைத்தார்.

சிறார் விளையாடும் போது யாரும் நேர்நிலை மீளவலியுறுத்தலை வழங்குவதில்லை இங்கு நடைபெறும் தன்னியக்க மீளவலியுறுத்தலாகும் (Automatic Reinforcement) தன்னியக்க மீளவலியுறுத்தலின் மூலம் இயற்கையாகவே மீளவலியுறுத்தல் கிடைக்கும். இக்கோட்பாட்டை பாடசாலையில் ஆசிரியர்களால் பாவிக்க முடியாதது ஏன்? பாடசாலையில் கலைத்திட்டத் திலும் தன்னியக்க மீளவலியுறுத்தல் கிடைத்தல் மூன்று விதங்களில் இடம்பெறுவதாக அவர் தெரிவித்தார்.

i. **ஊடகங்களைக் கையாள்வதன் மூலமும் மீளவலியுறுத்தல் பெறல்**

இயந்திரமொன்றை இயக்குதல்,
இசைக்கருவியொன்றை மீட்டல், ஈட்டி வீசுதல், தட்டச்சுப் பொறியொன்றை தொழிற்படுத்தல் என ஊடகங்கள் மூலம் தன்னியக்கமீளவலியுறுத்தலைப் பெற முடியும். தனது தொழிலி காரணமாக புறச்சூழலில் ஏற்படும் யாதேனும் வேற்றுமை காரணமாக மீளவலியுறுத்தல் கிடைக்குமாயின் அது தானியங்கு தன்னாட்சி மீளவலியுறுத்தலாகும். இசைக்கருவியை மீட்கும் போது இரசனைமிகு ஒலியைக் கேட்க முடிவதால், ஒரு தாளத்தில் ஊதி ஊதி நிற்பதற்கு யாதேனும் ஊடகம், கருவியொன்றை தொழிற்படுத்தும் போது அதன் மூலம் அமுழுத்தத்திற்கு ஆளாகாமலிருப்பின் நீண்ட நேரம் அவற்றில் ஈடுபட பிள்ளைகள் விரும்புவர் காரணம் சூழலில் ஏற்படும் வேற்றுமை காரணமாக மீளவலியுறுத்தல் நிகழ்தலாகும்.

ii. **பிரச்சினையை விடுவித்தல்**

பிரச்சினை விடுவித்தல் வெற்றியளிப்பதால் தன்னி யக்க மீள வலியுறுத்தல் கிடைக்கும். கணிதத்தில் திறமையான பிள்ளைகள் அதிகமாக கணித வினாக்களைச் செய்வதற்கு, மேலும் மேலும் வினாக்களைக் கேட்டல் உதாரணமாகும்.

iii. **தான் கற்பிக்கும் விடய வரையறையில் உள்ள சிக்கலான தன்மையை விளங்கிக்கொள்ளல்.**

சிக்கலான கட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்வதன் மூலம் மேலும் கற்பதற்கு உற்சாகமும் விருப்பும் ஏற்படும்.
யாதேனும் எதிர்கால மீளமைத்தல் நிகழ்வுகளில் இந்த தன்னாட்சி மீளவலியுறுத்தல் எண்ணக் கருவை தீவிரமாக உபயோகப்படுத்த வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதன் மூலம் கற்பிக்கும் விடயத்தில் வரையறையின் மூல மாகவோ மாணவருக்கு மீளவலியுறுத்தல் கிடைத்து தானாக கற்றலில் ஈடுபடுவர்.

ஸ்கின்னர் தனது தொழிலி நிபந்தனைப்பாட்டுக் கொள்கையின் முன்வைக்கப்பட்ட கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டு தற்போது காணப்படும் கல்வி முறையில் பலவீனங்களைக் குறைத்து, வெற்றிகரமான கற்றல் - கற்பித்தல் செயன்முறை யொன்றை செயல்படுத்துவதற்கென முதன்மையான கல்விமுறை என புதிய கற்பித்தல் முறை யொன்றைக் வெளிக்கொணர்ந்தார்.

தொழிலி கற்பித்தல் கொள்கையை வகுப்பறைக் கற்பித்தலில் பயன்படுத்தல்.

(1) வகுப்பறையில் பொருத்தமான நடத்தைகளை மீளவலியுறுத்துக.
- வகுப்பிற்குசட்டஒழுங்குமுறைகளைஅமுலாக்கும் போது,ஒருசிலவேண்டுகோள்களைமுன்வைக்கும் போது,அதனைச்சரியாகச்செய்யும்போது கிடைக்கும்நன்மைகளையும்குறிப்பிடுக.அதே போல்ஒழுங்கைமீறுமிடத்துகிடைக்கும்பின் விளைவுகளையும்தெளிவாய்எடுத்துக்காட்டுக. (பாடசாலைக்குசமூகம்தரல்80%ஐ தாண்டியவர்களுக்குபரீட்சையில்20புள்ளிகள் மேலதிகமாககிடைக்கும்.வருகை75%ஐவிட குறைவடையும்போது20புள்ளிகள்குறைக்கப்படும் அத்துடன்இதனைநடைமுறைப்படுத்தியும்காட்ட வேண்டும்)

♦ மாணவன்குறிப்பிட்டதவறைஏற்றுக்

கொள்பவனாயின்அவனுக்குஒருஆறுதல்வழங்குக.“நீர் பிரதிபண்ணியதாகஏற்றுக்கொண்டதால்இன்றுவிடை எழுதஅனுமதிக்கிறேன்,திரும்பபிரதிபண்ணி அகப்பட்டால்பரீட்சைமண்டபத்திலிருந்து வெளியேற்றப்படுவீர்”

(2) வழங்கப்படும்மீளவலியுறுத்தல்உண்மையாகவே ஒருவரில்மீளவலியுறுததியாகதொழிற்படுகின்றதா என்பதைதேடிஅறிக.

♦ வெற்றியளிக்கும்முயற்சிகளுக்குகருத்துடன் கூடியவெகுமதிகளைவழங்கிஆர்வமூட்டுக. உதாரணம்:ஓய்வுசற்றுஅதிகமாகவழங்கல்,நூலக நேரத்தைஅதிகரித்தல்,வீட்டுவேலைகளைக் குறைத்தல்,அதிகமாகவிரும்பும் செயற்பாடுகளுக்குசந்தர்ப்பம்வழங்கல்,தட்டச்சு, கணினிப்பயன்பாடுஎன்பன.

♦ நற்செயல்களுக்குவழங்கவேண்டியவெகுமதி யாதெனமாணவர்களுடன்கலந்தாலோசித்து தகுந்தபரிசிலைவழங்குக.

(3) புதியஉபகரணமொன்றுஅல்லதுபரிசோதனை செயற்படுத்தப்படும்போதுபுதியதிறமைகளை வளர்த்துக்கொள்ளமுயற்சிஎடுக்கும்போது, மீளவலியுறுத்தலைஅதிகமாகவழங்குக.

♦ சரியாகச்செய்துமுடிக்கும்சிறியவெற்றிகளுக்கும் பாராட்டல்வழங்குக.

♦ கடினமானவேலையொன்றைஆரம்பிக்கும் கட்டத்தில்இடம்பெறும்பிழைகளைகவனிக்காமல் விடுக.அவற்றைஏளனம்செய்யாமல்மாணவரை ஊக்கப்படுத்துக.

(4) புதியநடத்தையொன்றுநிலையானபின்அதனை உறுதியாகதொடர்ச்சியாகபேணிக்கொள்வதற்குவிட்டு விட்டு(நினைக்காதநேரங்களில்)மீளவலியுறுத்தலை வழங்குக.

♦ வகுப்பறையில்உள்ளநன்நடத்தைக்கு, பாடசாலையில்அல்லதுவெளியில்செய்த நற்செயல்களுக்குஎதிர்பாராதவேளைகளில் பரிசில்/வெகுமதிவழங்குக.

♦ பத்திரிகையொன்றில்ஆக்கமொன்றைவெளியிடும் போதுபுதியதிறமையொன்றைவெளியிடும்போது அவர்களைப்பாராட்டிவெகுமதியளிக்க.

♦ பாடத்திற்குப்புறம்பானவிடயங்களை,பொது அறிதற்துணுக்குகளுடன்இணைத்துஅடிக்கடிசிறு வினாக்களைக்கேட்க,விடையளித்தல் கட்டாயமின்றினும்பொருத்தமானவிடைகளுக்கு தவணைஇறுதியில்நடைபெறும்பரீட்சைக்குசில புள்ளிகளைச்சேர்க்குக.

♦ நல்ல,திறமையான,படைப்பாற்றலுள்ள வினைத்திறன்மிகுபிள்ளைகளுக்குஇடைவிட்டு பரிசில்,சான்றிதழ்,பாராட்டுக்கடிதம்என்பவற்றை வழங்குக.

(5) புதியநடத்தைகளைஉருவாக்குவதற்குதேவையான சட்டதிட்டங்களைதெளிவாக,உறுதியாகமுன்வைக்க.

♦ பாடசாலைவிடுமுறையில்செய்துமுடிக்க வேண்டியவேலைகள்,ஒப்படை,உறுதியாக வழங்குக.

♦ வகுப்பறைநடத்தையில்சட்டங்களைநினைவுகூர மாணவர்களால்வரையப்பட்டதெரிவுசெய்த சித்திரங்கள்,சைகைகளைமுன்வைக்குக.

(6) பிள்ளைகளுக்குகவர்ச்சிதரும்வண்ணம் நடந்துகொள்க.

♦ வகுப்பறைக்குவெளியில்முகம்காணும்போது, நற்செயல்செய்யும்போது,வெற்றிபெற்றபோது, தயக்கமின்றிபுன்முறுவல்பூத்துமகிழ்ச்சியை வெளிப்படுத்துக.

♦ அசௌகரியத்திற்குபிரச்சினையொன்றிற்கு, சிக்கிக்கொள்ளுமிடத்துஅனுதாபம், இரக்கசிந்தனைஉடையஉபகாரம்வழங்குக.

♦ பிள்ளைகளின்புதியதிறமைகள்,சிறந்த நடத்தைகளைபெறுமதியளித்துஉற்சாகமளிக்க.

♦ பிள்ளைகள்தைரியமடையும்பாணியில் கதைப்பதன்மூலம்அவர்களைஊக்கப்படுத்துக.

(7) தண்டனைவழங்கலில்ஏற்புடைமையை காத்துக்கொள்க.

♦ தவறுசெய்தஉடனே,தவறைச்சுட்டிக்காட்டி தண்டனைவழங்குக.தண்டனையைவாய்மூலம், விடயங்களைத்தெளிவாக்கிமாணவரால் ஏற்றுக்கொள்ளமுடியுமானவிதத்தில்வழங்குக.

♦ உடல்ரீதியானதண்டனைகளைஇயன்றளவு குறைத்துக்கொள்க.

♦ செய்ததவறுக்குகிடைத்ததண்டனை பொருத்தமானதுஎன்பதைவிளக்கித் தெளிவுபடுத்துக.

உளவியல்
தத்துவத்திலிருந்து அறிவியலுக்கு

சிக்மன்ட் ஃராய்ட்
தமிழாக்கம்: தியாகு

உள்ளத்தின் இயல்புகள் பற்றிய சிந்தனைப் போக்கு மனிதன் சிந்திக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே தோன்றி வளர்ந்து வருகின்றது. தொடக்கக்கால மனிதச் சிந்தனை இயற்கையோடு தொடர்புடையதாக இருந்தது. அதிலும் குறிப்பாக அச்சம் பற்றிய விசாரணைகளே தொடக்கத்தில் அதிகமாக இருந்தன. அறிவு வளர வளரச் சிந்தனா சக்தி செம்மையானது. செம்மைப்படுத்தப்பட்ட சிந்தனைகளே தத்துவங்களாக வெளிப்பட்டன. இத்தத்துவங்கள் வெறும் கொள்கைகளாகத் திகழ்ந்தன. அவற்றைப் பயன்முறைக்கு (applied) உட்படுத்துவதில் தீவிரம் காட்டவில்லை. காரணம் அவ்வாறு செய்தால் குறைகள் தெரிந்துவிடும். அதனால் மாற்றங்கள் நிகழ்த்தவேண்டிய நிலைமை ஏற்படும். தத்துவங்கள் மாற்றத்திற்கு அப்பாற்பட்டவை என்பதால் அவற்றைப் பயன்முறைப்படுத்தவில்லை.

ஆழத்து உளவியலின் வரலாறு தத்துவமுறை

உளவியல் (philosophic psychology) அறிவியல் முறை உளவியலுக்கு (scientific psychology) அடிமரமாகும். இருப்பினும் அறிவியல்முறை உளவியலில் இருக்கும் அனைத்தின் சாரங்களும் தத்துவமுறை உளவியலில் இருக்கும் என்று கூறமுடியாது. இருந்தாலும் ஒருசில அறிவியல் முறை உளக்கூறுகள் தத்துவமுறை உளவியலில் வெளிப்பிற்குரியதாகும். திருவள்ளுவர் கூட 'மனநலம்' (mental health) பற்றிச் சிந்தித்திருப்பது கவனத் திற்குரியது. உலகத் தத்துவவாதிகள் வரிசையில் இருக்கத் தகுதி படைத்த ஒரே தமிழறிஞர் திரு வள்ளுவராவார். இவர் பட்டறிவு (empirical) கவனிப்பு (observation) முறையில் வழங்கிய தத்துவங்களில் உளம் சார்ந்த கருத்துக்கள் ஆங்காங்கே தென்படு கின்றன. திருவள்ளுவர் கருத்துக்களில் பெரும்பாலும் அபௌதிகக் (metaphysics) கருத்துக்களே காணப் படுகின்றன. இருப்பினும் நவீன உளவியல் தொடர்பான சில குறள்களும் இடம் பெற்றிருப்பது வியப்பிற் குரியதாகும். குறிப்பாக மனநலம் (mental health) பற்றி முதன் முதலில் சிந்தித்தவர் திருவள்ளு வராகத்தான் இருக்க முடியும். கிரேக்கத் தத்துவத்தில் இப்படிப்பட்ட கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. 'இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்தின் துன்பம் உறுதல் இலன்' இது போன்ற சிறந்த ஆலோசனை (counselling) வேறு இருக்க முடியாது. 'கனவினால் உண்டாகும் காமம் நனவினில் நல்காரை நாடித் தரற்கு' எனும் குறள் ஃப்ராய்டியக் கனவுக்

கோட்பாட்டின் சுருக்கமாகும். 'யாதனின் யானின் நீங்கி யான் நோதல் அதனின் அதனின் இலன்' எனும் குறளில் உள மருத்துவம் அடங்கியுள்ளது. 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்' எனும் குறளில் நீட்சேவின் (Nietzsche) சாயலைக் காணலாம். இவ்வாறு ஐரோப்பியத் தத்துவங்களோடு திருக்குறளை ஒப்பிட்டுத் தனி நூலே எழுதலாம். இப்பேர்ப்பட்ட திருவள்ளுவருக்குத் தத்துவ உலகில் சிறப்பிடம் தராதது வியப்பிற்குரியதே.

(philosophy) அறிவியல் (science) ஆகிய நான்கு படிநிலைகளிலும் ஆழத்து உளவியல் பற்றிய குறிப்புகள் உள்ளன. இந்நான்கின் ஒருங்கிணைப்பால் (integration) மட்டும் ஆழத்து உளவியலைப் புரிந்து கொள்ள முடியும்.

ஆழத்து உளவியல் என்பது நனவிலி மனம் பற்றிய படிப்பினைக் குறிப்பதாகும். அதாவது நனவு மனத்திற்குப் புலப்படாப் பகுதியைப் பற்றியதாகும். உள்ளத்தின் அடிப்பகுதியில் இருக்கின்ற நனவிலி மனத்தை வரையறுக்க முடியாத சூழல் ஒரு காலத்தில் இருந்

ஆழத்து உளவியல் அறிவியல் உளவியலுக்கு மட்டும் உரியதெனக் கருதப்பட்டாலும் கிரேக்கத் தத்துவக் காலத்திலிருந்தே இதன் கூறுகள் காணப்படுகின்றன. பொதுவாக ஆழத்து உளவியல் வரலாறு நான்கு படிநிலைகளைக் கொண்டதாகும். அண்டவியல் (cosmology), சமயவியல் (religion), தத்துவவியல்

தது. தற்போது அறிவியல்முறை உளவியல் நனவிலியைக் கண்டுபிடித்து இருந்தாலும் அறிவியலுக்கு முந்திய உளவியலிலும் நனவிலி பற்றிய மறைமுகக் குறிப்புகள் காணப்படுகின்றன. ஆனால் அவற்றை ஆழத்து உளவியல் என்கிற பொருளில் ஏற்றுக் கொள்வதற்கில்லை. நனவிலியை அறிவியல் முறை

உளவியல் கண்டுபிடித்திருப்பதால் ஆழத்து உளவியலுக்கான வரையறைகளை அறிவியலே கொடுத்திருக்கிறது. ஆழத்து உளவியல் என்பது மனித நடத்தைகளை நனவிலி மனத்தோடு இணைத்துக் காண்கின்ற 'உளவியலின் ஒழுங்கமைவு' (system of psychology) ஆகும். அதாவது உள நிகழ்வுகள் (mental phenomena) நனவுமன வெளிப்பாடுகளாகத் தோன்றினாலும் அவற்றிற்கான காரணிகள் நனவிலியில் உள்ளன என்கிற கருதுகோளுடன் அக்காரணிகளைக் கண்டறியும் தோற்ற உளவியலே (geneticpsychology) ஆழத்து உளவியலாகும். நனவிலி மனம் பற்றிய அகழ்வாய்வை ஆழத்து உளவியல் செய்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனால் நனவிலி மனம் என்பது எதைக் குறிக்கிறது எனும் கேள்வி இங்கே எழுகிறது. உள்ளத்தின் அடிப்பகுதி என்று சொல்லிவிட முடியுமா? எனில் எதிலிருந்து அதன் பரப்பு தொடங்குகிறது எனும் ஐயம் எழுகிறது. காரணம் உள்ளம் என்பது அளந்து பகுக்கின்ற பருப்பொருள் அல்ல. கண்ணுக்குப் புலப்படாப் பொருளே உள்ளமாகும். அப்படியிருக்க நனவிலி என்று எதைக் குறிப்பது?

பொதுவாக நனவிலியை நனவு மனத்தைக் கொண்டு தான் வரையறுப்பர். 'நனவுநிலைக்கு அப்பாற்பட்டவை அனைத்தும் நனவிலி மனம்' என்பது பொதுவான வரையறையாகும். நனவுநிலைக்கு அப்பாற் பட்டவை எவை என்பதைப் புரிந்து கொண்டால்தான் நனவிலியைப் புரிந்துகொள்ள முடியும். இதில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் தத்துவ உலகிலும் அறிவியல் உலகிலும் நிலவி வருகின்றன. நனவு நிலைக்குத் தெரியாத (unknown) அனைத்தும் நனவிலி என்று ஒருசிலர் கூறுவர். அதாவது நனவு மனத்தின் கண்ணுக்குப்புலப்படாதவை என்று சொல்லலாம். மறதிக்குள்ளானவையே (forgotten) நனவிலி என்று வேறு சிலர் கூறுவர். மறதி என்பது அனுபவங்களோடு தொடர்புடையதாகும். பல அனுபவங்களை மனிதன் உள்வாங்கிக் கொள்ள, அவை நாளடைவில் மறந்து போகின்றன. இவ்வாறு மறந்து போனவை உள்ளத்தில்தான் இருக்கிறதேயன்றி மீண்டும் வெளியேறி விடுவது கிடையாது. இது உள்ளத்தின் பண்புகளிலேயே மிகவும் குறிப்பிடத்தக்க பண்பாகும். அதாவது ஒன்றைப் பெற முடியுமேயன்றி எறிய முடியாது. அப்படி உள்வாங்கிக் கொண்ட அனுபவங்களில் பல மறதி நிலைக்கு உள்ளாகின்றன. அதாவது நனவுமனம் உணர முடியாத நிலைக்கு அவை மாறி விடுகின்றன. அவற்றை மொத்தமாக நனவிலி என்று சிலர் சுட்டுவர். வேறு சிலர் 'அமுக்கப்பட்டவையே நனவிலி' (unconscious is repressed) என்று கூறுவர். உள்ளத்தின் இயல்பான உயிரிய வேட்கைகளை (biological desires) வெளிப்படுத்த முடியாமல் அமுக்கி வைக்கப் படும் போது அவ்வேட்கைகள் உள்ளத்திற்குள் ஒடுங்கி விடுகின்றன. அவையே நாளடைவில் நனவிலியாக வடிவெடுக்கின்றன என்று கூறுவர். சமயவாதிகளிடம் கூட ஆழத்து உளவியல் பற்றிய கருத்துக்களுண்டு. அவர்களின் கருத்துக்கள் கடவுளை மையமாகக் கொண்டவையாகும். ஆழ்நிலை உள்ளத்தைக் கடவுளே இயக்குகின்றான் என்பது ஆன்மீகக் கருத்து. இவ்வாறு நனவிலி மனம் கோணங்களில் வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆழ்மனம் ஒன்று இருக்கிறது என்றும் உள்ளத்தின் இயக்கங்களில் அது பெரும் பங்கு வகிக்கிறது என்றும் அறிவியல்முறை உளவியல் கண்டுபிடித்தது என்றாலும், தத்துவவாதிகளிடத்திலும் இக்கருத்து இலைமறை காய் மறையாகத் தென்படுகிறது. ஆழத்து உளவியலை ஏற்படுத்தியவர் சிக்மண்ட ஃப்ராய்ட் என்பது உளவியல் வரலாறு. ஆனால் அவருக்கு முன்பே ஆழ்மனம் பற்றிய சிந்தனைகள் காணப்படுகின்றன. இதை ஃப்ராய்டே சுட்டிக் காட்டுகிறார். தனது எழுபதாவது பிறந்த நாள் விழாவில் பேசுகையில்,

'எனக்கு முன்னால் தத்துவவாதிகளும் கவிஞர்களும் நனவிலி மனத்தைக் கண்டுபிடித்து விட்டனர். அறிவியல் முறைப்படி நனவிலியை புரிந்து கொள்வதையே நான் கண்டுபிடித்துள்ளேன்' என்று கூறுகிறார். எனவே நனவிலி /ப்ராய்டுக்கு முன்பே உணரப்பட்டு விட்டது. வரலாற்றுப்படி நனவிலி பற்றிய கருத்தாக்கம் கிரேக்க தத்துவங்களில் இருந்து வழிவழியாகத் தென்படுவதைக் காணலாம். அறிவியல் முறை உளவியலில் தான் 'நனவிலி மனம்' என்று பெயர் சுட்டப்பட்டது. தத்துவ உலகில் அவ்வாறு சுட்டப்படவில்லை. பிளேட்டோ காலத்தில் கூட நனவிலி மனம் பற்றிய கருத்தாக்கம் இருந்தது. ஹெராகுலிடஸ் கூறும் கருத்து இங்கு நோக்கத்தக்கது. இருண்மையானவர், புதிரானவர் என்றெல்லாம் சுட்டப்படும் ஹெராகலிடஸ் (Heraclitus) நிலையாமைக் கொள்கையை வாழங்கியதால் புகழ் பெற்றவர். அண்டத்திற்கு நெருப்புதான் மூலப் பொருள் எனக் கூறியவர். தற்போது அதிகம் பேசப்படுகின்ற எதிரிடைகள் (antitheses) தொடர்பான எதிர்மைகளின் கூட்டுறவு (unity of opposite) பற்றி அன்றே சிந்தித்தவர். இவர் கூறுகிறார்: 'மனித ஆளுமை எல்லையற்றதென்று' (human personality has no boundaries). இதுகூட ஆழத்து உளவியலைக் குறிப்பதாக உள்ளது. நனவுநிலை நிகழ்வுகள் ஆளுமையைப் புலப்படுத்து

கின்றன என்கிற அளவிற்குச் சிந்தித்த அந்த காலத்தில் ஆளுமையில் எல்லை அதற்கு அப்பாலும் விரிந்துள்ளது என ஹெராகுலிடஸ் குறிப்பிடுகிறார். நனவு வட்டத்தில் உள்ளம் சுருங்கிவிடவில்லை என்பதையே ஹெராகுலிடஸ் கருத்து உணர்த்து கின்றது. சமயவாதிகளிடத்திலும் ஆழத்து உளவியல் தொடர்பான கருத்துக்கள் உள்ளன. உலகின் அனைத்து செவ்வியச் சமயக் கோட்பாடுகளிலும் கொஞ்சம் காண முடிகிறது. ஆனால் அவை கடவுள் எனும் கருத்தாக்கத்தோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. 'நமது செயல்களைக் கடவுள் நம்முள் இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்' என்பது ஆழ்மனக் கருத்தையே வெளிப்படுத்துகிறது. இந்த ஆழ்மனத்தைப் பற்றித் தத்துவவாதிகள் பெயர் சூட்டாமல் மேலோட்ட மாகக் கூறிவிட்டனர். நனவு மனத்தை முதன்மையாகக் கொண்டு உள இயக்கங்களைத் தத்துவவாதிகள் விளக்க முனைந்ததால் நனவிலி மனத்திற்கு முக்கி யத்துவம் தரவில்லை. ஐரோப்பியத் தத்துவவாதிகளான தெக்கார்தே, ஜான் லாக், காண்ட், பெர்கிலி போன் றோர் நனவுப்பாடு (consciousness) கருத்துக்களை மட்டும் வழங்கியுள்ளனர். அறிவியல்முறை உளவியல் பல சோதனைகளை மேற்கொண்டு நனவிலி மனத்தை முழுமையாக அடையாளம் கண்டு உலகிற்கு வெளிப் படுத்தியது. அதுகூடத் தத்துவவாதிகளின் தாக்கத் தினால் விளைந்ததே என்பதை மறுக்க முடியாது. நனவிலி மனத்தை அறிவியல் முறைப்படி உலகிற்கு முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர்.ஃப்பராய்ட் என்றாலும் ஹெராகுலிடஸ் தொடங்கி கோபென்ஹர் (Schopenhauer) நீட்சே (Nietzsche) வழியாக ஃப்ராய்டிடம் வெளிப்பட்டுள்ளது என்றுதான் கொள்ள வேண்டும். இவர்களில் கோபென்ஹர் குறிப்பிடத்தக் கவராவர்.ஜெர்மானிய தத்துவவாதி கோபென்ஹர் (Schopenhauer, 1788 - 1860) நவீன உலகில் குறிப்பிடத்தக்க பாதிப்புகளை ஏற்படுத்தியராவார். காண்டின் வழித் தோன்றலான இவர் 'பொருட்கள் அதனதன் இயல்பில் இருப்பதைப்' பற்றிய விசாரணையில் இறங்கினார். உலகளாவிய இயற்கை விசையின் (nature force) மாறாமையே இதற்குக் காரணம் என்பதைக் கண்டார். காரண-காரிய விதிப்படி (law of causality) அனைத்தும் இயங்குகின்றன என்பதில் நம்பிக்கையுடைய கோபென்ஹர் நிலைம விதியையும் (law of inertia) நிரந்தர விதியையும் (law of permonance) அனைத்து இயக்கங்களுக்கும் பொருத்துகின்றார். பொருட்கள் பகுப்படுபவையே (metter is devisible) என்பதை முன்னிறுத்தி உள்ளத்தின் பிளவை உறுதிப்படுத்துகிறார். மனிதனின் தன்னிலை (Self) பரிவுக்கு உள்ளாவதை முதலில் கூறியவர் இவரே. உலகம் விருப்புறுதிகள் (will) நிறைந்தது எனும் கருத்தாக்கத்தில் நனவிலியை விருப்புறுதியின் பதிலியாகக் (substitute of will) காண்கிறார். கோபென்ஹர் சமயக் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தவர் என்பதால் நனவு நிலைக்கு அப்பால் உள்ள பகுதியை சமய நோக்கில் விவரிக்கிறார். இவர் கருத்துக்களால் தாக்கம் கொண்ட நீட்சே நனவிலி எனும் இருட்டை மேலும் வெளிச்சப் படுத்துகிறார். மற்ற தத்துவவாதிகளை விட நீட்சேவின் தாக்கம் ஃப்ராய்டிடம் பெருமளவில் காணப்படுகின்றது. இதை ஃப்ராய்டே ஒப்புக் கொள்கிறார். 'உட்பொறியால் (intuition) நீட்சே கண்ட உண்மைகளை உறுதிப் படுத்தும் வண்ணம் உளப்பகுப்பாய்வுக் கண்டுபிடிப்பு களில் பல இருந்தன' என்கிறார். ஃப்ராய்ட் கண்ட நனவிலி மனம் அறிவியல் சார்புடையது என்றாலும் தத்துவ வித்துக்களைக் கொண்டது என்பதையும் மறுக்க முடியாது. ஐரோப்பியத் தத்துவ வரிசையில் வில்ஹெம் லிப்னைஸ் (Wilhelm Leibniz) என்பவரே முதன் முதலில் நனவிலித் தொடர்பான கருத் தாக்கத்தை மொழிந்தார். மனத்தில் நனவுநிலை மட்டுமல்லாமல் ஆழ்நிலையும் உள்ளது என்பதை உணர்த்தியவர் லிப்னைஸ் ஆவார். இவரின் கருத்துப்படி நனவுநிலையில் உயர்ந்த அலகுடைய நனவுநிலை (higher degree consciousness) தாழ்ந்த அலகுடைய நனவுநிலை (lower degree consciousness) என இரண்டு உள்ளன. இவ்விரண்டும் புலனறிவின் (perception) அலகுகளே ஆகும். உள்ளத்தின் புலனுணர்வுத் தன்மை தெளிவான நிலையிலிருந்து படிப்படியாகக் குறைந்து தெளிவற்ற நிலையில் அமைந்து விடுகின்றது. அதாவது நனவு நிலையின் மேற்பரப்பிலிருந்து உள்முகமாக ஆழ் நிலையை அடைகிறது. அனைத்துப் புலனுணர்வுகளும் ஆழ்நிலையிலிருந்துதான் வெளிப்படுகின்றன, மேல் மட்டத்தில் தெளிவாகவும் ஆழ்நிலையில் தெளிவற்றும் இருப்பதால் ஆழ்நிலை புலனறிவை நம்மால் உணர முடிவதில்லை. லிப்னைஸ் கூறியவற்றில் 'நனவு நிலைக்கும் நனவிலி எனப்படுகின்ற ஆழ்நிலைக்கும் இடையே இடைவெளி இல்லை' என்பது சிறப்பிற்குரிய கருத்தாக்கமாகும். அதாவது தொடரியலாக மேலிருந்து அடிமட்டம் வரை மனம் ஒருமையாக இயங்குகிறது என்பதை நிரூபித்தவர் லிப்னைஸ். மேற்கூறிய ஆழ்நிலைப் புலனறிவை petites perception என்று லிப்னைஸ் கூறுவார். இதற்கு நனவிலி மனநிலை (unconscious mental state) என்று பொருள். லிப்னைஸின் நனவுப்பாடு அலகுகள் (degrees of

consciousness) பற்றிய கருத்தாக்கம் ஃப்ராய்டுக்கு முக்கியத் தூண்டுகோலாக அமைந்தது. லிப்னைஸ் போல ஹெர்பார்ட் (Herbart) என்பவரும் நனவிலி தொடர்பான கருத்தாக்கத்தை வழங்கியவர்களில் குறிப்பிடத்தக்கவரவார். ஃப்ராய்டுக்கு ஒரு நூற்றாண்டு முன்பே நனவிலியைத் துல்லியமாகக் கணித்தவர் இவர்.

ஹெர்பார்ட் கருத்துப்படி நனவு நிலை எண்ணங் களைவிட ஆழ்நிலை எண்ணங்களே வலிமையானது என்பதாம். ஆழ் மனத்தில் இருக்கிற எண்ணங்கள் நிலைத்தன்மை (statics) உடையவை. உள்ளுக்குள் இருந்து அவை நனவுநிலை வழியாக வெளிப்படுவதால் நனவு நிலையின் இயக்கங்களைத் தமது ஆளுகைக்கு உட்படுத்துகின்றன. இதனால் இரண்டு நிலைகளும் (நனவு நிலை, ஆழ்நிலை) ஒன்றோ டொன்று பின்னிப பிணைந்து செயல்படுகின்றன. அதன்மூலம் ஏற்படுகின்ற இயக்கங்கள் உள்ளத்தின் இயக்காற்றல் தன்மையை (dynamic) உணர்த்துவதாகின்றன. எனவே உள இயக்காற்றல் (psychodynamic) ஆழ்நிலையைச் சார்ந்ததாகும் என்பது ஹெர்பார்ட்டின் கருத்து. ஃப்ராய்டின் உளக் கோட்பாட்டில் இதன் எதிரொலி யைத் துல்லியமாகக் காணலாம். அமுக்கப்பட்ட கருத்துக்கள் விசைகளாக (forces) மாறுகின்றன எனும் ஃப்ராய்டின் சிந்தனை ஹெர்பார்ட்டிடமும் இருந்தது. நவீனத் தத்துவவாதிகளில் நீட்சே (Nietzsche) ஃப்ராய்டியத்தில் மிகவும் குறிப்பிடத் தக்கவராவார். கோபன்ஹெர் தத்துவங்களின் எதிரோலி நீட்சேவிடம் உள்ளது. மனிதனுக்கு அடுத்த பரிணாம வளர்ச்சியாக 'அதிமனிதன்' (supermam) உருவாகப் போகின்றான் என்பதைக் கூறியவர் நீட்சே. இருத்தியல்வாதி (existentialist) சமய எதிரி வாதி (anti - religion) பண்பாட்டின் எதிரி (enemy of culture) நாகரிகத்திற்கு ஆபத்து (danger of civilization) தீவிரச் சிந்தனையாளர் (radical thinker) எனப் பல அடைமொழிகள் கொண்ட நீட்சே (1944-1900) ஹிட்லரை 'ஹிட்-லராக்கி' உலகப் போருக்குக் காரணமாக இருந்தவர் என்று குற்றம் சாட்டப்பட்டவர். மேலும் இவர் நவீன தத்துவ வரலாற்றின் கடைசி நாயகர். ஹெகல், மார்க்ஸ் மறுப்பாளர். உலகத்தால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டவர். இவரது தத்துவங்களில் வீரியம் மிகுதி. குறிப்பாக உண்மையை 'மாயை' என்றார். சாமத்துவத்தின் மீது இவருக்கு நம்பிக்கை இல்லை. இவர் எதிர்ப்பார்ப்பதும் வலியுறுத்துவதும் வலிமையையே. காரணம் அதிகாரத்திற்கான விருப்புறுதிக்கு (will to power) வலிமை அவசியம் என்கிறார். மற்ற தத்துவவாதி களைப் போல இவரும் உள்ளத்தின் மீது விசாரணை நடத்தினார். மனித உள்ளம் பிளவுபட்ட உள்ளமாக (splited mind) இருப்பதை உறுதிபடக் கூறியவர் நீட்சே. அதாவது நனவு மனமும் அதற்கு அப்பாலுள்ள மனமும் வெவ்வேறு முறைமைகளைக் கொண்டவை என்றும், இவற்றின் முரண்பாடுகள் காரணமாகப் பிளவு ஏற்பட்டிருக்கிறது என்றும் நீட்சே கூறுகிறார். இக்கருத் தைக் கோபென்ஹரிடம் இருந்து பெறுகிறார். இருவரும் நனவிலியின் பகுத்தறிவற்ற (irrational) தன்மைகளை விவரிக்கின்றனர். இந்நனவிலியின் அடங்கலாகப் பாலு மையைக் (sexuality) கோபென்ஹரும் மூர்க்கத்தை (aggressive) நீட்சேவும் முன்னிலைப்படுத்துகின்றனர். இவ்விரண்டும் ஃப்ராய்ட் நனவிலியின் அடங்கல்கள் ஆகிவிட்டன. நீட்சேவும் கோபென்ஹரும் நனவிலிக்கு மறைமுகமாகச் சிறப்பைக் கொடுத்தனர் என்பது அவர்களின் எழுத்துகளில் தெரிகிறது.

தத்துவவாதிகள் மட்டுமல்லாமல் அறிவியல்முறை மருத்துவர்களில் சிலர் ஃப்ராய்டுக்கு முன் நனவிலியை மேலோட்டமாக உணர்ந்துள்ளனர். கிரிஸ்டியன் ஹெயின்ரத் (Christian Heinroth, 1733 - 1843) என்பவர் வருத்தம் (melencoly) பற்றிச் சிந்தித்தவர். 'மனிதனின் வருத்தத்திற்குப் பின்புலமாகக் குற்றவுணர்வு (guilt) இருக்கிறது. அந்த உணர்வு இருப்பது நோயாளிக்குத் தெரியாது. அதாவது நோயாளியின் நனவு அறியாத நிலையில் அவனுக்குள்ளேயே குற்றவுணர்வு இருக்கிறது. அந்தச் குற்றவுணர்தான் வருத்தமாக வெளிப்படுகிறது. என்று கிரிஸ்டியன் ஹெயின்ரத் கூறுகிறார். தாமஸ் லேகாக் (Thomas Laycock, 1812-1876) கனவும் பேதலிப்பும் (dream and delirium) நனவிலியின் செயற்பாடுகளால் ஏற்படு பவை என்கிறார். நரம்பு மண்டலத்தின் செயற்பாடுகள் பற்றிய தாமஸ் லேகாக்கின் கண்டுபிடிப்புகள் ஃப்ராய ்டிடம் தாக்கத்தை ஏற்படுத்தின. குறிப்பாக 'நரம்பு மண்டலச் செயற்பாடுகளின் படிநிலையும் உருக் குலையும்' (evolution and dissolution of nervous functions) என்கிற கருத்தாக்கம் ஃப்ராய்டின் சிந்னையில் தாக்கதை ஏற்படுத்தியது. கார்ல் காரஸ் (Karl Carus) என்பவர் மனிதனின் ஆன்மாவை நனவிலி மனமே இயக்குவதாகக் கூறுகிறார்.

இவ்வாறு ஃப்ராய்டுக்கு முன்னர் தத்துவவாதிகளும் அறிஞர்களும் நனவிலியைக் கண்டுணர்ந்துள்ளனர். ஃப்ராய்ட் நனவிலியைக் கண்டறிகின்ற வழிமுறை களைத்தான் கண்டுபிடித்தார். நனவிலி மனத்தை மருத்துவ உளவியலில் அறிமுகப்படுத்தியது ஃப்ராய்ட் என்றாலும் அம்மனத்தை முதன்முதலில் அடையாளம் கண்டது ஜோசப் ப்ருயர் (Joseph Breuer) என்பது

கற்றல், கற்பித்தலை மகிழ்ச்சியாக்கும் துணைக்கருவி

மு. சாந்தகுமாரி,

"கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையார் கல்லா தவர்".

என்ற பொய்யா மொழிப் புலவரின் வாக்கிற்கிணங்க மனிதனை மனிதனாக வாழ வைப்பது கல்வியே.

தத்துவ அறிஞரான ஜெ. கிருஷ்ணமூர்த்தி "கல்வி என்பது தனிமனிதனின் முழு வளர்ச்சியைத், தருவதாக அமைய வேண்டும்" என்று கூறுகிறார். இதன்படி பார்க்கப்போனால் முழு வளர்ச்சி கிடைப்பதற்குக் கல்வியை குழந்தைகள் "கசடற கற்க வேண்டும்". அதற்கு முதலில் அவர்களுக்குக் கல்வி கற்பதில் ஆர்வமும், ஈடுபாடும் தேவையாகும்.

உலகில் வாழ்வதற்குத் தகுதியை ஏற்படுத்தித் தரும் கல்வியை போதிக்கும் உன்னத பணியில், பொறுப்பில் இருக்கும் நாம் அதை முழுவதுமாக உணர்ந்து செய்யும் பொழுது நம்மைமுழுவதுமாக நம்பி நம்மிடையே கற்க வந்த மாணவர்களை நல்ல மாணாக்கர்களாக கல்வியில் தேர்ந்தவராக மாற்ற நம்மால் முடியும்.

கற்பித்தல் என்பது மிக எளிய செயலன்று. இது நம் எல்லோருக்கும் தெரிந்த புரிந்த விஷயமாகும். நாம் கற்பிப்பது மீத்திறன் மிக்க மாணவர்களுக்கு மட்டுமல்ல. நம் வகுப்பில் மிகவும் மெதுவாகக் கற்கும் மாணவனையும் முழுமையாகச் சென்றடைய வேண்டியது மிகவும் முக்கியம். அந்தந்த மாணவர்கள் கற்கும் திறணறிந்து கற்பிக்கும் பொழுதுதான் நாம் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். அவரவர் தன்மைக்கு ஏற்றார் போல் கற்பிக்கும் பொழுதுதான் நம் குழந்தைகள் முழுமையாகக் கற்றுக்கொள்வர். உதாரணமாக நம் வீட்டில் சமையல் செய்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அவரவர்க்கு ஒவ்வொரு தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு இருக்கும். ஒருவருக்கு இனிப்பு பிடிக்கும், மற்றொருவருக்கு அது பிடிக்காமல் போகலாம். அவரவருக்கு ஏற்றாற்போல் சமைக்கும் பொழுது அது எல்லோரையும் சென்றடைகிறது.

அதுபோல் நம் வகுப்பறையில் மீத்திறன் மிக்க மாணவர்களுக்கு ஒரே ஒரு விளக்கமே போதுமானது. அதற்கு அடுத்த நிலையில் இருக்கும் மாணவர்களுக்கு சில எடுத்துக்காட்டுகள் தேவைப்படுகிறது. அதற்கு அடுத்த மாணவர்களுக்கு வேறு சில செயல்பாடுகள் தேவைப்படுகிறது. மிகவும் பின்தங்கிய மாணர்களுக்கு மேலும் பல பயிற்சிகள் தேவைப்படுகின்றன. அவரவர் களின் மனதிற்குப் பிடித்த அவர்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்தில், செய்து பயிற்சிகள் அளித்தால் அவர்களால் அத்திறனை எளிதாக அடைய முடிகிறது.

1996-ல் முதன் முதலில் வட்டம் -5 கரசூர் பள்ளியில் நான் பணிபுரியச் செல்லும் பொழுது அழுத நாட்கள் உண்டு. குழந்தைகளை வகுப்பறையில் அமர வைக்கவே சிரமமாக. இருக்கும் தினமும் பள்ளிக்கும் வரமாட்டார்கள் என்ற சூழலில், அவர்களை என் பக்கம் திருப்புவது எப்படி? இதற்கு விடையாக பாடல், கதை கிடைத்தது. ஆனால் அனைத்து திறன்களையும் இவற்றின் மூலம் கற்றுத்தர முடியவில்லை.

கற்றல் மற்றும் கற்பித்தல் உயிரோட்டமுடையதாகவும், மகிழ்ச்சியாகவும், இருக்கும் பொழுது கற்றல் முழுமை யடைகின்றது. ஆகவே கணிதச் செயல்பாடுகளை அறிமுகப்படுத்தவும், கற்பிக்கவும் விளையாட்டு முறையைப் பயன்படுத்தும்பொழுது கற்றல் திறனை மேம்படுத்த முடியும். சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரும் விரும்புவது விளையாட்டு. விளையாட்டில் ஈடுபடும்பொழுது நமது மனம் நம்மையறியாமலேயே இலேசாகி மகிழ்ச்சியடைகிறது. இத்தகைய விளை யாட்டின் மூலம் கற்பித்தல் நடைபெறும் பொழுது அது மிகவும் உயிரோட்டமுடையதாகவும் அமையும். நமது வேலைப்பளு குறைகிறது.

கணிதத்தைப் பொறுத்தவரை அடிப்படைத் திறன்கள் மிக முக்கியம். அவற்றை நன்கு கற்றுத்தர நான் கையில் எடுத்தது விளையாட்டு. கழித்தல் கணக்கைக் கற்றுத்தர ஆடு, புலி ஆட்டம். புலியாக ஒருவர் நடிக்க ஆடுகளாக வட்டத்திற்குள் இருப்பவர்களை பிடித்து வர வேண்டும். இவ்வாறு விளையாடும்பொழுது மாணவர்கள் கழித்தல் கணக்குகளை நன்கு செய்தனர். புரிந்து கொள்வதும் எளிமையானது. மாணவர்கள் அவர் களாகவே மகிழ்வுடனும் ஈடுபாட்டுடனும் செயல்படுவ

தால் கற்றல் சிறப்பாக அமைகிறது. மாணவர்களின் திறன் மேம்படுகிறது. எனவே விளையாட்டு முறையை அன்றிலிருந்து வகுப்பறையில் பயன்படுத்தத் தொடங்கினேன்.

NCF–2005–ன்படி தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் அதிகமான கற்றல் செயல்பாடுகளில் ஈடுபடும் பொழுதுதான், அவர்களால் அவர்களுடைய அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலையை அறிந்து. அதனுடன் தொடர்புபடுத்தி கணிதச் செயல்பாடுகளை எளிதாக அறிய முடியும். கணித விளையாட்டுக்கள், புதிர்கள், எண் கதைகள் போன்றவற்றின் மூலம் அடிப்படைச் செயல்களை அவர்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்த முடியும். தெரிந்ததில் இருந்து தெரியாததற்குச் அழைத்துச் செல்லும்பொழுது மாணவர்களின் கற்றலும், நமது கற்பித்தலும் எளிதாவதுடன், திறன்மேம்பாடு அடைய நல்லதொரு வாய்ப்பாக அமைகிறது. இந்த விளையாட்டின் மூலம் தாம் படிக்கிறோம் என்பதை அறியாமலேயே கற்றலில் மாணவர்களை முழுமையாக ஈடுபடுத்த முடிகிறது.

15 + 7 என்றால் உடனே விடை கூறாத மாணவர்கள் கூட என்னிடம் ரூபாய் 15 உள்ளது. என் தந்தை மேலும் 7 ரூபாய் தருகிறார். இப்பொழுது என்னிடம் எவ்வளவு இருக்கிறது என்று கேட்கும்பொழுது மிகச் சரியாக விடை கூறுகின்றனர். அதனால் இந்த புதிய விளையாட்டை உருவாக்கி மாணவர்களை கற்றலில் ஈடுபடுத்தினேன். மேலும் நாம் இப்பொழுது CCE முறைப்படி மதிப்பீடு செய்கிறோம். FA(a) செயல்பாடுகள் செய்ய வேண்டியுள்ளது. இந்த வியைாட்டை விளையாட வைக்கும்பொழுது கற்றல் நடைபெறுவதுடன் FA(a) செயல்பாட்டையும் மதிப்பிட முடிகிறது.



இது மாணவர்களை எளிதாக மதிப்பிட நமக்கு அதிக வாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்றது. மாணவர்களும் நாம் கல்வி கற்கிறோம், மதிப்பிடப்படுகிறோம் என்பதை அறியாமலேயே முழுவதுமாக நம்பிக்கையுடன், ஆர்வத்துடன், மனமகிழ்ச்சியுடன் கற்றலில் ஈடுபடுகின்றனர். கற்றலில் பின்தங்கிய மாணவர்களும், ஆர்வத்துடன் கற்றலில் ஈடுபட்டு அவர்கள் பெற வேண்டிய முழு திறனையும் எளிதாக அடைகின்றனர். நூறு சதவீத தேர்ச்சியை அளிக்க முடிகிறது.விளையாடும் முறை

- என்ற இடத்திலிருந்து விளையாட்டை ஆரம்பிக்க வேண்டும். முதலில் Trial round, அனைவரும் ஒவ்வொருவராக dice போட்டு காயை நகர்த்தி விட வேண்டும். Dice–ல் போட்டு, எந்த எண் விழுந்ததோ அந்த எண்ணிற்கு காயை நகர்த்த வேண்டும். (உ.ம்) 4 என்ற எண் விழுந்தால் 4 வரை எண்ணி காயை நகர்த்த வேண்டும். அங்கு வட்டம் சம்பந்தப்பட்ட படமோ அல்லது வட்டமோ இருந்தால் மாணவன் கூட்டல் செயல்பாடு செய்ய வேண்டும். காய் உள்ள எண். 4, dice ல் விழுந்த எண் 4, எனவே 4 + 4 = 8 என விடை சரியாகச் சொல்லி அவன் மேற் கொண்டு காயை நகர்த்தி கல் வைக்க வேண்டும்.
- அடுத்த மாணவன் விளையாட வேண்டும்.
- நாம் நகர்த்தும் காய் என்ற இடத்தில் வந்தால் மாணவன் கழித்தல் செயல்பாட்டைச் செய்ய வேண்டும். Dice – ல் 3 திசைமானி டிசம்பர் 2014 என்ற எண் விழுந்தால் காயை 3 என்ற இடத்திற்கு மாற்ற வேண்டும். 3 - 3 = 0 என சரியாக விடை கூற வேண்டும். அவ்வாறு சரியான விடையைச் கூறி விட்டால் அவனுக்கு (Gold Star) தர வேண்டும். இப்படியே விளையாட்டைத் தொடர வேண்டும். யார் அதிகமாக collect செய்கிறனர் என்பதைக் கொண்டு கழித்தலில் மதிப்பெண் கொடுக்க வேண்டும்.
- இதில் மாணவர்கள் கூட்டல் மற்றும் கழித்தல் கணக்குகளைச் சரியாகச் செய்கின்றனரா என்பதை பொறுத்தே மதிப்பெண் தர வேண்டும். மிக விரைவாகச் செய்யும் மாணவர்களுக்கு முழு மதிப்பெண்ணும், ஓரிரு இடங்களில் தவறு செய்யும் மாணவருக்கு மதிப்பெண் குறைத்தும் போட வேண்டும்.
- இதற்கான விதிமுறைகள் முழுவதும் இதைக் கையாளும் ஆசிரியரைப் பொறுத்தது.

  கழித்தல் கணக்கு செய்யும்பொழுது Gold Star தராமல் பின்னோக்கியும் காயை நகர்த்தச்செய்யலாம். மாணவர்களின் கற்றல் திறன் முழுவதுமாக சோதித்து அறியப்படுகிறது.

- விளையாட்டு ஆரம்பத்திலேயே ஒரு மாணவன் தவறு செய்தால் அவனுக்கு அடிப்படையே புரியவில்லை என்று பொருள். அவனை இந்த ஆட்டத்திலிருந்து வேறொரு செயலில் ஈடுபட வைத்து கற்றல் நடைபெற உதவ வேண்டும். இதற்குப் பயன்படுவதே கற்றல் பலகை மற்றும் கற்றல் செயல்பாட்டு அட்டை.



கற்றல் பலகை

- மாணவன் கூழாங்கல் அல்லது மணி எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் கற்றல் செயல்பாட்டு அட்டையை எடுத்துக் கொள்ள வேண்டும்.

2+0=	4+0=	6+0=
2+1=	4+1=	6+1=
2+2=	4+2=	6+2=
2+3=	4+3=	6+3=
2+4=	4+4=	6+4=
2+5=	4+5=	6+5=
2+6=	4+6=	6+6=

செயல்பாட்டு அட்டை

- Dice – ல் 6 எண்களே இருக்கும் ஆகையால் 6 வரை கொடுக்கப்பட்டுள்ளது. 2 என்ற இடத்திலேயே மாணவன் தவறு செய்து விட்டால் அதற்குரிய மேல் கூறப்பட்ட அட்டைகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.



- இப்படியே கற்களை அடுக்கி அடுக்கி விடையை எண்ணி எழுதிக் கூட்டல் செயற்பாடு அட்டை முழுவதையும் செய்ய வேண்டும். இவ்வாறு செய்யும் பொழுது மாணவன் கூட்டல் கணக்கை நன்கு புரிந்து கொள்ளமுடிகிறது. அடிப்படை நன்கு தெரிந்த கொள்ளப்படுவதால்





கூட்டல் கணக்குகளைச் சரியாகச் செய்ய முடியும். பின்னர் அவன் அட்டத்தைத் தொடர முடியும்.

- இதைப் போலவே கழித்தல் செயல்பாட்டு அட்டையைச் செய்ய வேண்டும்.
- கட்டத்தில் எண்களை அந்தந்த வகுப்புக்கு ஏற்றார்போல் மாற்றிக் கொள்ளலாம். மேல் வகுப்பிற்குச் செல்லும் பொழுது 100க்க மேலே எண்களை மாற்றிக்கொள்ளலாம். Dice – ல் எண்களை மாற்றிக் கொள்ளலாம். இது அந்தந்த ஆசிரியரைப் பொறுத்தோ வகுப்பைப் பொறுத்தோ அமைகிறது.

- இப்பொழுது பலகையில் அவன் கற்களை வைத்து விடையெழுதவேண்டும். பயன்கள்

பொலிஸ் வேலைக்குத் துப்பாக்கி, தையல் தைப்ப வருக்கு ஊசி நூல், தச்சருக்கு வாள், விவசாயிக்கு கலப்பை என ஒவ்வொரு தொழிலுக்கும் அடை யாளமாக, துணையாக, ஒரு கருவி தேவைப்படுவது போல் ஆசிரியராகிய நமக்கு கற்பிக்க துணைக்கருவி தேவை. ஒவ்வொரு பாடத்திற்கும், ஒவ்வொரு திறனுக்கும் தனித்தனியே துணைக்கருவி அமைவதை விட ஒரு துணைக் கருவியின் உதவியுடன் பல திறன்களை மேம்படுத்த உதவும் வகையில் இருந்தால் அது மகிழ்ச்சியே. அது மட்டுமின்றி கற்றல் மற்றும் கற்பித்தலுடன், மதிப்பீடும் நடைபெறுவதாக தனித்தனியாகவோ, குழுவாகவோ மதிப்பீடு செய்யலாம். மாணவர்கள் தாங்கள் மதிப்பிடப்படுகிறோம், தேர்வு எழுதுகிறோம் என்பது தெரியாமலேயே தேர்வுக்கு உள்ளாக்கப் படுகின்றனர். ஆகவே CCE என்பதன் முழுமையான நோக்கமும் இதன் மூலம் நிறைவேற்றப்படுகிறது.

மேலும் இதன் வழிமுறைகளும், விதி முறைகளும் கையாளும் ஆசிரியரைப் பொறுத்தே அமைவதால் அனைத்து ஆசிரியா்களும் இதைப் பயன்படுத்த முடிகிறது. உதாரணமாக, கூட்டலை மட்டுமே இதில் மதிப்பிடப் போகிறேன்; கற்பிக்கப் போகின்றேன் என்றால் அதை மட்டுமே பயன்படுத்திக் கொள்ள லாம். வகுப்பறையைக் கையாளும் ஆசிரியருக்கு தன் குழந்தைகளைப் பற்றி நன்கு தெரியும். ஒரு மாணவன் இரண்டு அல்லது மூன்று படிகளிலேயே பத்து கணக்குகளை மிகச் சரியாகச் செய்துவிட்டான் என்றால் உடனே 10 மதிப்பெண்கள் கொடுத்து விடலாம். மேலும் பல கணக்குகள் செய்ய வேண்டும் என்றால் இறுதிவரையிலும் விளையாடலாம். இதில் வெற்றி தோல்வி இல்லை. மாணவர்களின் மனம் பாதிப்படைய வாய்ப்பில்லை.

இத்துணைக்கருவியைப் பயன்படுத்தும் வேறு சில வழிமுறைகள்

- ♣ கட்டங்களில் கொடுக்கப்பட்டுள்ள எண்களில் 1 முதல் 100 வரை எண்களுக்குப் பதிலாக வேறு எண்களை மாற்றி மேல் வகுப்புகளுக்குப் பயன்படுத்தலாம்.
- ♣ Dice – ல் எண்களை மாற்றி, கூடுதல் இலக்கங்களுடன் மேல் வகுப்புகளுக்குப் பயன்படுத்தலாம்.
- ♣ shapes அறிமுகப்படுத்த முடியும். மதிப்பிட முடியும்.
- ♣ Patterns அறிமுகப்படுத்தலாம்.
- ♣ ஒற்றை எண்களை எளிதில் அறிமுகப்படுத்தி, மதிப்பிட முடியும் (உ.ம்) சதுரம் வருகின்ற எண்களை எழுது.
- ♣ இரட்டை எண்களை எளிதில் அறிமுகப்படுத்தி மதிப்பிட முடியும் (உ.ம்.)வட்டம் வருகின்ற எண்களை எழுது.
- ♣ ஏறுவரிசை, இறங்கு வரிசை அறிமுகப்படுத்தி மதிப்பிட முடியும் (உ.ம்) வட்டம் வரக்கூடிய எண்களை எழுதி ஏறுவரிசை மற்றும் இறங்கு வரிசையில் எழுது.
- ♣ இதைப்போலவே பெரிய எண், மற்றும் சிறிய எண் வட்டமிடச் செய்யலாம்.
- ♣ ஒவ்வொரு கணக்கையும் சரியாகச் செய்து விடையைச் சரியாகச் சொல்லும்பொழுது போலி ரூபாய் தாள்கள் மற்றும் நாணயங்கள் அளித்து money அறிமுகம் செய்யலாம். Gold Star தருவதற்குப் பதிலாக ரூபாய்த்தாள் தந்து (Money) கூட்டல், கழித்தல் செய்யச் செய்யலாம்.
- ♣ வாழ்க்கைக் கணக்குகள் தரலாம். (உ.ம்) Chess Board ன் விலை ரூ.150 – விலை ரூ.75 எனில் மொத்த விலை என்ன போன்ற கணக்குகள் தரலாம்.
- ♣ விளையாட்டுப் பலகையில் வடிவங்களை மாற்றிக் கொள்ளலாம். எண்களை மாற்றிக் கொள்ளலாம். தாவரங்கள், பறவைகள், விலங்குகள் போன்றவற்றைப் பயன்படுத்தி அனைத்துப் பாடங்களுக்கும் பயன்படுத்தலாம். இவ்வாறு பல வகைகளில் பயன்படும் இந்த பலகையைப் பள்ளிக்கு ஒன்று என செய்து விட்டால் போதும். அனைத்து ஆசிரியர்களும் பயன்படுத்தி வேலைப்பளுவை குறைத்துக்கொள்ள முடியும்.

விளையாட்டிற்கான விதிமுறைகள்

1. இந்த விளையாட்டை 6 முதல் 8 மாணவர்கள் வரை விளையாடலாம்.
2. முதலில் Trial Round அனைவருக்கும் தரப்பட வேண்டும்.
3. மற்றும் வட்டம் சம்பந்தமான இடத்திற்கு காயை நகர்த்தும் பொழுது கூட்டல் செயல்பாடு செய்ய வேண்டும்.
4. கூட்டல் சரியாகச் செய்து விட்டால் அவன் காயை நகர்த்தி, வெற்றி இலக்கை நோக்கிச் செல்ல வேண்டும்.
5. சதுரம் சம்பந்தமான இடத்திற்கு காயை நகர்த்தும் பொழுது கழித்தல் செயல்பாடு செய்ய வேண்டும்.
6. கழித்தல் செயல்பாட்டைச் சரியாகச் செய்தால் (Gold Star) தரவேண்டும்.
7. மாணவன் முதலிலேயே தவறு செய்து விட்டால் அவன் ஆட்டத்திலிருந்து விலகி செயல்பாடு அட்டை எடுத்துச் செயல்பாடுகளைச் செய்து முடித்தபின் ஆட்டத்தை மறுபடியும் முதலிருந்து தொடர வேண்டும்.
8. 100ஐத் தாண்டி வெற்றி இலக்கைத் தொட்டால் விளையாட்டு நிறைவு பெறும்.

ஆசிரிய உளவியலறிஞர்

கமலம் சங்கர்

கழிந்துள்ளன. மாற்றம் இல்லாமல் இருக்க முடியுமா? இரண்டு வயதுக் குழந்தைக் கும் இருபது வயது இளை ஞனுக்கும் எத்தனை வேறு பாடு. வளர்ச்சி இல்லாமல் இருந்திருந்தால் அது குறை அல்லவா? உடற்குறை, உள்ளத்தின் குறை எதுவும் இல்லாமல் வாழ்க்கை முறையை அறியவும் ஏற்கவும் பொருந்தும் மனநிலை அமையப் பெற வேண்டும். இந்த நிலையே மாணவனின் மனநலச் சிறப்பு.

கல்வி வளர்ச்சி உள்ளம் சார்ந்தது என்றால் கல்வித்தடையும் உள்ளம் சார்ந்ததே. மாணவரிடம் அக்கறை சிறக்க வேண்டும். எளிதாகக் கற்பிக்கும் ஆர்வம் பொங்கவேண்டும்.

மாணவர்கள் எந்திரங்கள் அல்லர் என்னும் உணர்வு வேண்டும். பட்டனைத் தட்டினால் விளக்கு எரியும் பாங்கில் எதிர்பார்க்ககூடாது. மாணவரின் மனவுலகம் வகுப்பைக் கவனிக்கும் வகையில் ஈர்க்கப்படவும் வேண்டும். உருவாக்கப்படவும் வேண்டும். நிலம் நீர் ஊற்றி பதப்படுத்தப்பட்டாலே விதை முளைக்கும். வாழ்க்கையின் பொருத்தப்பாடே மனநலம். தன்னையும் தான் சார்ந்த சூழலையும் உணர்வது, உயர்த்துவது, இயைவது, இயைய வைப்பது இணைவது, இணைய வைப்பது.

சமுதாயத்தில் மாணவர் காணும் போராட்டம் மனத்தில் கேள்விக்குறியாக எழும்போது அவர்களின் மனம் பாதிக்கப்படும். படிப்பதற்கும் நடைமுறைக்கும் சம்பந்தம் இல்லையே என்று சிந்திக்கும்."யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பாடம் கற்பிக்கும் மொழி யாசிரியர் "தனி மாநிலம் வேண்டும்" என்று போராட்டம் நடத்தும் வெளியுலகை எப்படி விளங்க வைக்க முடியும்? உலகில் மாற்றம் நிகழ்ந்துக்கொண்டேதான் இருக்கும். இரண்டாம் நூற்றாண்டுக்கும் இருபத்தோராம் நூற்றாண்டுக்கும் இடையில் எத்தனை நூற்றாண்டுகள்

பிரச்சினை இல்லாத வாழ்க்கை இல்லை. ஆனால், அது தீர்க்கப்படவேண்டும். அதன் நுனி அறியப்பட வேண்டும். பிரச்சினைக்குரிய காரணம் அறியபப்பட்டாலே தீர்வு காண முடியும்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்புச் செயல்" என்கிறார் வள்ளுவர்.

மருந்து என்னும் அதிகாரமே உணவு முறையை முதன்மைப் படுத்துகின்றது.உண்பதை உடலுக்கு ஏற்றதா என அறிந்து உண்டால் உடலுக்கு மருந்து என்பது வேண்டாம். உண்ட உணவு செரித்தப் பின்னர் உண்க: அதுவே நீண்ட நாள் வாழும் வழி.உணவு செரித்ததை உணர்ந்து, உடலுக்கு மாறுபாடு இல்லாத உணவை உண்க.உண்ணும் உணவின் தீமையை உணாரமல் உண்பவன் அளவற்ற நோய்க்கு உட் படுவான். என்பன போன்ற வள்ளுவரின் கருத்துக் களோடு, ஆசிரியர் மாணவனுக்கு அறிவாகிய உணவை ஊட்டும் முறை, மாணவன் அதை ஏற்கும் வகை என்னும் இரண்டையும் பொருத்திப் பார்ப்போமா?

எந்த வகுப்புக்கு எதை எப்படி விளக்கவேண்டும் என்பதை ஆசிரியர் உணர வேண்டும் அத்தகைய உணர்வுடன் ஆசிரயிர் கற்பித்தால், கற்பித்தலில் தோல்வி ஏற்படாது. தாம் முன் கற்பித்துப் பாடங்கள் மாணவர்க்குப் புரிந்துள்ளதா? மனத்தில் தங்கியுள்ளதா? நினைவில் நின்றுள்ளதா என்பதைப் பூரணமாக அறிந்தப்பின்னர் தொடர்ந்து கற்பிக்க வேண்டும்.

பாடத்திட்டம் வகுத்துள்ள படி பாடத்தை முடிப்பதில் குறியாக இருந்து வேகம் காட்டினால், விவேகம் எங்கே என்று தேட வேண்டி நேரும். மாணவர் சார்பிலும் ஆசிரியர் முன்பு கற்பித்த பாடக்கருத்துக்கள் தமக்குப் புரிந்துள்ளனவா? மனத்தில் பதிந்துள்ளனவா? ஞாபகத்தில் தங்கியுள்ளனவா? என்று சோதனை செய்துக்கொள்ளும் பழக்கம் பயிற்சியாக வேண்டும்.



மேற்கண்ட படி நிலைகள் அமைந்தாலே கற்பித்தலும் கற்றலும் பொருந்தி இணைய முடியும். இவை இணைந்தாலே கல்வியின் பயன் விளைய முடியும்.

மாணவர் தம் ஊக்கச் செயல்களை ஆசிரியர் போற்ற வேண்டும். அப்போதே அவர்தம் ஆளுமை உருவாகும். ஆசிரியர் தனித்தனியே மாணவர் ஒவ்வொருவரது ஊக்க அளவை உணர வேண்டும். அதற்கு அவர் மனத்தில் அன்பு ஊற்றெடுக்க வேண்டும். பரிவு பரவியிருக்க வேண்டும்.

ஊக்கத்திறனும் ஆக்கத்திறனும் உடைய மாணவன் ஒருவன் தயக்கம் காரணமாக எதையும் வெளிக் காட்டாமல் இருக்கக்கூடும். வகுப்பில் எந்தக் கேள்விக்கும் பதில் கூறாமல் எந்தக் கேள்வியையும் கேட்காமல் - பொதுவாக எந்த பங்கேற்பும் இல்லாமல் ஆனால் தேர்வில் முதல் மதிப்பெண் பெறக்கூடிய மாணவரும் வகுப்பில் இருப்பர். கேள்வி மேல் கேள்வி கேட்டு, ஆசிரியரை வியக்கவைத்து, தேர்வில் மிகக் குறைவான மதிப்பெண் பெற்று , அதே வியப்பை அவருக்கு தரும் மாணவரும் இருப்பர் இந்தச் சூழ்நிலையில் ஆசிரியர் பொறுப்பு என்ன?

தயங்கும் மாணவன் தயக்கத்தை களைய வேண்டும். தயக்கத்தின் காரணம் பலவாக இருக்கலாம் அவை: கூச்ச சுபாவம் மற்றவர் நம்மை பார்ப்பாரோ என்னும் உணர்வு மேலோங்குதல், விடை பற்றிய ஐயம், மற்றவர் கேட்க கூறும்போது தவறு நேர்ந்தால் என்ன செய்வது என்னும் உணர்வு, அவமான உணர்வு பற்றிய கற்பனை, கேள்வி கேட்டோ பதில் கூறியோ நாம் நம் அறிவை வெளிப்படுத்த வேண்டிய தேவை யில்லை. நமக்கு வேண்டியது மதிப்பெண் ஒன்றுதான் என்னும் எண்ணம் என்பன போலப் பல அமையலாம்.

முதல் ஐந்து காரணங்களின் விளைவை ஆசிரியர் மாணவரிடம் உரையாடி அவரது மனப்பான்மையால் அவர் பெற வேண்டிய பாராட்டை இழக்கிறார் எனப் புரிய வைப்பதன் மூலமும், மாணவர் பங்கேற்பே வகுப்பின் உயிர்த்துடிப்பு என்பதை உணர வைப்பதன் மூலமும் மாற்றலாம். ஆனால், கடைசிக் காரணத்தை உடைய மாணவர் முரட்டு மனத்தினர்: ஆணவம் கனலும் மனத்தினர்: பணிவு இல்லாத போக்கினர். சுருக்கமாக கூறினால் முரட்டுக்காளைகள் இத்தகை யவரிடம் மனமாற்றம் ஏற்படுத்த முயலும் ஆசிரியர், நிச்சயமாகப் பொறுமையின் சிகரத்தில் இருப்பவரே.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்னும் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். அத்தகைய மாணவர் தம் பலம் எது பலவீனம் எது என்பதைக் கண்டறிந்து பாதை தெரிந்து பயணம் மேற்கொள் வதுபோல அந்த வகையில் அவர்களை அணுக வேண்டும்.

ஒருவரது திறமை, ஆசை, தன்னுணர்நிலை, அடைய விரும்பும் குறிக்கோள்நிலை என்பவற்றுக்கிடையில் சரியான சமன்பாடு இருக்கவேண்டும். இச்சமன்பாடு இல்லையேல் மனப்பிறழ்வு ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. அப்போது முரட்டுத்தனம் மேலோங்கி நிற்கும். ஆற்றலைப் புதைத்து விடும். மூடி வைக்கப்பட்ட ஆற்றல், அதன் வெற்றி அளிக்கும் பாராட்டை ஏற்கும் வாய்ப்பினை இழந்து, மனரீதியாக தளர்வடையும். வெளியில் புலப்படாத அந்த தளர்வு நாளடைவில் வெறுப்பின் வழியிலே மனத்தைச் செலுத்தும். இங்குத் தன்னுணர்நிலை ஏற்பட வழி உருவாவது எப்படி?

வகுப்புப் பங்கேற்பில் முதலிடம் பெற்று, மதிப்பெண் பட்டியலில் கடைசியிடம் பெறுகின்ற மாணவர் வகை உழைப்பின் உயர்வை உணர வேண்டியவர்.

எழுத்துப் பயிற்சி இல்லாதது, நினைவுத்திறன் குறைப்பாடு, காலம் போற்றாத சோம்பேறித்தனம், மதிப்பெண் பற்றிய அக்கறையின்மை, உடனடியாகப் பெறும் பாராட்டால் ஏற்படும் திருப்தி என்பவை, இத்தகைய மாணவர்களை உருவாக்கலாம். வகுப்பில் பெறக்கூடிய பாராட்டும் மாணவர்கள் காட்டும் வியப்பும் சிறப்பு எனினும், மதிப்பெண் மாணவர் தரத்தையும் உழைப்பையும் நிரூபணம் செய்யும் அத்தாட்சி என்பதைப் புரியவைக்க வேணடும்.

எவர் எப்படி இருந்தால் என்ன? நமது கடமை கற்பித்த லோடு முற்றுப் பெற்றது எனக் கருதும் ஆசிரியர் உளவியலாளராக இருக்கமுடியாது. எப்போதும் எந்த வகுப்பிலும் முதல், இடை, கடை மாணாக்கர் உண்டு. அதே போல , நிலைமாறும் இயல்பினரும் இருத்தல் இயல்பே.

ஒவ்வொரு மலராய் எடுத்த மாலை தொடுப்போர் அரும்பு நிலை மலரையும் சேர்த்தே தொடுப்பர். அத்தகைய அரும்புகளுள் சில மலரும்: ஒரு சில அரும்புகள் மலரவே மலராது. அரும்பாகவே மாலை யில் இடம்பெறும். ஒவ்வொரு வகுப்பு மாணவரும் மாலையே. மாணவர்களுல் உயர்வு மனப்பான்மை அல்லது தாழ்வு மனப்பாண்மையில் ஊறியிருப்பவர் அரும்பு நிலை ஒத்தவர். ஆசிரியரின் உளவியலறிவு மட்டுமே அரும்பு நிலை மாணவரை மலரச் செய்ய முடியும் பாட அறிவு நிலையின் கதவுகள் திறக்கப்பட்டிருந்தாலும், ஆசிரியர்தம் உளவியல றிவுநிலைக் கதவுகள் திறக்கப்பட்டிருந்தாலே, மாணவர் காற்றாட உலாவ முடியும். தூய்மையான உயிர்க் காற்றை ஆற்றலாகப் பெறமுடியும்.

தனியான அக்கறை, தனியான கவனிப்பு, பிரச்சினை என்ன என அணுகும் எளிமை , பிரச்சினை தீர இது வழி எனக் காட்டும் அனுபவம், “உன் எதிர்கால வாழ்வு பிரகாசிக்க நான் என்ன செய்யவேண்டும் சொல்” என்னும் தோழமை என எல்லா நேரங் களிலும் மாணவர் மனங்களில் ஆசிரியர் இதமான நினைவாக இருக்கவேண்டும். அணுகுவதற்குரிய எளிமையுடன் இருக்கவேண்டும்.

“ காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்”

என்னும் குறள் இறைமாட்சிக்கு மட்டுமல்ல: ஆசிரியர் மாட்சிக்கும் உரிய ஒன்றாகும்.

பாராட்டா? பலர்முன் பாராட்டுங்கள். தவறு சுட்டலா? தனியாக அழைத்துக் கூறுங்கள். பலர் செய்யும் ஒரு தவறா? வகுப்பில் பொதுவாக 'இப்படி நடப்பது தவறு. தீமை தரும்' என்று கூறும்போதே தவறு செய்யக்கூடிய மாணவர்களை நோக்கிப் பார்வையைத் திருப்புங்கள். அவர்கள் தலை தாழும். தவறை உணர்ந்து விட்டார்கள் என்று பொருள். தொடர்ந்து கண்காணியுங் கள். எங்குச் சென்றாலும் அவர்களை உங்கள்பார்வை .தொடரட்டும். தவறுகளும் குறையும் நாளடைவில் மறையும்.

இது சாத்தியமா? நிச்சயமாக, ஆனால், ஆசிரியருக்கு வேண்டியது நிலத்தின் பொறுமை.மாணவர்கள் எந்நிலையினராயினும், உணர்ச்சி நிறைந்தவரே. மேலோங்கிய உணர்ச்சியலைகளில் ஆசிரியரின் கருத்துக்கள் கைக்கோர்க்கும்போது எதிர்பார்க்கும் மாற்றத்தில் எந்தத் தடையும் இராது.

ஒவ்வொரு மாணவனையும் வாழ்க்கைக்கு தயார் செய்யும் பொறுப்பு சமுதாயக்களத்தில் வீரத்துடனும் நம்பிக்கையுடனும் நடமாடச் செய்யும் பொருப்பு ஆசிரியருக்கு உண்டு. அறிவு வளர்ச்சியுடன் அனுபவத்தெளிவு காணும் எதிர்பார்ப்புடன் கல்வி கற்பிக்கப்படவேண்டும். பள்ளிப் படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு என்னும் எல்லா நிலைகளிலும் அந்தந்த நிலைக்கேற்ப அவரது வழிக்காட்டல்கள் அமைய வேண்டும். மனப்பாடம் செய்து முதல் வகுப்பில் தேர்ச்சி பெறும் மாணவர், உலகத்துக்கு பயன் தருவதில் முன் நிற்கக்கூடும். அவரும் சமுதாயக் களத்தில் உறுதியோடு கால்பதிப்பார். இந்த உண்மை உணர்த்தப்பட வேண்டும். மதிப்பெண்ணை மட்டும் வைத்து மாணவர்களை எடைப்போடும் மனநிலை, ஆசிரியர்களிடம் இருத்தலாகாது. அப்படியொரு நிலை உறுதிப்படுத்தப்பட்டுவிட்டால் சிறந்த மதிப்பெண் பெறுவதற்காக மற்றவர்களைப் பார்த்து எழுதுவது, ஆள் மாறாட்டம் செய்வது, பார்த்து எழுதும் நோக்கத்துடன் சிறுதாள்களைத் தேர்வறைக்குக் கொண்டு செல்வது என்பன போன்ற தவறான செயல்களில் ஈடுபடுவதற்குத் தூண்டப்படுவர்.

ஒருமுறை தவறு செய்யும் மாணவரையும் அறிவுரை வழங்குவதன் மூலமும் அக்கறையுடன் கவனிப்பதன் மூலமும் மாற்றவேண்டும்'. நிரந்தரமான குற்றவாளி என ஆக்கிவிடக்கூடாது. தவறு செய்வது மனித இயற்கை. அதைத் திருத்திக்கொள்ள அவகாசம் தரவேண்டும். மதிப்பெண்ணுக்குத் தரப்படும் முக்கியத்துவம் அல்லவா அம்மாணவரை நெறிப்பிறழத் தூண்டுகிறது? செய்முறைத்திறன், விளையாட்டு, கலை, ஈடுபாடு, பொதுஅறிவு போன்ற

வெற்றிப்படி ஆகலாம், தோல்வி வெற்றியின் ஆரம்பமே என்பன போன்ற கருத்துக்கள் பதிய வைக்கப்பட்ட மாணவ மனம், விரக்தி மனப்பான்மையிலிருந்து தப்பித்துக்கொள்ளும். தாழ்வு மனப்பான்மையை விரட்டிவிடும். எந்த நிலை மாணவரும் அவர்தம் செயலைப்பற்றிய விளைவை உணர்ந்தவராக உருவாக்கப் படவேண்டும். கீழ்ப்படியாமை, ஒன்று சொன்னால் இன்னொன்றைச் செய்வது, தவிர்க்குமாறு கூறுவதைச் செய்து எதிர் விளைவை நோக்குவது, எதிர்த்துப் பேசுவது என்பன போன்ற ஏதாவது ஒரு செயல் மூலம் மனப்போராட்டம் உடைய மாணவர் தன்மை வெளிப்படுத்தவே செய்வர்.

பலவகைப் பரிமாணங்களும் போட்டித்தேர்வு, நேர்முகத் தேர்வு, பணி வாய்ப்பு என்பவற்றுக்குச் சேர்க்கப் பட்டால், மாணவர்களுக்கு ஆசிரியர்தம் வழிக் காட்டுதலை எதிர்பார்க்கும் மனநிலை உருவாகும். ஆசிரியர்- மாணவர் உறவில் உன்னதமான மாற்றம் ஏற்படும். எந்தக் கல்வி நிறுவனமும், எந்த நிலை யிலான ஆசிரியரும் அதிகாரம் ஒன்றினால் மட்டும் மாணவரை உருவாக்க முயலுவது கூடாது.. அம்முறை இயலாததும்கூட கல்வி நிறுவனமும் ஆசிரியரும் தமது நன்மைக்கும் முன்னேற்றத்துக்கும் உரியதை மட்டுமே செய்வதான நம்பிக்கையும் புரிதலும் மாணவர்களுக்கு ஏற்பட்டுவிட்டால், பிரச்சினைக்கு இடம் இல்லாமற் போகும்.

சமுதாயத்தில் சாதி அடிப்படையிலான சலுகைகள் ஒரு சராசரிடையே விரக்தியையும் நம்பிக்கையற்ற மனநிலையையும் உருவாக்க, இன்னொரு சராசரிடையே 'தகுதி இல்லாவிட்டாலும் எல்லாம் எளிதாக கிடைத்து விடும்.' என்னும் மெத்தனத்தையும் நம்பிக்கையையும் உருவாக்கியுள்ளது. அரசியலமைப்பின் போக்கு மாண வரிடையே நடுநிலையுணர்வுடன் உணர்த்தப்பட வேண்டியதும் தற்போது எழுந்துள்ள கட்டாயத் தேவையாகும்.

தோல்வியாலும், வாய்ப்புத் தவறுவதாலும் ஏற்படக் கூடிய மன அதிர்ச்சி, 'கீழே விழுவது எழுவதற்கே' என்னும் அறிவுரை கூறும் ஆசிரியர்களால் மாற்றப் படக்கூடியதே.
தோல்விக்கு காரணம் என்ன? அடுத்த இலக்கு

மாணவர்தம் குடும்பச்சூழலை அறிவது, பிரச்சினை இருந்தால் அது மாணவரைப் பாதிக்கும் விதம் பற்றிக்கனிவுடன் கேட்பது, அன்பு, பாசம், பெற்றோரின் கவனிப்பு இல்லாத சூழலாக இருந்தால், குடும்பத்தாரை அழைத்துப் பேசுவது, அளவுக்கு அதிகமான செல்லம் பெறும் சூழலாக இருந்தால், அது கட்டுப்பாட்டை எதிர்க்கும் என்பதைப் பெற்றோருக்குப் புரிய வைப்பது, அதிகமான கண்டிப்பும் மாணவரை நெறிபிறழ் நடத்தைக்கு உட்படுத்தும் என உணரச்செய்வது என்பன போன்று ஆசிரியரின் நட்புக்கரம், பெற்றோர், குடும்பத்தினர் என்போரை நோக்கி நீள வேண்டும். வீட்டுக்கடமையும் கல்வி நிறுவனக்கடமையும் சிறந்த நல்லொழுக்கம் உடைய வாழ்க்கை மதிப்பு உணர்ந்த குடிமகன்களை உருவாக்குவதே அல்லவா? அந்த அளவில்: பெற்றோர் வீட்டில் ஆசிரியர் பங்கினையும், கல்வி நிறுவனங்களில் ஆசிரியர், பெற்றோர் பங்கினை யும் ஆற்றுவதற்கு உளவியலறிவு அடித்தளமாகும். அப்போதுதான்: மாணவ உருவாக்கம் என்னும் அணி மாடம் உருவாகும்.
ஆசிரியர் பொன்மலர் எனில்: உளவியலறிவு சார்ந்த ஆசிரியர்: வாசனை பரப்பும் பொன்மலர் என்பது பொருந்தும்!

அதிபர் தரம் 111 போட்டிப்பரீட்சைக்கான வழிக்காட்டல்.

பா.தனபாலன் (உபபீடாதிபதி நிதிநிர்வாகம்)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

உலகம் எப்போதும் பௌதீக ரீதியாகச் சுருங்குவதில்லை. ஆனால் அறிவின் வளர்ச்சியால் வியத்தகு விஞ்ஞான உத்திகளால் மனிதன் உலகை ஒரு கைப்பற்றுப்போல் கையாளத்தொடங்கி விட்டான். நாளும் வளர்ந்து வரும் பொது அறிவு விடயங்களும் அவற்றின் பயன்பாட்டுச் செய்திகளும் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிக்கைகள் , இணையவழி, சஞ்சிகைகள் வாயிலாக மக்களுக்கு வந்த வண்ணமுள்ளன. ஆனால் அவை எல்லாவற்றயைும் உள்ளத்தில் பதிய வைக்க முடியாத நிலை தோன்றுகின்றது. அறிய வேண்டியவற்றை தேடும் நேரத்தில் விபரமாக கிடைப்பதில்லை.

இவ்வகையில் போட்டிப் பரீட்சையை எதிர்கொள்வோர் உலகளாவிய ரீதியிலும், இலங்கையிலும் சமகால .அரசியல், பொருளாதாரம், சமூகநிலை, விஞ்ஞான தகவல் தொழில்நுட்பம், சூழலியல் வரலாறுகள் கல்வி, விளையாட்டுத்துறை, இலக்கியம், பொதுவிடயங்கள் தொடர்பான விடயங்களைச் சேகரித்தல், தொகுத்தல் பகுத்து ஆராய்தல் விமர்சனம் செய்தல் என்ற நிலையில் ஆயத்தப் படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும்.

உதாரணமாக உலக அரசியலை பாதிக்கும் 1991 இல் சோவியத் ஒன்றி யத்தின் வீழ்ச்சி, 2001 இல் அமெரிக்க இரட்டை கோபுர தாக்குதல் மற்றும்

- ❖ போர்களால் சலிப்படைந்த அமெரிக்க , நேட்டே நாட்டு மக்கள்
- ❖ நலிவடைந்து வரும் அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம்.
- ❖ உலக அரங்கில் பல்வேறு துறைகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் சீனா, ரஸ்யாவின் செல்வாக்கை மீண்டும் நிலைநிறுத்த தலைவர் விளாடிமீர் புட்னின் செயற்பாடுகள்.
- ❖ பன்முக ரீதியில் முன்னேறிவரும் இந்தியா மற்றும் ஆசிய நாடுகள், சர்வாதிகார ஆட்சிகளால் வெறுப்படைந்து வரும் ஆபிரிக்க நாடுகள்
- ❖ ISIS தீவிரவாத அமைப்பின் நடவடிக்கைகள் என விரிவடைந்து செல்கின்றன.

இவ்வாறே நல்லாட்சி, நல்லாட்சிகளின் பண்புகள் , உதாரரணங்கள் என இத்துறை விரிவடைந்து செல்கின்றது மற்றும் மனித முகத்துடனான உலகமயமாக்கல் சிந்தனைகள் உலகளாவிய

கலாச்சார பண்பாட்டு ஆக்கத்திறன் அம்சங்கள் மற்றும் போட்டிப்பரீட்சைகளில் வெளிவந்த பரீட்சை வினாக்களுக்கு விடை எழுதி பயிற்சி பெறுதல் மிக முக்கியமாகும்.

கல்விப் பிரச்சினைகள் தொடர்பான விடய ஆய்வு

பாடசாலையின் நிர்வாகம், கல்வி முகாமைத்துவம் தொடர்பான விடய பிரச்சினை ஒன்று தரப்பட்டு அப்பிரச்சினை எவ்வாறு உருவானது, காரணங்கள் எவை? எவ்வாறு அப்பிரச்சினையை அணுகுவது, பிரச்சினையை தீர்ப்பதற்கான முகாமைத்துவ கொள்கைகள் எவை? பிரச்சினைகளை எவ்வாறு

தீர்க்கலாம் என்ற வகையில் இவ்வினாத்தாள் ஒழுங்குப்படுத்தப்பட்டிருக்கும். பிரச்சினை தீர்வுக்கான விடைகளை எழுதும் போது சுற்றறிக்கைகள், நிதிப்பிரமாணங்கள், நிர்வாகப் பிரமாணங்கள், முகாமைத்துவ கோட்பாடுகள் நீதிமன்ற தீர்ப்புகள் ,கல்விச் சட்டங்கள் உதாரணங்களுடன் வழங்க வேண்டும்.

சமூக உறவுகளோடும், உருவாக்கத்தோடும் இணைந்த கல்வி முகாமைத்துவம் சார்ந்த செல் நெறிகள் (Trends Educational Management) இன்று கல்வியியல் துறையில் முதன்மையாக வுள்ளது. கல்விசார் இலக்குகளை வென்றெடுக்க மனிதவள முகாமைத்துவம் வழிக்காட்டுகின்றது. இதில் கல்விப் பிரச்சினை தொடர்பான விடய ஆய்வுகள், அபிவிருத்தி சார் வேலைத்திட்டங்கள், முரண்பாடுகளைத் தீர்த்தல், தலைமைத்துவம், கூட்டுணர்வு, பொறுப்புக்கூறல், ஜனநாயகம் சமூகவுறவுகளை பலப்படுத்தல் என்பவற்றிற்கு வழிகாட்டுகின்றன. உதாரணமாக பிணக்கு முகாமைத்துவம் (Conflict Management) தொடர்பாக ஒரு தலைவர் பின்வரும் தந்திரோபயங்களை பின்பற்றலாம்.

01) Turtle (Withdrawing) - ஆமைத்தன்மை பிரச்சினைக்கு முகம் கொடுக்காது நழுவிக்கொள்ளுதல்

02) Shark(Forcing)- சுறாத்தன்மை அதிகாரத்தைப்பயன்படுத்தி பிணக்கைத் தீர்க்கும் முறை

03) Teddy bear (Smoothing) - டெடிபியர் தன்மை இணக்கமான சமாதானப்படுத்தல்

04) Fox (Compromising) நரித்தந்திரோபய உடன்பாட்டிற்கு கொண்டு வரும் முறை

05) Owl (Confronting) ஆந்தை அணுகுமுறை இரு கட்சிக்கும் வெற்றியைக் கொடுக்கும் வெற்றி —கோட்பாடு

என்ற வகையில் பல முகாமைத்துவ கோட்பாடுகளை பிரயோகித்து உரிய ஆதாரங் களுடன் விடய ஆய்வு வினாக்களுக்கு முறையாக விடையளிக்க வேண்டும் இதற்கு கூடுதலான பயிற்சி அவசியம்.

கிரகித்தல் (Comprehension)

ஒரு வாசகப் பகுதியை படிக்கும் போது அதற்கான அர்த்தம் ஒன்றாகவே இருக்கும் ஆனால் பலர் பலவாறு புரிந்துக்கொள்கின்றனர். ஆனால் பாடசாலை போகின்ற தலைவர் மிகச்சரியாக விடயங்களைப் புரிந்துக்கொள்ள வேண்டும். சொல்பவற்றிலிருந்தும் படிப்பவற்றிலிருந்தும் மெய்க்கருத்தை புரிந்து கொள்ளுதல் கிரகித்தலாகும். இது மூலக் கருத்தை கிரகித்தல் , சுருக்கி கிரகித்தல், விரித்துக் கிரகித்தல், கிரகிக்கும் கூற்றை மாற்றிக் கிரகித்தல் புரிந்துக்கொண்டு தலைப்பிட்டுக் கிரகித்தல் எனப் பல வகைப் படும். இவ்வினாத்தாள் பரீட்சாத்திக்கு சிறிய பந்திகள் கொடுக்கப்படும் அவற்றின் கருத்துக்கள் தொடர்பான மாற்றுக்கூற்றுக்கள், வாசகங்கள் வழங்கப்படும். அதில் ஒன்று அவ்வாசக விடயங்களுக்கு மிகப் பொருத்தமாக இருக்கும். அதனை பரீட்சார்த்தி தெரிவு செய்தல் வேண்டும். குறித்த ஒரு பந்திக்குரிய மெய்ப்பொருளைக் காணல் அல்லது பொருள் கண்டு பிடித்தல் ஒரு பந்தியை கிரகித்து அதற்கு சுருக்க கூற்றை எழுதுதல். தரப்படும் பந்திக்கு ஒரு வரியில் பொருத்தமான தலைப்பிடல் அல்லது பொருள் கண்டுப்பிடித்தல் என்பவை இங்கு முக்கியமாக கொள்ளப்படுகின்றன.

மேலும் தரப்பட்ட பந்தியை ஒரு வாக்கியத்தில் எழுதுதல் தடித்த அல்லது கோடிட்ட எழுத்துள்ள சொற்களை அல்லது சொற்றொடர்களை தரப்பட்ட பந்தியுடன் தொடர்புபடுத்தி விளக்குதல், பந்திக்குப் பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்தல், சுருக்கம் எழுதுதல் இதற்கு கூடுதல் புள்ளிகள் வழங்கப்படும். கேட்கப்பட்ட அளவுக்கு சொற்களை பொருத்தமாக உபயோகித்தல் இங்கு முக்கியம். சுருக்கம் எழுதும் போது அவதானத்துடன் வாசித்து கிரகித்தல் வேண்டும். சொற்களைக் கணித்தல், தேவையற்ற விடயங்கள், உவமை உருவகங்களைத் தவிர்க்க வேண்டும். இவ்வகையில் கிரகித்தல் வினாத்தாளை வெற்றிக்கொள்ள மொழித்தேர்ச்சிப் பயிற்சி,வாசிப்பு, பத்திரிக்கை, சஞ்சிகை, நூல்களின் தலைப்புக்களை அவதானித்தல் அவற்றிற்குப் பொருள் எழுதுதல் எனப் பல்வேறு பயிற்சிகளில் ஈடுபடல் வேண்டும்.

நாட்டின் எதிர்கால சமூகத்தைக் கட்டியெழுப்பும் மாணவர்களை உருவாக்கும் பாடசாலைகளில் உன்னத தலைவர்களாக அதிபர்கள் இருந்தால் எதிர்காலம் சுபீட்சமாகும். சிறந்த அதிபர்களால் மட்டுமே சிறந்த பாடசாலையை உருவாக்க முடியும் என்ற, எண்ணக்கரு இன்று வளர்ந்த நிலையில் இப்போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற கடுமையான பயிற்சி, சுய கற்றல், முயற்சி தேவை இதனூடாக கிடைக்கும் சந்தர்ப்பத்தை பரீட்சார்த்திகள் உரிய முறையில் பயன்படுத்தி வெற்றிக்கொள்ள வேண்டும்.

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!



உலகத்தில் அமைதியும் ஆன்மீக மேம்பாடும் ஏற்படுவதற்காக சுயமுயற்சியின் மூலம் வாழ்க்கையில் முன்னேறிய மகரிசி அவர்கள்

- தியான முறையில் சிறந்ததான எளிய முறைக் குண்டலினி யோகம்
- உடல் உறுப்புக்களை வருத்தாத எளியமுறை உடற்பயிற்சி
- பண்புகளை உயர்த்தும் தற்சோதனை
- உயிர்ச்சக்தியைப் பாதுகாப்பதன் மூலம் வயோதிகத்தைத் தள்ளிப் போடும் சித்தர்கள் கண்ட நெறியான காயகல்ப யோகம்

இவை இணைந்த வாழ்க்கை நெறியைப் போதித்து மனிதகுலம் உய்ய அருள் தொண்டாற்றி வருகிறார்.

* விரும்புவோர் இங்கு வந்து உடற்பயிற்சியும் தவமும் கற்றுக் கொள்ளலாம்.
* காயகல்பம், அகத்தாய்வு முதலிய பயிற்சிகள் ஒவ்வொரு மாதமும் தக்க பேராசிரியர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன.
* தினசரி காலையில் உடற்பயிற்சி கற்றுத் தரப்படுகிறது. மாலையில் கூட்டுத் தவம் நடைபெறுகிறது.

அகவிழி

கிடைக்குமிடங்கள்

பூபாலசிங்கம் புத்தகக்கடை
தரு, கொழும்பு - 11
தொ.பே.இல.: 011-2422321

பூபாலசிங்கம் புத்தகக்கடை
4A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.இல.: 021-2226693

நியூ கேசவன் புக்ஸ்டோல்
52 டன்பார் வீதி, ஹட்டன்
தொ.பே.இல.: 051-2222504,
051-2222977

அறிவாலயம் புத்தகக்கடை
190 B புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம், வவுனியா
தொ.பே.இல.: 024-4920733

இஸ்லாமிக் புத்தக இல்லம்
77, தெமட்டக்கொட வீதி,
கொழும்பு - 09
தொ.பே.இல.: 011-2688102

Easwaran Book Depot
No. 126/1, Colombo Street, Kandy
Tel.: 081-2220820

குமரன் புக் சென்டர்
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா
தொ.பே.இல.: 052-2223416

விழுது - மட்டக்களப்பு
இல 22, கலைமகள் வீதி,
நெச்சிமுனை, மட்டக்களப்பு
தொ.பே.இல - 065 - 2222500

விழுது - திருகோணமலை
81யு, ராஜவரோதயம் வீதி,
திருகோணமலை
தொ.பே.இல - 026 2224941

பூபாலசிங்கம் புத்தகக்கடை
309-A 2/3 காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு
தொ.பே.இல.: 4515775, 2504266

அல்குரசி புத்தக நிலையம்
28, 1/2, புகையிரத வீதி, மாத்தளை
தொ.பே.இல.: 066-3662228

அறிவுநதி புத்தகசாலை
இல 06, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
தொ.பே.இல.: 077 6737535

Zeen Baby Care
121B, Arm Mill Road,
Addalaichenai -01
Tel.: 077 3651138

புக் லாப்
20, 22 சேர் பொன் ராமநாதன் வீதி,
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290,

அன்பு ஸ்டோர்ஸ்
14 பிரதான வீதி, கல்முனை
தொ.பே.இல.: 067-2229540

பரணி புத்தகக் கூடம்
நெல்லியடி ம.ம வீதி, நெல்லியடி
தொ.பே.இல - 077 5991949

விழுது - புத்தளம்
இல 24801 கொழும்பு வீதி,
தில்லையடி, புத்தளம்
தொ.பே.இல - 032 - 5740094

விழுது - யாழ் மாவட்டம்
இல 23, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்
தொ.பே.இல - 021 2229866

ISSN 1800-1246
9771800 124005

Printed by
RST Enterprises (Pvt) Ltd.
114, W.A. Silva Mawatha, Colombo 06.
rst_enterprises@yahoo.com

Registered in the Department of Posts of Sri Lanka under QD/49/News/2015